Vol.2, Issue 2 | Annual Subscription ₹ 420

@NewsRotary /RotaryNewsIndia

ஜூலை 2019

# ரோட்டரி நியூஸ்




Rotary

புதிய RI தலைவர்
மார்க் மலோனி
மற்றும் அவரது
மனைவி கேய்.

# ரோட்டரியின் சில புதிய பதவியேற்புகள்



ரக்ஷிதா பகத்

RIDEs பரத் பாண்ட்யா, கமல் சங்வி ஹாம்பர்க் மாநாட்டில் RI இயக்குனர்களாக அறிமுகப்படுத்தப்படுகின்றனர். மாதவி பாண்ட்யா மற்றும் சோனல் சங்வி உடன் உள்ளனர்.

RID C பாஸ்கர், RIDEs கமல் சங்வி மற்றும் பரத் பாண்ட்யா அவர்களை RI போர்டிற்கு அறிமுகப்படுத்துகிறார்.

கீழே: TRF அறங்காவலர்களாக PRIP KR ரவீந்திரன் மற்றும் குலாம் வஹன்வதி அறிமுகமாகின்றனர்.

Courtesy: பரத் பாண்ட்யா





ரக்ஷிதா பகத்

# உள்ளே


**12** **கடந்த காலம் என்ற முன்னுரை**
உங்கள் புதிய ரோட்டரி தலைவரைத் தெரிந்துகொள்ளுங்கள்.

**22** **ரோட்டரியின் குழுப்பரிமாற்றத் திட்டம் வாழ்வை மேம்படுத்துவதற்கான அனுபவம்: குலாம் வஹன்வதி**
அறங்காவலர் குலாம் வாஹன்வதி பற்றி மேலும் தெரிந்துகொள்ளுங்கள்.

**30** **ரோட்டரி உலகம் பின்பற்றும் வகையில் உங்களது மண்டலம் செயல்படுகிறது: தெற்காசிய ரோட்டரிக்கு பேரி ரஸ்ஸின் பாராட்டு**
ஹேம்பர்க்கில் தெற்காசிய வரவேற்பு.

**42** **ஹேம்பர்க்: ரோட்டரி மாநாட்டின் சில நினைவுகள்**
ரொட்டேரியன்களுக்கு புதிய சிந்தனைகளையும் யோசனைகளையும் வழங்கிய ஹேம்பர்க் 110வது ரோட்டரி மாநாடு.

**58** **பூமியைப் பசுமையாக்கும் கர்நாடக ரோட்டரி அமைப்பினர்**
பெங்களூரில் ஒரு கோடி மரக்கன்று நடும் இலட்சிய திட்டத்தை பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் சங்கம் தொடங்கியது.

**64** **உங்கள் ஆளுநர்களுடன் ஒரு சந்திப்பு**
உங்கள் ஆளுநர்களையும் உங்கள் மாவட்டத்திற்கு அவர்களின் திட்டங்களையும் தெரிந்துகொள்ளுங்கள்.

**72** **சொல்விளையாட்டு மருந்து!**
குறுக்கெழுத்துப் போட்டி, சுடோகு மற்றும் வார்த்தை விளையாட்டு போன்ற விளையாட்டுக்கள் மனதைக் கூர்மையாகவும் செயலூக்கம் கொண்டதாகவும் வைக்கிறது.

**78** **உடற்பயிற்சியில் மனம்-உடல் தொடர்பு**
சரியாக உடற்பயிற்சி செய்ய உடலை மனம் பணிக்கிறது, அதேவேளையில் உடற்பயிற்சி மூளையின் செயல்பாட்டை அதிகரிக்கிறது.




















**அட்டை படம்: RI தலைவர் மார்க் மலோனி மற்றும் அவரது மனைவி கேய்.**

**படம்: கேரி நார்த்டன், தி ரொட்டேரியன்**

## நமது புதிய RI இயக்குனர்களைத் தெரிந்துகொள்ளுதல்

*சுந்தராவை பள்ளிக்கு அனுப்புதல் குறித்த இதழாசிரியரின் செய்தி பொருத்தமாகவும் கல்வியாண்டு ஆரம்பித்திருப்பதால், சரியான சமயத்தில் எழுதப்பட்டு வாசிக்க சுவாரஸ்யமாக இருந்தது, அவள் அடைந்த உதவியும் ஊக்கமும் பாராட்டுக்குரியது.*

*மேலும், புதிய RI இயக்குனர்களின் நேர்காணல்களை வாசிக்கப் பெருமையாக இருந்தது. பிரிவு உபசார செய்தி குறித்து RI தலைவர் பேரி ராஸினின் உரை சுருக்கமாக இருந்தாலும் உத்வேகம் கொண்டதாகவும், ரொட்டேரியன்கள் மற்றும் ரோட்டரி சமாதான தூதுவர்கள் செய்யும் சேவைகளைப் பற்றிய விவரங்களைத் தந்ததால் பயனுள்ள விதத்திலும் இருந்தது. RID C பாஸ்கரின் பிரிவு உபசார செய்தி அவர் காலத்தில் ரோட்டரிக்கு சேவை செய்த தன் திருப்தியை வெளிக்காட்டியது.*




*மனித வாழ்வின் மூன்று நிலைகளான-கற்றல், சம்பாதித்தல், திருப்பிக்கொடுத்தல்-குறித்த RIDE பரத் பாண்டியாவின் சிந்தனைகள் அபாரமாக இருந்தது. பள்ளி குழந்தைகளுக்கான இலவச உடல்நல பரிசோதனை உட்பட எதிர்காலத்திற்கான அவரின் இலட்சிய நோக்கம் ஒரு புதுவித யோசனை, இதனை முன்னெடுத்துச் செல்லவேண்டும்.*

*இப்போது மண்டலங்களின் பிரச்சனைகளை மிகத் திறமையாகக் கையாளக்கூடிய இரண்டு RI இயக்குனர்கள் இந்தியாவில் இருக்கிறார்கள் என்பதை அறிய எங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. RIDE கமல் சங்வி உடனான நேர்காணல் அருமையாக இருந்தது மற்றும் ரோட்டரி ஒரு நோபல் பரிசை பெறவேண்டும் என்கிற அவரின் இலட்சிய நோக்கம், அனைத்து ரொட்டேரியன்களால் பாராட்டப்பட வேண்டியது. கடந்த 54 வருடங்களாக RC மெட்ராஸ் சங்க ரொட்டேரியனாக இருந்த கிறிஸ் சித்தலே அவர்களுக்கு என் வீரவணக்கம்.*

*அனைத்து கட்டுரைகளும் நன்றாக இருந்தது மற்றும் வண்ணமயமான புகைப் படங்களுடன் கூடிய சங்கத்தின் செயல்பாடுகள் (சங்க சேவைகள்) மிக அருமையாக இருந்தது.*

*M T பிலிப், RC திருவனந்தபுரம்*
*சப்அர்பன் — RID 3211*

*இரண்டு புதிய RI இயக்குநர்கள் ரோட்டரியில் தங்களின் பங்கினை அதிகார நிலையாக மட்டுமல்லாமல் பொறுப்பாகவும் பார்ப்பது போல, ஒவ்வொரு சங்கத் தலைவரும் மாவட்ட கவர்னரும் இதையே கடைபிடிக்க விரும்புகிறேன். ஆளும் தலைவர்கள் அல்லது ஆளும் ஆளுநர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்வதை விட பணி செய்யும் தலைவர்கள் மற்றும் ஆளுநர்கள் போல அவர்கள் செயல்படவேண்டும். தங்களைப் பற்றி விளம்பரப்படுத்தினாலும் கூட அவர்களின் மனநிலை பணிவாக இருக்கவேண்டும்.*

*நன் நாராயணன்*
*RC மதுரை வெஸ்ட் — RID 3000*

புதிய தலைமுறை ரொட்டேரியன்களுக்கு ஒரு முன்னுதாரணமான ரொட்டேரியன் கிரிஸ் சித்தலே அவர்களுக்கு என் வீர வணக்கம். அவரது பெருமையினை ரோட்டரி நியூஸ் இதழில் வெளிப்படுத்தியது சரியான நேரத்தில் அவருக்கு மரியாதை செலுத்துவதாக இருந்தது. தொழிற்பயிற்சி மையங்கள் அமைப்பது போன்ற சேவைகளைத் தவிர போலியோ ஒழிப்பில் அவருடைய பங்களிப்பை ஒட்டுமொத்த ரோட்டரி உலகம் என்றென்றும் நினைவுகூறும். எல்லா வற்றையும் விட, ராஜேந்திர சபூ கூறியது போல, மாவட்ட ஆளுநர் பதவிக்கு போட்டியிடச் சொன்னபோது அவர் தன்மையாக மறுத்ததை அறியும் போது மனதைத் தொடுவதாக இருந்தது. இதுபோன்று ‘சுயநலமற்ற சேவையினை’ செய்து அதிகாரத்தைத் தவிர்க்கும் ரொட்டேரியன்களை நம்மிடம் கண்டறிவது மிகக்கடினம்.

Dr N R U K கர்த்தா
RC திருவனந்தபுரம்
சப்அர்பன் — RID 3211

ஒரு புதிய ரோட்டரி ஆண்டு ஜூலையில் தொடங்குகிறது. பின்னோக்கிப் பார்த்தால், கடந்த வருடத்தில் ரோட்டரி நியூஸ் இதழில் உத்வேகம் கொண்ட கட்டுரைகளும் செய்திகளும் ஒவ்வொரு மாதத்தில் அற்புதமாக இருந்திருக்கிறது.

ஜூன் மாத இதழில், மிகப்பெரிய நன்றி என்ற RID C பாஸ்கரின் செய்தி அருமையாக இருந்தது. தொடர்ந்து என் தேடலை விரிவுபடுத்துகிறது ரோட்டரி என்ற RIDE பரத் பாண்டியா அவர்களுடனான ரஷீதா பகத்தின் நேர்காணல்

நன்றாக இருந்தது. V முத்துக்குமரன் எழுதிய தமிழ்நாட்டில் ஒரு ரொட்டேரியனின் கனவு பழங்குடியினருக்கான ரூ.8 கோடி மதிப்புள்ள வீட்டுத் திட்டப்பணியை உருவாக்குகிறது என்ற கட்டுரை அனைத்து ரொட்டேரியன்களுக்கும் ஊக்கம் தருவதாக இருந்தது. உயிர் பெற்றது ஒரு கிராமம் என்ற கட்டுரை அருமையாக எழுதப்பட்டது.

டேனியல் சித்திலபில்லி
RC கலூர் — RID 3201

நமது ஜனநாயக செயல்பாட்டைக் கொண்டாடுவோம் என்பது குறித்த மே மாத தலையங்கம் உண்மையாகவும் உயிரோட்டமாகவும் இருந்தது.

அருண் குமார் டேஷ்
RC பரிபடா — RID 3262

மார்க் மலோனி மற்றும் அவரது மனைவி கேய் ஆகியோரின் புகைப்படம் கொண்ட மே மாத இதழின் அட்டைப் படம் மனதில் பதியும் படி இருந்தது. ரஷீதா பகத் எழுதிய ஒரு மகிழ்ச்சியான ரொட்டேரியனாக இருந்து பொறுப்பானவராக மாறிய இயக்குனர் என்ற கட்டுரை RID C பாஸ்கர் கூறிய படி, எப்படி ஒரு சாதாரண மனிதனின் வாழ்வை ரோட்டரி உருமாற்றுகிறது என்பதை நமக்குத் தெரிவித்தது.

மடகஸ்கரில் உள்ள நோயாளிகளுக்கு இந்திய மருத்துவர்கள் சிகிச்சை அளித்து, அவர்களின் வாழ்க்கையை மாற்றுவது, எல்லை தாண்டிய சேவை போன்றவற்றை அறியும் போது மனதை உருக்குவதாக இருக்கிறது. இந்த மருத்துவ திட்டத்தில் RI தலைவர் பேரி ராஸின் தன் சேவையை ஒரு தன்னார்வலராக வழங்கியதைப் படிக்க அருமையாக இருந்தது.

நவீன் R கார்க்
RC சுணம் — RID 3090

### சரியான சமயத்தில் வந்த கட்டுரை

மே மாத இதழில் ஜெய்ஸ்ரீ எழுதிய ரோட்டரியில் 31 ஆண்டுகளாக ஜொலிக்கும் மகளிர் என்ற கட்டுரை சரியான சமயத்தில் வெளிவந்தது 1990 ஆம் ஆண்டு நான் RC ரூர்கேலா சங்கத்தில் முதல் பெண் உறுப்பினராக இணைந்தேன். அப்போது எங்கள் மாவட்டத்தில் பெண் ரொட்டேரியன்கள் வெகு சிலரே இருந்தனர். ஒரு மூன்றாம் தலைமுறை முன்னாள் தலைவராக (என் தாத்தா மற்றும் அப்பா இருவரும் சங்கத்தலைவர்கள்) நான் ரோட்டரியை வெகு இயல்பாக எடுத்துக் கொண்டேன். எனது 29-வருட ரோட்டரி சேவையில் நான் கவனித்த விஷயங்கள் என்றால், திட்டப்பணிகளுக்கு பச்சாதாபம், கருணை, புதிய யோசனைகள் மற்றும் பொறுமை போன்றவற்றை வழங்குவதால் பெண்கள் அற்புதமான ரொட்டேரியன்களை உருவாக்குகிறார்கள். பாலின ஒற்றுமை இப்போது RI நன்றாக ஊக்கப்படுத்தப்படுகிறது.

சமீபத்தில் கொச்சியில் நடந்து முடிந்த உத்வேகமான 2019 மாநாட்டைப் பற்றித் தெரிந்திருந்தால், கட்டாயம் அதில் கலந்துகொண்டிருப்பேன். என் சங்கத்தில் பெண்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள், மேலும் RI வழிகாட்டல்களின் படி நிறையத் திட்டப்பணிகளை செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஒரு RLI பட்டதாரியாக, ரோட்டரி தலைமைப்பண்பு தொடர்பாக நான் உரையாற்றுகையில் பெண் உறுப்பினர்களை அதிகப்படுத்துவதை எப்போதும் அழுத்திச் சொல்வேன். ஆனால் இந்தியா முழுவதும் நான் பயணம் செய்து ரோட்டரிச் சங்க கூட்டங்களில் கலந்துகொள்ளும் போது, பெண் உறுப்பினர்களே இல்லாத சங்கங்களை இன்றும் பார்க்கிறேன். பெண்கள் முன்வந்து இந்த வியக்கத்தக்க அமைப்பை வலிமைபடுத்த இணைவார்கள் என்று நம்புகிறேன்.

அஞ்சனா மித்ரா
RC ரூர்கேலா ஸ்டீல் சிட்டி — RID 3261

ஏப்ரல் மாதஇதழ் அற்புதமான கட்டுரைகளின் தொகுப்புடன் வாசிக்க சுவாரஸ்யமாக இருந்தது. இந்த இதழ் குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகள் தொடர்பான ஆரோக்கியம் மற்றும் அவர்களின் பொதுநலன் குறித்த பிரச்சனைகளுக்கு மிகவும் பயனுள்ளவகையில் இருக்கிறது.

சுதிர் குமார் கார்க்
RC முஜாஃபர் நகர் — RID 3100

தங்கள் பிப்ரவரி மாதத்தில் தலையங்க செய்தியான பெண்குழந்தைகளுக்கு கல்வி பற்றிய கட்டுரை மிகவும் உண்மையானது. நாம் பெண் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப ஊக்கப்படுத்துவது மல்லாமல், பள்ளிகளையும் அவர்களுக்கு சரியானதாக இருக்குமாறு பார்த்துக்கொள்வது மிக முக்கியம்.

அஸ்வினி கர்
RC புபனேஷ்வர் மெடோஸ் — RID 3262

*உங்களுடைய கருத்துக்களை நாங்கள் வரவேற்கிறோம். ஆசிரியருக்கு எழுதுங்கள்:*
*rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com*

To revert to **English or Hindi** version please mail to us at *rotarynews@rosaonline.org*.



# ரோட்டரியில் யாரும் தனித்தீவு இல்லை

*அன்பிற்குரிய ரொட்டேரியன்கள் மற்றும்
ரோட்டரி குடும்பத்தினர்களே!*

பயணத்தை நேசிப்பவன் நான்! ஒரு இடத்தை விட்டு இன்னொரு இடத்திற்குச் செல்லும் ஒரு சாதாரண செயல்பாட்டைக் கூட ரசிப்பவன். ஆனால் கடந்த வருடம் எனக்கும் என் மனைவி கேய்யிற்கும் ஒரு அனுபவம் கிடைத்தது, இது மிகவும் உற்சாகமிக்க ஒரு யாத்ரீகனின் நம்பிக்கையைக்கூட பாதிக்கக்கூடியது. ஒரு விமானநிலையத்தில் சுமார் ஆறு மணிநேரம் நாங்கள் காத்திருக்க வேண்டிய சூழல். இன்னும் நாங்கள் பயணிக்க வேண்டியிருந்தது, அதற்கு முந்தைய இரவு ஒரு விடுதியில் தூங்கி எழுந்தோம். அது மோசமான நாள்.


நியூயார்க் சிட்டி ஜான் F கென்னடி சர்வதேச விமானநிலையத்தில் நாங்கள் காத்திருக்கையில், நானும் கேய்யும் எங்களை சுற்றி பார்த்தோம். நிலையத்தின் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கம், பிறகு பின்பக்கம் சென்று, ஒவ்வொரு வாசலிலும் தங்களின் விமானங்களுக்குக் காத்திருக்கும் ஒவ்வொரு மக்கள் குழுக்கள் என அனைத்தையும் பார்த்தோம்.

ஒவ்வொரு வாசலும் மனித இயல்பின் தனித்தீவாக இருக்கிறது. மக்கள் கூட்டத்தின் மையத்தில் நாங்கள் நடந்த போது, ஒரு கூட்டத்தோடு கூட்டமாக நடந்து கொண்டிருந்தோம். ஆனால் எங்கள் இருக்கைகளுக்குத் திரும்பிய பிறகு, எங்கள் அந்த சூழலை விட்டு விலகி, ஒரு தனித்தீவில் தரையிறங்குவது போல் இருந்தது.

அப்பொழுது எங்களுக்குள் ஒரு சிந்தனை. “பல்வேறு மக்கள், பல்வேறு நாட்டைச்சேர்ந்த இவர்கள் அனைவரும் இப்போது ஒரே இடத்தில் இருக்கிறார்கள். ரோட்டரியில் இருப்பது போலவே!’’ ஆனால் ஒரு வாசலைக் கடந்து மற்றொரு வாசலுக்கு நடந்து செல்கையில் வேறொன்றை உணர ஆரம்பித்தேன். இது ரோட்டரியில் இருப்பது போலவே இல்லை. ஏனெனில் இந்த கூட்டத்தில் இருக்கும் ஒவ்வொருவரும் ஒரு தனித்தீவை நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். தாய்பெய் நகரத்திற்குச் செல்பவர்கள் அவர்களுக்குள் மட்டுமே பேசுவர். ஆனால் அவர்கள் கைரோ அல்லது லகோஸ் செல்பவர்களுடன் பேசுவதில்லை.

இது ரோட்டரியுடன் முரண்படுகிறது. ஆழமாகவும், அர்த்தமுள்ள விதத்திலும் நமது வேறுபாடுகளைத் தாண்டி ரோட்டரி ஒருவரை மற்றொருவருடன் இணைக்கிறது. இது இதுவரை நாம் சந்தித்தே இருக்காத, இதுவரை நாம் நினைத்துப் பார்க்காத அளவுக்கு நம்மைப்போலவே இருப்பவர்களுடன் இணைக்கிறது. இது நம்மை, சமூகங்கள், தொழில்முறை வாய்ப்புகள் மற்றும் நமது உதவியை எதிர்பார்ப்பவர்கள் போன்றோருடன் இணைக்கிறது.

இணைப்பு ஒன்று தான் ரோட்டரி அனுபவத்தை JFK விமானநிலையத்தின் கூடத்தில் நடப்பதிலிருந்து மிக வேறுபடுத்திக் காட்டுகிறது. ரோட்டரியில் யாரும் தனித்தீவு இல்லை. ரோட்டரியில் இருக்கும் அனைவரும், யாராக இருந்தாலும், எந்த பகுதியைச் சேர்ந்தவராகவும், என்ன மொழி பேசுபவராகவோ அல்லது எந்த பாரம்பரியத்தைக் கடைபிடிப்பவராக இருந்தாலும் சரி, நாம் அனைவரும் ஒன்றாக இருக்கிறோம். ரோட்டரி உலகத்தை இணைப்பது போல, தயவுசெய்து உங்கள் சக ரொட்டேரியன்களையும் இந்தப் பயணத்தில் இணைத்துவிடுங்கள்.



**மார்க் டேனியல் மலோனி**
RI தலைவர்



# இளைஞர்களை அரவணைத்த ஹேம்பர்க் மாநாடு

RI அமைப்பு இளைஞர்களுக்கு உற்சாகமும் ஊக்கமும் அளிக்கிறதா, அவர்களது தலைமையை அங்கீகரிக்கிறதா, ரோட்டராக்ட் உறுப்பினரை RI அமைப்பில் இணைத்துக் கொண்டு பயணம் நடைபெறுகிறதா என்று கேட்டால், ஆம் என்று உறுதிபடக் கூறுவதற்கு ஹேம்பர்க் மாநாடு ஒரு சரியான சாட்சியாக அமைந்தது. இந்த உலகை பன்முகத் தன்மையாக மாற்றி மேம்படுத்துவதற்கான ரோட்டரியின் முயற்சியில் ரோட்டராக்ட் இளைஞர்கள் எவ்வளவு முக்கியமானவர்கள் என்பதை RI தலைவர் பேரி ரஸ்ஸின், தலைவராகப் பொறுப்பேற்க இருக்கும் மார்க் மலோனி, அறங்காவல் குழுத் தலைவர் ப்ரெண்டா க்ரெஸ்ஸி உள்பட ஒவ்வொரு மூத்த தலைவரும் தங்களது உரைகளில் உறுதிப்படுத்தினர்.

ஹேம்பர்க் மாநாட்டின் தொடக்க நிகழ்வில் மட்டுமல்ல, அனைத்து அமர்வுகள், நிகழ்வுகளில் எல்லாம் இளைஞர்கள் பெரிய பங்களிப்பைச் செலுத்தியதை RI தலைவர் ரஸ்ஸினும் மாநாட்டு அமைப்பு உறுதி செய்தனர்.

ஒரு குழந்தைக்கு போலியோ சொட்டு மருந்து செலுத்து வதைப் போன்ற ஓவியத்தை வரைந்து இளம் கலைஞரான ஜமால் ரோலி அசத்தினார். அந்த ஓவியம் விழாவிலேயே ஏலத்திற்கு விற்பனையானது. சிரியா போரினால் பாதிக்கப்பட்டு, அகதிகளாக ஜெர்மனியில் குடியேறிய ஆயிரக்கணக்கான அகதிகளுக்கு ரோட்டரியின் இளம் Dr பியா ஸ்கராபிஸ்-க்வெர்ஃபெல்ட் அவர்களுக்கு, குறிப்பாகக் குழந்தைகளுக்கு மருத்துவ, நிவாரண உதவிகளை அளிப்பதற்காக தன்னார்வத் தொண்டு மருத்துவர்களை ஒருங்கிணைத்து, மருத்துவ சிகிச்சை களை அளித்தார். ஹேம்பர்க் மாநாடு அவரைப் பெரிதும் பாராட்டியது.

மாநாட்டை ஒட்டி, இந்தியா, இலங்கை, நேபாளம், வங்காள தேசம், பாகிஸ்தான் ஆகிய தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த வரவேற்புக் குழுவின் கூட்டத்தில் பேசிய RI தலைவர் ரஸ்ஸின், இந்தியா ரோட்டரி உலகுக்கே வழிகாட்டி விளக்காகத் திகழ்கிறது என்று பாராட்டிப் பேசினார்.

தெற்காசிய பகுதியிடம் RI நிறைய எதிர்பார்க்கிறது. நிறைய விருப்பங்களைக் கொண்டுள்ளது. அவையெல்லாம் RI தலைவர், முன்னாள் தலைவர், இயக்குநர்கள், அறங்காவலர்கள் ஆகியோருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் காண முடிந்தது.

ரஸ்ஸின் பாராட்டுத் தெரிவிப்பது தெற்காசிய ரோட்டேரியன்களுக்கு இது ஒரு பெருமைக்குரிய நிகழ்வாகும். நீங்கள் செய்யும் பணிகளை எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம். தெற்காசிய நாடுகளின் ரோட்டரி அமைப்பு உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரிப்பது மட்டுமல்ல, TRFக்கு நன்கொடை அளிப்பதிலும் முதலிடம் வகிப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. உங்களால் அது முடியும். உங்களுக்குத் தாராள மனம் உண்டு. உற்சாகம் உண்டு. உலகையே ஈர்க்கும் வகையில் திறமை உண்டு என்று அவர் குறிப்பிட்டார்.

ஆனால், போலியோ ஒழிப்பின் இறுதிக் கட்டத்தை முழுமையாகச் செயல்படுத்தியாக வேண்டும். நைஜீரியா போலியோ இல்லாத நாடாக அறிவிக்கப்படும் நிலையை எட்டிவிட்டது. இந்நிலையில், பாகிஸ்தானும் ஆப்கானிஸ்தானும் சவால்களை எதிர்கொண்டு வருகின்றன. இந்த மண்டலம் போலியோவை ஒழிக்கும் வரையில் போலியோவை முற்றிலும் ஒழிப்பது என்ற ரோட்டரியின் கவனம் வேறு திசையில் செல்லாது. உலகக் குழந்தைகளுக்கு ஒரு வாக்குறுதியை அளித்துவிட்டோம். அதை நிறைவேற்றியாக வேண்டும். நிறைவேற்றுவோம் என்றும் ரஸ்ஸின் குறிப்பிட்டார்.

RI முன்னாள் தலைவர் ராஜேந்திர சாபூ, அவரது மனைவி உஷா ஆகியோரின் இடைவிடாத, அர்ப்பணிப்பு டன் கூடிய பணியை வரவேற்பு நிகழ்ச்சியில் மட்டுமல்ல, மாநாட்டின் ஓர் அமர்விலும் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டது. வியப்புக்குரிய பணியைத் தொடர்ந்து ஆற்றிவரும் சாபூவுக்கும் உஷாவுக்கும் சிறப்பான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய ரோட்டரி ஆண்டு தொடங்கும் இத்தருணத்தில், உங்களை ஊக்கப்படுத்த நிறைய எதிர்பார்ப்புகளும், சவால்களும் பெரிதாக வளர்கின்றன. ஆனால், நீங்கள் செய்யும் ஒவ்வொரு மனிதாபிமான சேவையும் அந்த சவால்களை பலவீனமாக்குபவை.

ரஷீதா பகத்

## Governors Council

| | |
|---|---|
| RI Dist 2981 | DG N Manimaran |
| RI Dist 2982 | DG Natesan A K |
| RI Dist 3000 | DG Dr A Zameer Pasha |
| RI Dist 3011 | DG Suresh Bhasin |
| RI Dist 3012 | DG Deepak Gupta |
| RI Dist 3020 | DG M Veerabhadra Reddy |
| RI Dist 3030 | DG Rajendra Madhukar Bhamre |
| RI Dist 3040 | DG Dhiran Datta |
| RI Dist 3053 | DG Harish Kumar Gaur |
| RI Dist 3054 | DG Bina Ashish Desai |
| RI Dist 3060 | DG Anish Shah |
| RI Dist 3070 | DG Sunil Nagpal |
| RI Dist 3080 | DG Jitendra Dhingra |
| RI Dist 3090 | DG Rajeev Garg |
| RI Dist 3100 | DG Hari Gupta |
| RI Dist 3110 | DG Kishor Katru |
| RI Dist 3120 | DG Sanjay Agrawal |
| RI Dist 3131 | DG Ravee Dhotre |
| RI Dist 3132 | DG Suhas Laxmanrao Vaidya |
| RI Dist 3141 | DG Harjit Singh Talwar |
| RI Dist 3142 | DG Dr Mohan Chandavarkar |
| RI Dist 3150 | DG Pandi Sivannarayana Rao |
| RI Dist 3160 | DG Nayan S Patil |
| RI Dist 3170 | DG Dr Girish R Masurkar |
| RI Dist 3181 | DG Joseph Mathew |
| RI Dist 3182 | DG Ramesh B N |
| RI Dist 3190 | DG Dr Sameer Hariani |
| RI Dist 3201 | DG R Madhav Chandran |
| RI Dist 3202 | DG A Karthikeyan |
| RI Dist 3211 | DG Shirish Kesavan |
| RI Dist 3212 | DG S Sheik Saleem |
| RI Dist 3231 | DG Sridar Balaraman |
| RI Dist 3232 | DG G Chandramohan |
| RI Dist 3240 | DG Dr Debasish Das |
| RI Dist 3250 | DG Gopal Khemka |
| RI Dist 3261 | DG Ranjeet S Saini |
| RI Dist 3262 | DG Debasish Mishra |
| RI Dist 3291 | DG Ajay Agarwal |



Printed by PT Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by PT Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.



The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced, but with permission from RNT.


# Message from



## நேருக்கு நேர்

ஒரு பாதையில் நம்மை வழிநடத்திச் செல்பவரை வழிகாட்டி என்று குறிப்பிடுவோம். அந்த வகையில் 2019-20ம் ஆண்டில் ரோட்டரி உறுப்பினர்களான நாமெல்லோரும் வழிகாட்டிகள் ஆவோம்.

இன்றைக்கு உலகத்துக்கு ரோட்டரியின் பணி இன்றியமையாதது. ரோட்டரி உறுப்பினர்களான நாம் தேவைகளை ஈடு செய்ய, சவால்களை எதிர்கொள்ள முடியும். ரோட்டரியை வளர்ப்போம், உறுப்பினர் வளர்ச்சி, தலைமைப் பண்பு மற்றும் சேவை ஆகியவற்றின் மூலம் உலகில் நாம் இணையலாம். அதே சமயம் நாம் குடும்பத்தின் மீதும் கவனம் செலுத்த வேண்டும். குடும்பத்தின் நலனைப் புறக்கணிக்காமல், குடும்பத்துடன் இணைந்தே ரோட்டரியின் வளர்ச்சி இருக்க வேண்டும்.

பணிகள் எங்கே செய்யப்படுகின்றனவோ, அங்கே ரோட்டரி சங்கங்கள் இருக்கும். ரோட்டரியின் உண்மையான பலம் ரோட்டரி அமைப்பினர் தங்களது சங்கங்களுக்கும் சமூகத்திற்கும் உண்மையாக உழைப்பதில்தான் அமைந்துள்ளது. நீங்கள் ஒவ்வொருவரும் தங்களால் ஆன பணிகளைச் சிறந்த வகையில் 2019-20ம் ஆண்டும் செய்வீர்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.


அன்போடு செயல்படுங்கள்: ஒரு முறை ரோட்டரி உதவியில் கண் புரை (காடராக்ட்) அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட ஒரு மூதாட்டி தனது பேத்தியை முதல் முறையாக கண்களால் கண்டதும் குதூகலமாகச் சத்தம் போட்டது நினைவு இருக்கிறது.

RI அமைப்பின் இயக்குநர் பதவியிலிருந்து விடை பெறும் C பாஸ்கர் பாராட்டுக்குரியவர். 2017-19ம் ஆண்டில் அவரின் சேவைகள் பெரிதும் போற்றத் தக்கவை. RI இயக்குநராகப் பொறுப்பேற்கும் கமல் சங்வியுடன் 2019-21ம் ஆண்டில் இணைந்து பணியாற்றுவதை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

நமது மண்டலத்தின் ரோட்டரி குடும்பத்தினரை வாழ்த்துவதில் எனது மனைவி மாதவியும் என்னுடன் இணைந்து கொள்கிறார். இந்தப் புதிய பயணம் சிறப்பாக அமைய இறைவனை வேண்டுகிறேன்.

உலகை ரோட்டரி இணைப்பதில் வழிகாட்டிகளாகத் திகழ்வீர்கள்!

ரோட்டரி வாழ்வில் மகிழ்வோடு பயணிப்போம்!



Dr பரத் பாண்ட்யா
RI இயக்குனர், Zones 4 and 7

# RI Directors



## இந்திய ரோட்டரியின் நூற்றாண்டைக் கொண்டாடுவோம்

எனது அருமை ரோட்டரியினரே,

நமது உறுப்பினர்கள் சமுதாயத்திற்கு உண்மையான, நீண்டகாலத் தீர்வுகளை அளிப்பது குறித்து நான் பெருமை கொள்கிறேன். கடந்த 110 ஆண்டுகளாக நாம் கலாசாரங்களுக்கு பாலமாக இருக்கிறோம். அமைதி, எழுத்தறிவு, வறுமை ஒழிப்பு ஆகியவற்றுக்கும் தூய்மையான குடிநீர், சுகாதாரம், நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கும் பாடுபடுவதற்காக உலகின் பல பகுதிகளுடன் இணைந்து செயல்படுகிறோம்.

### போலியோ ஒழிப்பு

இந்த உலகில் போலியோ என்ற நோய் முற்றிலுமாக அழிக்கப்படவேண்டும். அதன் இறுதிக் கட்டப் பணிகளுக்கு உங்களை அழைக்கிறேன்.

ரோட்டரியில் உறுப்பினர்களுக்கான புதுமையான மாதிரித் திட்டத்தைச் செயல்படுத்தவேண்டும் என்றும் புதிதாக ரோட்டரி மற்றும் ரோட்டராக்ட் அமைப்புகளை உருவாக்க வேண்டும் என்றும் RI தலைவர் மார்க் மலோனி வலியுறுத்தி வருகிறார். நமது சேவை மேம்படவேண்டும், நமது திட்டங்கள் முறையாகச் செயல்பட்டு பலன் விளைய வேண்டும். அதற்கு முன்னதாக, அதிகமான உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டும். அப்போதுதான் மேலும் சாதனை புரிய முடியும் என்று மலோனி சர்வதேசக் கூட்டத்தில் (International Assembly) வலியுறுத்தியுள்ளார்.

கடந்த காலத்தை விட இனி வரும் காலம் வலிமையாக இருக்கும் என்பதை உறுதி செய்யும் வகையில் ரோட்டரியின் உத்தித் திட்டத்தை நாம் இப்போது வெளியிட்டுள் ளோம். இத்திட்டம் RI, TRF பிணைக்கும் வகையில் உள்ளது.

இந்தியாவில் ரோட்டரி தொடங்கி நூறாண்டு நிறைவடைகிறது. இந்திய ரோட்டரி அமைப்பினர் அற்புதமான சேவைகளைப் புரிவதற்கு உற்சாகமும் ஊக்கமும் பெற்றுள்ளனர். இந்தியாவில் ரோட்டரியின் அனைத்து நிலைகளிலும் அதன் உச்சத்தை எட்ட வேண்டும். உறுப்பினர்கள் எண்ணிக்கையில் நீடித்த வளர்ச்சி காண வேண்டும். TRFக் கொடை அளிப்பதில் எழுச்சியைக் காண வேண்டும்.

மாவட்ட ஆளுநர்கள் ஏற்கெனவே உயர்ந்த இலக்குகளை நிர்ணயித்துள்ளார். ஆனால், ரோட்டரி சங்க அளவில்தான் உண்மையான பணி நடைபெறும். இந்தியாவில் ரோட்டரியின் நூற்றாண்டை நீங்கள் ஒவ்வொருவரும் மிகச் சிறந்ததாக மாற்றுங்கள். இந்தியா ஒரு ஜொலிக்கும் நட்சத்திரம் என்று ரோட்டரி உலகுக்குக் காட்டுவதற்கு இந்த ஆண்டு ஒரு நல்ல வாய்ப்பாகும்.



**கமல் சங்வி**
RI இயக்குனர், Zones 5 and 6


## Board of Permanent Trustees & Executive Committee

| | |
|---|---|
| PRIP Rajendra K Saboo | RI Dist 3080 |
| PRIP Kalyan Banerjee | RI Dist 3060 |
| PRID Sudarshan Agarwal | RI Dist 3011 |
| PRID Panduranga Setty | RI Dist 3190 |
| PRID Sushil Gupta | RI Dist 3011 |
| PRID Ashok Mahajan | RI Dist 3141 |
| PRID Yash Pal Das | RI Dist 3080 |
| PRID Shekhar Mehta | RI Dist 3291 |
| PRID P T Prabhakar | RI Dist 3232 |
| PRID Dr Manoj D Desai | RI Dist 3060 |
| PRID C Basker | RI Dist 3000 |
| TRF Trustee Gulam A Vahanvaty | RI Dist 3141 |
| RID Dr Bharat Pandya | RI Dist 3141 |
| RID Kamal Sanghvi | RI Dist 3250 |

**Executive Committee Members (2019–20)**

| | |
|---|---|
| DG Deepak Gupta<br>Chair – Governors Council | RI Dist 3012 |
| DG Nayan Patil<br>Secretary – Governors Council | RI Dist 3160 |
| DG Dhiran Datta<br>Secretary – Executive Committee | RI Dist 3040 |
| DG Ajay Agarwal<br>Treasurer – Executive Committee | RI Dist 3291 |
| DG Rajendra Madhukar Bhamre<br>Member – Advisory Committee | RI Dist 3030 |



**ROTARY NEWS / ROTARY SAMACHAR**

**Editor**
Rasheeda Bhagat

**Senior Assistant Editor**
Jaishree Padmanabhan

**ROTARY NEWS / ROTARY SAMACHAR**

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers,
34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India.
Phone : 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org
Website :www.rotarynewsonline.org

# District Wise TRF Contributions as on May 2019

(in US Dollars)

| District Number | APF | PolioPlus | Other Restricted | Endowment Fund | Total Contributions | EREY Donors (in numbers) | EREY % |
|---|---|---|---|---|---|---|---|
| **India** | | | | | | | |
| 2981 | 80,533 | 20,461 | 0 | 18,000 | 118,993 | 314 | 6.91 |
| 2982 | 56,729 | 7,294 | 1,661 | 243 | 65,927 | 312 | 10.84 |
| 3000 | 22,571 | 4,133 | 292,516 | 49,995 | 369,215 | 30 | 0.61 |
| 3011 | 150,296 | 5,958 | 240,240 | 47,930 | 444,423 | 173 | 5.21 |
| 3012 | 173,003 | 1,490 | 341,795 | 8,800 | 525,088 | 245 | 7.26 |
| 3020 | 25,021 | 82,669 | 2,625 | 9,250 | 119,565 | 87 | 2.29 |
| 3030 | 31,082 | 29 | 0 | 5,000 | 36,111 | 12 | 0.26 |
| 3040 | 2,880 | 0 | 51,276 | 0 | 54,156 | 6 | 0.29 |
| 3053 | 131,890 | 1,979 | 12,167 | 0 | 146,035 | 122 | 4.43 |
| 3054 | (14,100) | 510 | 136,010 | 0 | 122,420 | 44 | 0.76 |
| 3060 | 94,123 | 78,433 | 209,141 | 210,895 | 592,592 | 1,124 | 27.31 |
| 3070 | 123,764 | 315 | 15,073 | 0 | 139,152 | 517 | 17.94 |
| 3080 | 87,617 | 20,334 | 45,671 | 5,000 | 158,622 | 124 | 3.95 |
| 3090 | 50,894 | 29 | 0 | 0 | 50,922 | 149 | 7.39 |
| 3100 | 22,510 | 475 | 0 | 0 | 22,985 | 84 | 5.05 |
| 3110 | 45,340 | 3,127 | 34,863 | 0 | 83,331 | 98 | 2.56 |
| 3120 | 66,021 | 0 | 234,697 | 0 | 300,718 | 79 | 2.50 |
| 3131 | 416,691 | 26,582 | 375,619 | 83,203 | 902,095 | 1,220 | 23.86 |
| 3132 | 35,701 | 310 | 17,129 | 80,000 | 133,140 | 139 | 3.84 |
| 3141 | 636,922 | 24,060 | 1,323,266 | 83,208 | 2,067,457 | 909 | 18.10 |
| 3142 | 341,491 | 475 | 501,324 | 0 | 843,290 | 688 | 21.78 |
| 3150 | 106,156 | 5,549 | 88,978 | 381,867 | 582,550 | 641 | 18.47 |
| 3160 | 82,910 | 1,644 | 0 | 9,277 | 93,831 | 173 | 7.20 |
| 3170 | 117,838 | 4,050 | 210,867 | 0 | 332,754 | 322 | 6.09 |
| 3181 | 159,928 | 938 | 0 | 103 | 160,969 | 684 | 22.73 |
| 3182 | 95,455 | 100 | 11,367 | 0 | 106,922 | 477 | 15.19 |
| 3190 | 133,221 | 19,669 | 117,641 | 1,871,889 | 2,142,420 | 907 | 18.97 |
| 3201 | 158,248 | 34,172 | 290,772 | 0 | 483,192 | 329 | 6.31 |
| 3202 | 47,579 | 35,367 | 35,563 | 0 | 118,510 | 63 | 1.32 |
| 3211 | 79,318 | 3,656 | 73,900 | 1,515 | 158,388 | 279 | 6.33 |
| 3212 | 112,491 | 14,045 | 9,450 | 45,501 | 181,487 | 151 | 3.82 |
| 3231 | 30,865 | 3,009 | 13,944 | 6,528 | 54,347 | 253 | 8.47 |
| 3232 | 207,193 | 3,707 | 343,636 | 12,475 | 567,012 | 356 | 8.31 |
| 3240 | 66,226 | 621 | 7,374 | 0 | 74,221 | 216 | 7.43 |
| 3250 | 40,070 | 1,834 | 13,273 | 0 | 55,177 | 80 | 2.17 |
| 3261 | 25,369 | 1,100 | 9,458 | 3,000 | 38,928 | 58 | 2.26 |
| 3262 | 32,775 | 1,000 | 4,886 | 5,413 | 44,073 | 169 | 5.16 |
| 3291 | 181,604 | 437 | 107,548 | 51,860 | 341,449 | 440 | 12.10 |
| **India Total** | **4,258,223** | **409,561** | **5,173,731** | **2,990,952** | **12,832,468** | **12,074** | **8.65** |
| 3220 **Sri Lanka** | 83,508 | 4,533 | 14,676 | 8,000 | 110,717 | 191 | 10.62 |
| 3271 **Pakistan** | 39,173 | 33,431 | 2,275 | 0 | 74,878 | 28 | 1.99 |
| 3272 **Pakistan** | 26,615 | 2,166 | 0 | 0 | 28,780 | 58 | 2.04 |
| 3281 **Bangladesh** | 170,827 | 5,137 | 123,567 | 17,190 | 316,720 | 347 | 6.36 |
| 3282 **Bangladesh** | 70,106 | 5,995 | 2,050 | 3,000 | 81,151 | 304 | 7.59 |
| 3292 **Nepal** | 205,039 | 29,419 | 129,108 | 25,000 | 388,566 | 453 | 10.39 |
| **South Asia Total** | **4,853,491** | **490,241** | **5,445,407** | **3,044,142** | **13,833,282** | **13,455** | **8.44** |
| **World Total** | **105,265,464** | **26,213,616** | **18,363,685** | **24,192,582** | **174,035,347** | | |

Source: RI South Asia Office

NiveshGuru™
SAMPATTI KI UNATTI

# GROW YOUR WEALTH

NiveshGuru, a one-stop solution for all your investment needs.

KshetraGuru® PROPERTY

SwarnaGuru® GOLD

FDGuru® FIXED DEPOSIT

VyaparGuru® STOCK BROKING

ShuruGuru™ IPO

YojanaGuru® GOVERNMENT BONDS

NidhiGuru™ MUTUAL FUND

AmulyaGuru™ PRECIOUS STONES



Nivesh Guru Advisors Private Limited
68-B, Nariman Bhavan, Nariman Point, Mumbai - 400021

+91 22 2288 0808 info@niveshguru.in www.niveshguru.in

# கடந்த காலம் என்ற

ஜியாஃப்ரி ஜான்சன்



RI தலைவர் மார்க் மலோனி
தன் சட்ட அலுவலகத்தில்.

# முன்னுரை

*ரோட்டரி உலகை இணைக்கிறது என்பதை மார்க் டேனியல் மலோனியும் அவரது குடும்பத்தரும் நாற்பது ஆண்டுகளாக நிரூபித்து வருகிறார்கள். அவர் தற்போது RI அமைப்பின் தலைவராகப் புதிய அவதாரம் எடுத்துள்ளார்.*




சில மலரும் நினைவுகள். அப்போது கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு இரு வாரங்களுக்கு முன்பே வடக்கு அலபாமாவிலும் டெகாடர் ரோட்டரி சங்கத்திலும் (Rotary Club of Decatur) கோலாகலம் களை கட்டிவிட்டது! ரோட்டரி சங்க உறுப்பினர்கள் ஸ்டோன் ரிவர் (Stone River) என்ற இடத்தில் உள்ள தேவாலயத்தைச் சேர்ந்த பணியாளர்களுடன் இணைந்து அப்பகுதியில் 70க்கு மேற்பட்ட சிறுவர் சிறுமியருக்கு பான் கேக் (pan cake) உடன் கூடிய காலை விருந்தினை அளித்தனர். அத்துடன், அங்கே பெரிய அங்காடிக்கும் அழைத்துச் சென்றனர். ரோட்டரி சங்கத்தின் கூட்டம் இரு தினங்கள் கழித்து ஏற்பாடு செய்யப்பட்டது. அங்கு ஆஸ்டின் ஜூனியர் ஹை ஜாஸ் (Austin Junior High Jazz) இசைக் குழுவினர் பல உற்சாகமான பாடல்களை இசைத்தனர். இத்தனைக்கும் வெளியே டிசம்பர் மாதக் குளிர் வெப்ப நிலை 40 டிகிரி ஃபாரன்ஹீட் அதாவது சுமார் 4.45 டிகிரி செல்சியஸ் என இருந்தது.

இசை நிகழ்ச்சி முடிந்ததும், ரோட்டரி சங்கத் தலைவர் லாரி பாய்ன் (Larry Payne) அறிவிக்கிறார்: மார்க் மலோனி எங்கே இருக்கிறார்? அங்கே கூடியிருந்தோர் ஆரவாரத்துடன் குரல் எழுப்புகிறார்கள்: அப்போது அவர் கூட்டத்திலிருந்து முன்னேறி மார்க் மலோனி அலபாமா மாகாணம், டெக்காடரில் இருக்கிறார் என்று அறிவிக்கிறார். அங்கே இருந்த 120க்கும் மேற்பட்டோர் உற்சாகக் குரலில் தங்களது புதிய தலைவரை வரவேற்றனர்.

இந்த வருணனையெல்லாம் டெக்காடர் டெய்லி (Decatur Daily) என்ற இதழில் செய்தியாக அப்போது வெளியானது. இருந்தாலும் அந்தச் செய்தியில் மார்க் மலோனியின் சாதனைகள் முழுமையாகக் குறிப்பிடப்படவில்லை. மார்க் மலோனி 1980ம் ஆண்டு ரோட்டரியில் இணைந்தது முதல் மாவட்ட ஆளுநர் (DG), ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநர் (RI director), ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவரின் துணைவர் (Presidential Aide), ரோட்டரி ஃபவுண்டேஷன் அறங்காவலர் (Rotary Foundation trustee), சட்டக் குழுவின் தலைவர் (Chair of the Council on Legislation), 2014ம் ஆண்டு சிட்னி மாநாட்டுக் குழுத் தலைவர் என பல பொறுப்புகளை ஏற்றுத் திறம்பட செயல்பட்டவர்.

இப்போது ரோட்டரி இன்டர்நேஷனலின் தலைவராகப் பொறுப்பு ஏற்க இருக்கிறார். மேலே

சொன்ன பதவிகள் எல்லாம் இதற்கு முன்னுரையைப் போல் அமைந்துள்ளன.

மார்க் மலோனியை நாற்பது ஆண்டுகளாக நன்கு அறிந்த பில் வைக்கர் (Bill Wyker), மார்க் மலோனி ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் ஆவதற்கு முழுத் தகுதி படைத்தவர் என்று கூறினார். மார்க் எதையும் தெளிவாக எடுத்துச் சொல்லும் திறனுள்ளவர். அபாரமான மூளை. மக்கள் மீது அக்கறை, அனுதாபம் கொண்டவர். சரியாகச் சொன்னால், உங்களுக்கு ஒரு முழுமையான நபர் கிடைத்துவிட்டார். இத்தகைய நபர் உச்சத்தை எட்டுவார் என்பது நமது சங்கத்தைச் சேர்ந்த யாருக்கும் வியப்பு இல்லை என்றார்.

வைக்கர் டெக்காட்டர் ரோட்டரி சங்கத்தில் மார்க் மலோனியை அடுத்து தலைவராக 1986ம் ஆண்டு பொறுப்பேற்றவர்.

தன்னை ஓர் உற்சாகமான பயணி என்று வருணித்துக் கொள்ளும் மார்க் மலோனி, இங்கிலாந்து, இந்தியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, தைவான் என பல நாடு களில் பயணம் சென்று இறுதியில் டெக்காட்டர் நகருக்குத் திரும்பியவர்.

மலோனியின் மூதாதையர் ஆர்த்தர் மற்றும் கேதரின் மலோனி ஆகியோர் அயர்லாந்தில் வாழ்ந்தவர்கள். மூன்று குழந்தைகளை வளர்ப்பதற்கு அரும்பாடு பட்டனர். அப்போது அயர்லாந்தில் கடும் பஞ்சம் அதனால், பிழைப்புக்காக அமெரிக்காவுக்குப் 1849ம் ஆண்டு ஒரு குழந்தையுடன்தான் பயணமாயினர். மற்ற குழந்தைகளை அயர்லாந்திலேயே விட்டு விட்டனர். அமெரிக்காவைச் சென்றடைந்ததும், தெற்கு இலியனாஸில் உள்ள கல்லாட்டின் (Gallatin) சிறிய ஊருக்குச் சென்றனர். அயர்லாந்து கத்தோலிக்கர்கள் குடியேறுவதற்காக அமைந்த பாண்ட் குடியேற்றப் பகுதியில் (Pond Settlement) தஞ்சமடைந்தனர்.

அவர்கள் ஆரம்பத்தில் பன்றி, கால்நடைகளுக்கான தீவனங்களை உற்பத்தி செய்து வந்தனர். அவர்கள் அமைத்த பண்ணை நிலம் மெல்ல மெல்ல அதிகரித்து 1,200 ஏக்கரானது. மார்க் மலோனியின் தந்தை பேட்ரிக் மலோனி (Patrick Maloney) கால்நடைத் தீவனங்களுக்குப் பதில் சோளம், கோதுமை பயிரிட்டார். கென்டகி மாகாணத்தில் கூடுதலாக 1,500 ஏக்கர் நிலத்தைப் பெற்று பண்ணையை விரிவுபடுத்தினார்.

தந்தையும் தாத்தாவும் விவசாயம் செய்து வந்தாலும், மார்க் மலோனிக்கு வேளாண்மை குறித்த படிப்பில் ஈடுபாடு இல்லை. பேச்சாற்றலை வளர்த்துக் கொண்டார். இலினாய்ஸ் அரசு விழாவில் 1966ம் ஆண்டு அவர் பேசிய ஒரு கனவு லட்சியமாகிறது என்ற ஆங்கிலப் பேச்சு பரிசு பெற்றது. பிறகு, எழுத்து உச்சரிப்பு (Spelling) போட்டியில் பரிசு பெற்றார்.

இலினாய்ஸ் மாகாணத்தில் ரிட்க்வே (Ridgway) என்ற இடத்தில் சோளப்பொரிக்கு (பாப்கார்ன்) தனி சிறப்பு தினம் கொண்டாடப்படும். குழந்தைகள் கோலா கலமாகக் கொண்டாடுவர். பாப்கார்ன் உண்பது (Popcorn Eating), பபிள் கம் சுவைத்து ஊதுவது (Bubblegum Blowing), தவளைப் பாய்ச்சல் (Frog-Jumping) ஆகிய போட்டிகள் எல்லாம் நடக்கும். இதுபோல் போட்டிகள், கோலாகலக் கொண்டாட்ட நிகழ்ச்சிகள், இசை, கலைநிகழ்ச்சிகள் எல்லாம் நடைபெறும்.

1981ம் ஆண்டு முதல் மார்க் மலோனி இந்த நிகழ்ச்சிகளைக் நடத்தும் பொறுப்பேற்றார். இரு முறை தவிர, ஆண்டுதோறும் அவர் தவறாமல் கலந்து கொள்வார். பாப்கார்ன் தினம் (Popcorn Day) எனக்குப் புனிதமானதாகவிட்டது என்கிறார்.

மார்க் மலோனி நகைச்சுவை உணர்வு மிகுந்தவர். இந்த முறையும் சிறப்பாகச் செயல்படுவார்.

*நானும் மார்க்கும் இணைந்தே வழக்கறிஞர் தொழிலை நடத்துகிறோம். ஆனால், இருவரையும் கொள்ளுமளவிற்கான பெரிய ரோட்டரி சங்கம் உலகில் இன்னும் இல்லை என்கிறார் கே.*

**கே மலோனி**



*கேய்யுடன் RI தலைவர் மலோனி அலபாமாவில் உள்ள தன் வீட்டில்.*

சொந்த ஊரைப் பற்றி நானும் மார்க் மலோனியும் பெருமைப்படுவோம். உள்ளூர் நிகழ்ச்சி களில் தவறாமல் கலந்து கொள்வோம். யாரும் அழைக்க வேண்டாம் என்று அவரது நண்பர் ரோட்ராமெல் (Rotramel) கூறினார்.

1968ம் ஆண்டு எட்டாவது வகுப்பில் சேருவதற்கு செயின்ட் லூயியில் உள்ள கத்தோலிக்கப் பள்ளியில் சேர விண்ணப்பித்தார் மார்க் மலோனி. அப்பள்ளி முழு ஸ்காலர்ஷிப் தருவதற்கு முன் வந்தது. அங்கே ஹாஸ்டலில்தான் தங்க வேண்டும். அதை மலோனியின் பெற்றோர் ஏற்கவில்லை. மார்க் ஒரு குழந்தை என்றே கருதிய அவர்கள் இன்னொரு சிறந்த பள்ளியில் சேர்த்து விட்டனர். அவர் சேர்ந்த ரிட்க்வே உயர்நிலைப் பள்ளியில் (Ridgway High School) மார்க்கின் அம்மா டோரின் (Doreen) ஆங்கில ஆசிரியை. அவரை எல்லோருக்கும் பிடிக்கும்.

வழக்கம்போல் மார்க் மலோனி படிப்பில் சுட்டி. அது மட்டுமல்ல, சமூகவாழ்விலும் ஜொலித்தார். மாணவர் சங்கத் தலைவர், மாணவர்-ஆசிரியர் குழு உறுப்பினர் என்று பல அமைப்புகளில் இடம்பெற்றார். இசைக் குழு, ஸ்பானிஷ் கிளப் என்று பல அமைப்புகளிலும் இடம்பெற்றார். 1972ல் படிப்பை முடித்தார். அப்போது அவர் ஆண்டின் சிறந்த கத்தோலிக்க இளைஞர் (Outstanding Catholic Youth) என்ற விருதை பெற்றார்.



*ஃபிலிஸ், மார்க்கரெட் இருவரும் எங்களுடன் 30 ரோட்டரி கூட்டங்களில் பங்கேற்றுள்ளனர்.*

**கே மலோனி**

அதன் பிறகு ஹார்வர்டு கல்லூரியில் சேர்க்கப்பட்டார். அங்கே அரசியலுடன் வரலாறு படிப்பையும் சேர்த்துப் படித்தார். அவரது ஆசிரியர் ஓர் அரசியல்வாதி. பால் சைமன் என்ற அவர் ஜான் கென்னடி அரசுப் பள்ளியில் படித்தவர். மார்க் மலோனியின் நண்பர் ஆனார். 1964ம் ஆண்டு சைமன் அமெரிக்க நாடாளுமன்றத்தின் உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். வாஷிங்டன் சைமன் அலுவலகத்தில் மார்க் மலோனி சிறிது காலம் பணியாற்றினார்.

1977ம் ஆண்டு கே ப்ளாக்பர்ன் (Gay Blackburn) வாண்டெர்பில்ட் (Vanderbilt) சட்டக் கல்லூரியில் சட்டம் படித்துக் கொண்டிருந்தார். அவரது தந்தை டெக்காடரில் புகழ் பெற்ற வழக்கறிஞர். மேயராகக் கூட இருந்தவர் அவர். அப்போது கே ப்ளாக்பர்ன் உள்ளிட்ட பல கல்லூரிகளின் மாணவர்கள் தெற்கு இலினாய்ஸில் நடைபெறும் பாப்கர்ன் தினத்தில் பங்கேற்கச் சென்றனர். அந்தக் குழுவுக்குத் தலைவராக இருந்த மாணவர் பெயர் மார்க் மலோனி. அப்போது மார்க் மலோனிக்கும் கே பிளாக்பர்னுக்கும் இடையில் காதல் மலர்ந்தது.

இருவரும் கல்லூரிப் படிப்பை முடித்த தினத்தில், ஒரு திரைப்படத்தைப் பார்த்தனர். அப்போதுதான் நாங்கள் சரியான ஜோடி என்று இருவரது மனத்திலும் தோன்றியது என்றார் மார்க்.

பிறகு, மார்க் மலோனி வீட்டுக்கு கே அழைக்கப்பட்டார். மார்க் குடும்பத்தினர் வசித்து வந்த கல்லாட்டின் (Gallatin) ரொம்ப சின்ன ஊர். மக்கள் தொகையோ 8000 தான். இன்னும் சொல்லப் போனால், அந்த ஊரில் பெரும்பாலானோர் மலோனி குடும்பத்துக்குச் சொந்தம். நான் அவர்கள் வீட்டுக்குச் சென்றபோது, 22 பேரைத்தான் பார்த்தேன். மார்க்கும் அவரது தாயும் என்னை அபரிமிதமாக உபசரித்தார்கள் என்றார் கே. கென்ட்டகியில் உள்ள பண்ணைக்கு அழைத்துச் சென்றார்கள். இரவு விருந்துக்காக இந்தியானா மாகாணம் நியூ ஹார்மனிக்குச் சென்றார்கள். மார்க் மலோனியின் பெற்றோர்களைப் புகைப்படம் எடுத்தார் கே.

ஞாயிறு காலையில், தேவாலயத்துக்குச் சென்று வழிபட்டார்கள். 1850ம் ஆண்டு கட்டப்பட்ட பழங்கால தேவாலயத்துக்கு







கேவை அழைத்துச் சென்றார் மார்க் மலோனி.

பத்து நாட்கள் கழித்து மார்க் ஒரு நூலகத்தில் கேவைச் சந்தித்தார். அப்போது காரில் சென்று கொண்டிருந்த அப்பா பேட்ரிக், அம்மா டோரின் ஆகியோர் இறந்தனர் என்ற சோகச் செய்தியைக் கூறினார். அதே காரில் பயணம் செய்து கொண்டிருந்த மார்க்கின் சகோதரி எரின் காயங்களுடன் உயிர் தப்பினார். மார்க் வீட்டுக்கு கே வந்தபோது, அப்பா அம்மாவைப் புகைப்படம் எடுத்திருந்தார். அதுதான் அவர்களது கடைசிப் படம் என்று கூறினார் மார்க் மலோனி.


ஒரு வாரம் கழித்து அப்பா அம்மா பெயரில் மார்க் மலோனி பேட்ரிக் -



*தங்கள் குழந்தைகள் மார்க்ரெட் மற்றும் ஃபிலிஸ் அவர்களுடன் RI தலைவர் மலோனி மற்றும் கேய்.*



*1960ல் தன் குடும்பத்தினருடன் RI தலைவர் மலோனி; 1980ல் ரோட்டரியில் சேர்ந்தபொழுது RI தலைவர் மலோனி மற்றும் கேய்; 1972ல் கல்லூரி மாணவனாக.*





டோரின் மலோனி நினைவு உதவித் தொகையை தொடங்கினார். அதற்கு 'கால்லட்டின் டெமாக்ட்ரேட்' (Gallatin Democrat) என்ற இதழ் உருக்கத்துடன் நன்றி தெரிவித்து செய்தி வெளியிட்டிருந்தது. கலாட்டின் ஊர் மக்கள் அனைவரும் தங்களது அனுதாபத்தையும் அன்பையும் அபரிமிதமாக வெளிப்படுத்தினர் என்று பிரசுரித்தது.

கார் விபத்தை அடுத்து, மார்க் வீட்டுக்குத் துக்கம் விசாரிக்க வந்தவர்களிடம் தன்னை அறிமுகம் செய்துகொண்டார் கே. இதெல்லாம் நடந்து முடிந்து சில மாதங்களில் இருவருக்கும் திருமணம் நிச்சயமானது. இருவரும் சட்டப் படிப்பை முடிக்கும் சமயத்தில் அடுத்து என்ன செய்யலாம் என்று கேவும் மார்க்கும் யோசிக்க ஆரம்பித்தனர். புதிய உலகத்தைப் பார்ப்பதற்காக ஊருக்குத் தொலைவில் படிக்க ஆசைப்பட்டு, மேற்படிப்புக்கு நான் அட்லாண்டா சென்றேன் என்றார் கே. ஆனால், வாரம்தோறும் டெக்காட்டர் வந்துவிடுவார். கேவின் தந்தை ஜே. கில்மெர் பிளாக்பர்ன், மார்க் மலோனியை ஒரு முறை அழைத்துச் சென்று, குடும்ப சட்டத்தைக் கையாளும் வழக்குரைஞராக இருப்பதன் பலனை விவரித்தார். அதையடுத்து மார்க், கே தம்பதிக்கு வாய்ப்புகள் கொஞ்சம் வந்தன. டெக்காட்டரில் தங்கி, கேவின் தந்தை பிளாக்பர்ன் சட்ட நிறுவனத்தில் சேர்ந்தார். இருவரும் வழக்குரைஞர் தொழிலை அங்கேயே நடத்தினர். ஆனால், கோர்ட்டில் எதிரும் புதிருமாக வாதாடவில்லை.

டெக்காட்டரில் குடிபுகுந்தபோது, கேவின் பெற்றோருக்கு ஏதோ நல்லது செய்வதைப் போல் இருந்தது. கேவுக்குப் பிடித்திருந்தது. எங்க அப்பாவுக்கு எது நல்ல வாழ்க்கை தரும் என்ற தொலைநோக்குப் பார்வை உண்டு. ஆரம்பத்தில் அதன் அருமை தெரியவில்லை என்றார் கே.

மார்க் - கே திருமணம் 1979ம் ஆண்டு நடந்தது. நியூயார்க் பல்கலைக் கழகத்தில் வரிவிதிப்பு குறித்த சட்டப் படிப்பில் முதுநிலைப் பட்டம் பெற்றார் மார்க் மலோனி.

கேவின் அப்பா நடத்தி வரும் சட்ட நிறுவனத்தைத் தொடங்கியவர் கில்மெர். இன்சூரன்ஸ் வரி விதிப்பு சட்டத்தைக் கரைத்துக் குடித்தவர் கில்மெர். பிர்மிங்ஹாமில் 1950ம் ஆண்டிலேயே அந்தச் சட்டத்தைக் கையாண்ட முதல் வழக்குரைஞர் அவர் என்று கென் ஷுப்பெர்ட் கூறினார். கென் தி ரோட்டரி ஃபவுண்டேஷன் அறங்காவல் குழுத் துணைத் தலைவராக இருக்கிறார். கென் ஷுப்பெர்ட்டும் அவரது மனைவி லைன்னும் கில்மெர் ஆரம்பித்து பிளாக்பர்ன் நிர்வகிக்கும் சட்ட நிறுவனத்தில் பங்குதாரர்கள். கில்மெர் ஒரு தந்தையைப் போல் இருந்து பலருக்கு வழிகாட்டியவர் என்று டெக்காட்டர் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த பில் வைக்கர் கூறினார். கேவுக்குப் பொருத்தமான வாழ்க்கைத் துணையாக மார்க் அமைந்துவிட்டார். அறிவாற்றல் மிக்கவர் மார்க் என்றார் அவர்.

மிகவும் கண்ணியமான மனிதர்களில் மார்க் ஒருவர் என்று புகழ்கிறார் டெக்காட்டர் ரோட்டரி சங்க உறுப்பினர் எலென் டிடியெர்.

மார்க் மலோனி ரோட்டரி அமைப்பில் 1980ம் ஆண்டு சேர்ந்தார். ஐந்து ஆண்டு களில் டெக்காட்டர் ரோட்டரி சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது அவருக்கு வயது 30. அப்போது ரோட்டரி நிதியுதவியில் நைஜீரியா ஆய்வு பரிமாற்றக் குழு (Rotary-sponsored Group Study Exchange

team) அலபாமாவுக்கு வருகை புரிந்தது. ஆனால், அவர்களது பயணத்தில் டெக்காட்டர் இடம்பெறவில்லை. அவர்களைத் தொலைபேசியில் அழைத்தார் மார்க். ஆனால், அந்தக் குழு இரண்டு தினங்களுக்கு மேல் டெக்காட்டரில் தங்கவில்லை. இருந்தாலும், அந்தக் குழுவுக்கு தனது இல்லத்திலேயே விருந்தளித்தார்கள் மார்க்கும் கேவும். அவர்களுக்குச் சிறந்த வகையில் விருந்தோம்பல் அளிக்க முடிவு செய்தோம். அதை அனுபவித்த அவர்களது தலைவர் ‘இந்த இளம் தலைவர்தான் (மார்க் மலோனி) அடுத்த வருடம் நைஜீரியாவுக்கு வரும் குழுவின் தலைவராக இருக்க வேண்டும்’ திட்டவட்டமாகக் கூறிவிட்டார். அதையடுத்து, நாற்பது நாட்கள் நைஜீரியாவில் பயணம் மேற்கொணடார் மார்க். அப்போது எங்களது மகள் ஃபிலிஸுக்கு 4 வயது. மார்க்கரெட்டுக்கு 2 வயது. அப்போது தான் நைஜீரியாவில் தன் கருத்தான ரோட்டரி உலகை இணைக்கும் (Rotary Connects the World) என்பதை வித்திட்டார்.

நைஜீரியாவுக்குப் பயணமான டெக்காட்டர் ஆய்வு பரிமாற்றக் குழுவில் இடம்பெற்ற மைக் கர்ல் தங்களது குழுத் தலைவர் மார்க் மலோனியைப் பற்றிக் குறிப்பிடும்போது, மார்க் பிற நாட்டு மக்களையும் அவர்களது கலாசாரத் தையும் உடனே புரிந்து கொண்டு அவர்களுக்கு ஏற்ப செயல்படும் ஆற்றல் கொண்டவர் என்றார். 1990ம் ஆண்டு நைஜீரியாவுக்குப் பயணமானபோது, மனைவி கேவையும் அழைத்துக் கொண்டு சென்றார். ரோட்டரியின் முதல் ஆப்பிரிக்க இயக்குநராக இருந்த ஜோனத்தன் மஜியாக்பேயை மார்க் மலோனி சந்தித்து ள்ளார். இந்த முறை கனோ என்ற ஊரில் உள்ள அவரது வீட்டில் மார்க்கும் கேவும் தங்கினர். மஜியாக்பே மனைவி ஆடீ இருவரும் அன்பாக உபசரித்தனர். சின்ன விஷயத்தைக் கூட நினைவில் வைத்திருப்பார் மார்க். அவரை ஒரு நடமாடும் கம்ப்யூட்டர் என்று அழைப்பேன். அந்த அளவுக்கு சுறுசுறுப்பு, கடின உழைப்புக்குப் பெயர் போனவர் அவர் என்றார். மஜியாக்பே 2003-04ல் ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவராக நியமிக்கப் பட்டபோது, அவரும் அவரது மனைவி ஆடீயும் மார்க்-மலோனி தம்பதியை துணைவர்களாக



அங்கீகரித்தனர்.

பதவியேற்ற சில வாரங்களிலேயே மஜ்வாக்பே 2003ம் ஆண்டு ஆஸ்திரேலியா பிர்ஸ்பேன் பயணத்தில் இருந்தபோது, இங்கிலாந்து லீட்ஸில் இருந்த ஆடீ எதிர்பாராதவிதமாக இறந்துவிட்டார். அப்போது மார்க் மலோனி செய்த உதவியை மறக்க முடியாது. அவர்தான் விமான டிக்கெட் வாங்கி, பயணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்தார். அவரும் கேவும் தங்களது சொந்தச் செலவில் என்னுடன் பயணமாகி உறுதுணையாக இருந்தனர். மார்க் மலோனி இருவரும் டெக்காட்டரில் உள்ள எங்கள் உறவினர் என்று நெகிழ்வுடன் கூறினார்.

மார்க் மலோனியின் இன்னொரு நீண்டகால நண்பர் அவரது துணையாக

*ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் பதவியில் அவர் தடம் பதிப்பார் என்பதில் எனக்குச் சந்தேகமேயில்லை.*

**பில் வைக்கர்**



RI *தலைவர் மலோனி தன் குடும்பத்தாருடன்.*

இருந்த லாரி லன்ஸ்ஃபோர்ட் (Larry Lunsford). அவர் கன்ஸாஸ் ப்ளாஸா ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர். RID 6040 ஆளுநராக இருந்தவர். ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநராகவும் இருந்தவர். ரோட்டரியில் மார்க் மலோனியைப் போல் அனுபவம் கொண்டவரைக் காண்பது அரிது. அவரது இலக்கையும் ரோட்டரியின் இலக்கையும் சிறந்த வகையில் நிறைவேற்றும் திறனுள்ளவர். தனது அமைப்பு, நிர்வாகத் திறன்களைக் கொண்டு ரோட்டரியைச் சிறந்த இயக்கமாக மாற்றியவர் என்றார்.

மார்க் மனைவி கே 1996ம் ஆண்டு ரோட்டரியில் இணைந்தார். புதிதாக உருவாக்கப்பட்ட டெக்காட்டர் டே பிரேக் ரோட்டரி சங்கத்தில் அவர் உறுப்பினராகச் சேர்ந்தார். நானும் மார்க்கும் இணைந்தே வழக்கறிஞர் தொழிலை நடத்துகிறோம். அதைப் போல் இணைந்தே குடும்பத்தையும் நடத்துகிறோம். ஆனால், இருவரையும் கொள்ளுமளவிற்கான பெரிய ரோட்டரி சங்கம் உலகில் இன்னும் இல்லை என்கிறார் கே.

மார்க், கே தம்பதியினருடன் ரோட்டரி கூட்டங்களுக்கு வரும் அவர்களது இரு

மகள்களும் ரோட்டரிக்குப் பரிச்சயமாகவிட்டனர். எங்களுடன் எங்கள் மகள் இருவருக்கும் உலகைப் பற்றிய விசாலமான பார்வை வந்துவிட்டது. ஃபிலிஸ், மார்க்கரெட் இருவரும் எங்களுடன் 30 ரோட்டரி கூட்டங்களில் பங்கேற்றுள்ளனர். அத்துடன் விவாதங்களையும் பார்த்திருக்கிறார்கள். இவர்களில் ஃபிலிஸ் ஹார்வர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களில் பிரிட்டிஷ் வரலாறு, ஆங்கில இலக்கியம், யேல் பல்கலைக்கழகத்தில் சட்டமும் படித்தார். மார்க்கரெட் யேல் பல்கலைக்கழகத்தில் மொழியியல் படித்து மருத்துவப் பள்ளியில் படிக்கிறார்.

தனது தாயார் இறந்த பிறகு கே சூசானா க்ரீர் என்ற பெண்ணைத் தத்து எடுத்துக் கொண்டார். தற்போது அவள் தெற்கு அலபாமா பல்கலைக்கழகத்தில் படிக்கிறாள். இதனிடையில் ஃபிலிஸுக்குத் திருமணம் ஆகி பாட்ரிக் (7), பீட்டர் (4) என இரு மகன்கள் உள்ளனர். ஃபிலிஸும், அவரது கணவர் ப்ளாக் ஜான்சனும் மூன்று ரோட்டரி மாநாடுகளில் பங்கேற்றுவிட்டனர்.



PRIP *ஜோனாதன் மாஜ்யாகபேயுடன் மலோனியும் கேய்யும்.*

மார்க் மெலோனி வீட்டின் வரவேற்பறையில் அழகான புகைப்படங்கள் காட்சி தருகின்றன. அவற்றில் போப்புடன் மார்க் இருக்கும் இரு புகைப்படங்கள் சிறப்பானவை. மலோனி என்ற சொல்லுக்கே தேவாலயத்தின் பக்தர் என்பது தானே அர்த்தம்! டெக்கட்டரில் உள்ள கத்தோலிக்கப் பிரபு தேவாலயத்தின் நிதி கவுன்சிலில் 12 ஆண்டுகள், செயின்ட் ஆன் கத்தோலிக்கப் பள்ளியின் போர்டில் 16 ஆண்டுகள் பணியாற்றியிருக்கிறார். அவரது பணியை திருச்சபை குருமார் பாராட்டுகிறார்கள்.

மார்க்-கே திருமணம் நடைபெற்ற ஐக்கிய மெதடிஸ் தேவாலயத்தில் ஞாயிறுதோறும் வழிபாடு செய்வது வழக்கமாகக் கொண்டுள்ளனர். அத்துடன் செயின்ட் ஜான் எபிஸ்கோபல் தேவாலயத்துக்கும் பைபிள் வாசிக்கச் செல்வார். மார்க் இப்பணியை அற்புதமாக மேற்கொண்டு வருகிறார் என்று டெக்காட்டர் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த ரோனி ட்யூக்ஸ் புகழ்ந்தார்.

*டெக்காட்டரில் வசிப்போர் தங்களது ஊரின் கதாநாயகனான மார்க் மலோனியைக் கொண்டாடுகிறார்கள்.*

டெக்காட்டரில் வசிப்போர் தங்களது ஊரின் கதாநாயகனான மார்க் மலோனியைக் கொண்டாடுகிறார்கள். அலபாமா மாகாணத்தின் டெக்காட்டர் ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பின் தலைவரது ஊராக இருக்கவேண்டும் என்கிறார் டேவிட் ப்ரெலான்ட், இவர் மார்க்கன் மாவட்ட ஆட்சியராக இருந்து ஓய்வு பெற்றவர். தற்போது டெக்காட்டர்வாசிகளின் வரலாற்று நிபுணராகவும் வரலாற்று ஆய்வுகள் மற்றும் நிகழ்வுளின் இயக்குநராகவும் பணியாற்றி வருகிறார்.

மார்க் மலோனி வித்தியாசமான மனிதர். எனக்குத் தெரிந்து அனைவரையும் வசீகரிக்கக் கூடியவர்களில் மார்க் குறிப்பிடத் தக்க ஒருவர் என்கிறார் வைக்கர். ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் பதவியில் அவர் தடம் பதிப்பார் என்பதில் எனக்குச் சந்தேகமேயில்லை என்றார் அவர்.

© தி ரொட்டேரியன்.

# Excel GROUP INSTITUTIONS

Approved by AICTE, CoA, NCTE, PCI, Govt. of TN, New Delhi & Affiliated with Anna University & DoTE,
The TN Dr. M.G.R. Medical University, DPH, TNTEU, Periyar University, Salem, Chennai

- ENGINEERING COLLEGES • ARCHITECTURE COLLEGE • BUSINESS SCHOOL
- POLYTECHNIC COLLEGE • EDUCATION - B.ED., M.ED., • PHARMACY COLLEGE
- PHYSIOTHERAPY COLLEGE • HEALTH SCIENCE • NATUROPATHY & YOGA
- COMMERCE & SCIENCE • HOMOEOPATHY MEDICAL COLLEGE*
- SIDDHA MEDICAL COLLEGE & RESEARCH CENTRE* * FROM 2019 ONWARDS
- HOMOEOPATHY, SIDDHA, NATUROPATHY & PHYSIOTHERAPY HOSPITALS

NAAC (A)

NBA NATIONAL BOARD of ACCREDITATION B.E - AERO, MECH, CSE, ECE



Rtn. Prof. Dr. A.K. Natesan
Hon.Chairman, Excel & The Kavery Group Institutions,
District Governor 2019-2020 - Rotary District - 2982

## B.E.
AGRI | AERO | BIO-MEDICAL
CIVIL | CSE | ECE | EEE | MECH
SAFETY & FIRE ENGINEERING

## B.Tech.
CHEMICAL ENGINEERING
FOOD TECHNOLOGY
IT | PETROCHEMICAL

1128 Students Placed 2018-19

## M.E.
Aeronautical Engg. | Environmental Engg.
Structural Engg. | Computer Science Engg.
Thermal Engg. | Industrial Safety Engg.
Engineering Design | Power Electronics & Drive
Embedded System | Applied Electronics

## B.N.Y.S NEET Not Necessary

## B.S.M.S* / B.H.M.S*
(4½ years + 1 year internship)

## B. Pharm
(4 years)

## B.P.T.
(4 years + ½ year Internship)

## D. Pharm
2 years (After +2)

## B.Sc.,
RIT, MLT

## Diploma in Health Inspector
2 Years (After +2)

## B.Arch. / M.Arch.

## COMMERCE & SCIENCE
B.A. English | B.C.A. | B.Com.
B.Com-CA | B.B.A.
B.Com (Accounting & Commerce)
B.Sc.,
Computer Science | Microbiology
Visual Communication
Textile & Fashion Designing

## Poly Diploma
AUTO | MECH | CIVIL | DECE | DEEE

MBA (2 years) | MCA (2 years) | MBA (5 years - after +2)

**NH - 544, Salem Main Road, Komarapalayam, Near Erode, Namakkal District - 637 303, TamilNadu.**
**Tool free call @ 1800 212 567 999. Web: www.excelinstitutions.com**

# THE KAVERY

22nd Batch Since 1998

- ENGINEERING COLLEGES • POLYTECHNIC COLLEGES
- ARTS AND SCIENCE COLLEGE FOR WOMEN
- COLLEGES OF EDUCATION • INSTITUTE OF HEALTH SCIENCE



Advanced Laboratories
Various on-campus and off-campus opportunities to the students
Separate Hostel for Boys and Girls with Excellent Facilities
Transportation to all Parts of City

### Engineering Colleges Courses
**B.E - Biomedical Engineering**

UG Courses **B.E.**
- Civil • Mechanical
- Electrical • Electronics
- Computer • Automobile
- Agriculture • Mechatronics
- Chemical Engineering

**M.E. - M.B.A. - M.C.A.**
(Infosys Advanced Partner Institute | Permanent Affiliation by Anna University)

### Polytechnic Colleges Courses
- Civil Engg. • Mechanical Engg.
- Electrical & Electronics Engg.
- Electronics & Commu. Engg.
- Computer Science & Engg.
- Automobile Engg.
- Mechanical (T&D) Engg.
- Chemical Engg.

Counseling Code 2625 2666

1522 STUDENTS PLACED (2018-19)

Dip. - Health Inspector 2 Years Male Only

NAAC B.Ed., & M.Ed.,

Engg. 43 UNIVERSITY RANK

Poly. 100 State Rank Holders

### Arts and Science College for Women Courses
- B.A. - English • B.Sc. - Maths • B.Sc. - Physics • B.Sc. - Chemistry • B.Sc. - Comp. Science • B.Sc. - Microbiology
- B.Sc. - Nutrition and Dietetics • B.Sc. - Textile and Fashion Designing* • B.Com (CA) • B.Com • B.A. - Tamil* • BCA.*

Free value added courses along with regular courses | Free Bus for all Routes

CORPORATE | PROFESSIONAL SOCIETY & ASSOCIATIONS

CII IAENG IEEE

CENTRE OF EXCELLENCE

Infosys amazon



**Mecheri, Salem - 636 453.** : www.kavery.org.in f : kaveryinstitutions.
Cell : 95249 28156, 16156, 82156, 36156.

# ரோட்டரியின் குழுப்பரிமாற்றத் திட்டம் வாழ்வை மேம்படுத்துவதற்கான அனுபவம்:

# குலாம் வஹன்வதி

ரஷீதா பகத்



கார்ப்பரேட் நிறுவனங்கள் அளிக்கும் நன்கொடையில் கணிசமான தொகை கிடைக்கப் பெறுவதற்கான வழி வகைகளை TRF ஆராய்ந்து வருகிறது என்று ஃபவுண்டேஷனின் அறங்காவலர் குலாம் வஹன்வதி தெரிவித்தார்.

ரோட்டரி நியூஸ் இதழுக்கு அவர் அளித்த சிறப்புப் பேட்டியில், கார்ப்பரேட் சமூகப் பொறுப்பு நிதி சீராகக் கிடைப்பதில் ஏதேனும் சிக்கல் உள்ளதா? அது குறித்து விவரிக்க முடியுமா? என்று கேட்டதற்கு, அறங்காவலர்கள் அது குறித்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள் என்றார்.

பல கார்ப்பரேட் நிறுவனங்கள் தாங்கள் அளிக்கும் நன்கொடை ரோட்டரி ஃபவுண்டேஷனுக்குச் செல்லவேண்டும் என்றும் அளிக்கும் நிதிக்குப் பாதுகாப்பு தேவை என்றும் விரும்புகிறார்கள். அந்த நிதியைப் பெற்றுக் கொள்வதில் நமக்கு மிகுந்த மகிழ்ச்சி. அதே சமயம் இந்த நிதி நேரடியாக சமூகப் பணித் திட்டத்துக்குப் பயன்படுத்த படமாட்டாது, மாறாக உலகளாவிய மானியம் மூலமாகவே அளிக்கப்படும் என்று அறங்காவலர்கள் கூறுகிறார்கள் என்றும் அவர் கூறினார்.

**அவரது பேட்டி:**

கார்ப்பரேட் நிறுவனங்கள் எதற்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் அளிக்கும் நிதியும் சமுதாயத்துக் கான தேவைகள் குறித்த மதிப்பீடும் பொருந்துவதில்லை. அதனால், உலகளாவிய மானிய உதவி கோரி அனுப்பப்படும் சில விண்ணப்பங்கள் ஏற்கப்படுவதில்லை. இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். எனினும், நீங்கள் கூறியது போல் இந்தியாவில் உள்ள கார்ப்பரேட் நிறுவனங்களின் நிதி எந்த அளவு கிடைக்க வேண்டும் என விரும்பினோமோ அதைப் பெறுவதில் போதிய பலன் இது வரை கிடைக்கவில்லை.

ரோட்டரி இன்டர்நேஷனல், தி ரோட்டரி ஃபவுண்டேஷன் ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்பு குறித்து கேட்கிறார்கள். இரண்டும் தொடர்புடையவை. ஒரே நிறுவனத்தின் இருவேறு பகுதிகள் ஆகும். ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் ஆகும். ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பு ரோட்டரி சங்கங்கள், அவற்றின் நிர்வாக விஷயங்கள், குறிப்பாக நிதி ஆகியவை குறித்த விவகாரங்களைக் கையாள்கிறது. TRF உலகில் நல்ல பணிகளைச் செய்ய ஊக்கமளிக்கும் நிறுவனமாகும். ஃபவுண்டேஷன் நன்கொடையாளர்களிடமிருந்து நிதியைத் திரட்டி, அந்த நிதி ரோட்டரியின் ஆறு கோட்பாடுகள் குறித்த உரிய திட்டங்களுக்குப் போய்ச் சேருகிறதா என்று உறுதி செய்கிறது.

இவற்றில் சில பிரபலமானவை. எனினும், நாம் ரோட்டரியின் ஆறு குறிக்கோள்களிலும் கவனம்



இருக்கிறது என்று கேட்கிறீர்கள். பில் கேட்ஸ், ராஜஸ்ரீ பிர்லா ஆகியோர், குறிப்பாக பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த D ரவிசங்கர் ஆகியோர் இந்த TRF-ஆல் ஈர்க்கப்பட்டுள்ளனர். அதனால்தான் மிகப் பெரிய தொகையை அளிக்கிறார்கள்.

அறக்கட்டளையை நம்புங்கள். பல ஆண்டுகளாகக் கட்டியமைக்கப்பட்ட நம்பிக்கை. ஃபவுண்டேஷனை நம்பி பெரிய நன்கொடை அளிக்கிறார்கள் பாருங்களேன். நான் மலை உச்சியில் ஏறி சமூகப் பணிக்கு நன்கொடை அளிக்கச் சரியான அமைப்பு ரோட்டரி ஃபவுண்டேஷன் தான் என்று உரக்கக் குரல் கொடுக்கலாம், ஆனால், நான் ரோட்டரி அமைப்பைச் சேர்ந்தவன். பாரபட்சமாகப் பேசக் கூடும். ஆனால், பெருங்கொடை அளிப்போர் எல்லா அமைப்புகளையும் அலசி ஆராய்ந்து பிறகுதான் நன்கொடையை அளிக்கச் சிறந்த இடம் ஃபவுண்டேஷன் என்று முடிவெடுத்திருப்பார்கள்.

நமது நன்கொடை குறித்து அமெரிக்காவில் உள்ள சேரிட்டி நேவிகேட்டர் (Charity Navigator) என்ற அமைப்பு மதிப்பிட்டு வருகிறது. ஆண்டுதோறும் 8 ஆயிரம் முதல் 9 ஆயிரம் வரையிலான தன்னார்வத் தொண்டுகள் குறித்து பல்வேறு அளவுகோல்களை வைத்து மதிப்பிட்டு வருகிறது. அதன்படி மிகக் குறைந்த கொடைக்கு ஒரு நட்சத்திர அந்தஸ்தும், அதிகமான கொடைக்கு 4 நட்சத்திர அந்தஸ்தும் அளிக்கிறது. கடந்த 11 ஆண்டுகளாக ரோட்டரி ஃபவுண்டேஷன் முதலாவது

செலுத்துகிறோம். கொள்கை ஆவணங்களில் உள்ள சொற்களை மேலும் செம்மையாக்கி தெளிவுபடுத்தியுள்ளோம். எனினும் தி ரோட்டரி ஃபவுண்டேஷனும் ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பும் இணைந்து செயல்படவேண்டும் என்பதே உங்கள் கேள்விக்கு எனது பதிலாகும்.

உதாரணத்திற்கு, ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநர் C பாஸ்கரும் நானும் நெருக்கமாகப் பணியாற்றியுள்ளோம். எங்களுக்குள் மிகச் சிறந்த புரிதல் உள்ளது. இதைப் போல இயக்குநர்களாகப் பொறுப்பேற்கும் பரத் பாண்ட்யா, கமல் சங்வி ஆகியோருடனும் இணைந்து செயல்படுவதில் ஆவலாக இருக்கிறேன்.

TRFக்கு அப்படி என்ன சிறப்பு

*பெருங்கொடை அளிப்போர் எல்லா அமைப்புகளையும் அலசி ஆராய்ந்து பிறகுதான் நன்கொடையை அளிக்கச் சிறந்த இடம் ஃபவுண்டேஷன் என்று முடிவெடுத்திருப்பார்கள்.*

# ஒரு பார்வையில்...



TRF *அறங்காவலர் குலாம் வஹன்வதி தன் மகன் ஜமீர், மருமகள் கதீஜா, மனைவி ஹசீனா, மகள் ஜஹாபியா, மருமகன் சத்பல் பிரைன்ச், மற்றும் பேரக் குழந்தைகள் சுமேரா, ரிஷான் மற்றும் ஜெய்யான் பிரைன்ச் ஆகியோருடன்.*

*ஓய்வெடுத்தல்:* *ஓட்டப் பந்தயம் போன்றவை மிகவும் பிடிக்கும். அதில் ஒரு வித சிலிர்ப்பு இருக்கும். நான் நன்றாகக் குதிரை ஓட்டுவேன். 8 வயதிலேயே ஆரம்பித்தேன். ஜிம்கானா கிளப்பில் ஓட்டியிருக்கிறேன். பல போட்டிகளில் வென்றிருக்கிறேன். போலோ விளையாடுவேன்.*

*உடற்பயிற்சி:* *வாரத்துக்கு மூன்று முறை உடற்பயிற்சிக் கூடத்துக்குப் போவேன். ஒரு மணி நேரம், ஒன்றே கால் மணி நேரம் பயிற்சி செய்வேன்.*

*படிப்பது:* *புத்தக வாசிப்பு மிகவும் பிடிக்கும். நான் படித்தவற்றில் சிறந்த புத்தகங்களில் ஸ்டீபன் ஹாக்கிங்* (Stephen Hawking) *எழுதிய காலத்தின் சுருக்கமான வரலாறு* (A brief history of Time) *குறிப்பிடத்தக்கது. அற்புதமான புத்தகம். படிக்கும்போது முழுமையாக அனுபவித்தேன்.*

*இசை:* *இந்தி திரைப்பட பாடல்கள் மிகவும் பிடிக்கும். அதுவும் 1970, 80களில் வெளியான படங்கள். மேற்கத்திய இசையை ரொம்ப ரசிப்பேன்.*

*திரைப்படங்கள்:* *ஏதாவது டி.வி-யில் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளைப் பார்ப்பேன். மனதை ஓய்வில் வைத்துக் கொள்வதற்காக தொடர்கள் பார்ப்பேன்!*

*உணவு:* *நன்றாகச் சாப்பிடுவேன். எல்லா வகையான சாப்பாடும் பிடிக்கும். ஆசிய வகை உணவு பிடிக்கும். சைனீஸ். ஜப்பானிய உணவு வகைகள் பிடிக்கும். அமெரிக்காவில் உள்ள எனது மகள் உடன் இருந்தால், எது பச்சையான உணவு, எது பச்சையான உணவு இல்லை என்று கூறுவாள்!*

*ரோட்டரியின் பரிசு:* *நண்பர்கள்தான்! இந்தியாவில் மட்டுமல்ல, உலக அளவில் நண்பர்கள் கிடைத்தது தான் பரிசு. ரோட்டரியில் இணைந்த பிறகு அதன் மூலமாக பிறருக்கு நல்லது செய்ய முடிகிறது, நாமும் தனிப்பட்ட முறையில் உயர முடிகிறது. இதையெல்லாம் உணர்ந்தேன். என் மனைவி ஹஸீனா இப்போது இல்லை. அந்த வெற்றிடத்தை ரோட்டரி நிரப்பி வருகிறது.*

*அவளுக்கு 2014 ஆகஸ்டில் புற்றுநோய் இருந்தது கண்டறியப் பட்டது. 2015 ஜனவரி 1ம் தேதி இறந்துவிட்டாள். என் மகன், மருமகள் இருக்கிறார்கள். வீட்டில் யாருமே இல்லை என்ற உணர்வு இல்லை.*

நட்சத்திர அந்தஸ்தையே பெற்று வருகிறது. திரட்டு நன்கொடையில் குறைந்த அளவே நிர்வாகத்துக்கும், ஃபவுண்டேஷன் மேம்பாட்டுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

எனது குடும்பத்தினர் குஜராத் மாநிலம் ராஜ்கோட்டுக்கு 100 கி.மீ. தொலைவில் உள்ள பகஸாரா என்ற சிற்றூரைச் சேர்ந்தவர்கள். ஆனால், நான் பிறந்து வளர்ந்தது மும்பையில்தான். என் பெற்றோர் படிக்காதவர்கள். தாயார் நாங்கள் நன்றாகப் படிக்க வேண்டும் என உறுதியோடு இருந்தார். செயின்ட் மேரிஸ் பள்ளியில் படித்து, செயின்ட் ஜேவியர் கல்லூரியில் பட்டம் முடித்தேன். பிறகு, கோல்கத்தா ஐஐடியில் இடம் கிடைத்த அதே சமயம் அமெரிக்காவின் ஒரு பல்கலைக்கழகத்தில் படிக்கும் வாய்ப்பு பெற்றேன். ஆனால், என் தந்தையின் அறிவுரையை மதித்து இந்தியாவிலேயே



*மனைவி ஹசினாவுடன் வஹன்வதி.*

*அப்போதெல்லாம் ரோட்டரி குறித்து அதிகம் தெரியாது. பம்பாய் ரோட்டரி சங்கத்தை பணக்காரர்கள் சங்கம் என்று நினைத்திருந்தேன்.*



TRF *அறங்காவலராக ஹாம்பர்க் மாநாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட பொழுது வஹன்வதி.*

தங்கி மேற்படிப்பு முடித்தேன்.

கோல்கத்தா ஐஐடியில் படிப்பு முடித்து கேம்பஸ் இன்டர்வியூ மூலம் டாடா நிர்வாக சேவையில் 1970ம் ஆண்டு சேர்ந்தேன். பயிற்சியை நிறைவு செய்து விட்டு டாடா எண்ணெய் ஆலையில் (பின்னர் அது விற்கப்பட்டுவிட்டது) சந்தைப் பிரிவில் சேர்ந்து 4 ஆண்டு பணியாற்றினேன். தந்தை உடல் நலம் குன்றியதால், 1974ல் பதவி விலகினேன். பெருந்தன்மை கொண்ட நிறுவனம் நான் விலகும் காரணத்தைக் கேட்ட பிறகு, ஓராண்டு விடுமுறை அளித்தது.



இதனிடையில் ஆறு மாதத்தில் என் தந்தை இறந்துவிட்டதால், அதற்காகத் துக்கம் விசாரிக்க வந்த கம்பெனி மேலதிகாரிகள் எனக்கு மேலும் ஓராண்டு விடுப்பு அளித்தனர். இரண்டு ஆண்டுகள் அடுத்து என்ன செய்வது என யோசிக்க அவகாசம் கிடைத்தது. பிறகு எங்கள் குடும்பத்தொழிலை பார்த்துக்கொள்ள முடிவு செய்தேன். எங்களது நிறுவனத்தில் கப்பல் உடைக்கும் பிரிவு உண்டு. கொச்சியில் கப்பல் உடைக்கும் தளத்தைப் பெற்று பணியைத் தொடங்கினோம். அங்கே நிறைய பிரச்சினை இருந்ததால், அதை மூடிவிட்டோம்.

இப்போது வேறு தொழிலில் ஈடுபட்டு வருகிறேன். ரேமண்ட்ஸ் நிறுவனத்துடன் இணைந்து மும்பையில் ஷோ ரூம் நடத்தி வருகிறேன். ஓரா ஜுவல்லரி (Ora jewellery) என நகைக்கடை, கேச்சே (Cache) என்ற கைவினைப் பொருள் விற்பனையகம் நடத்தி வருகிறேன் என்று வஹன்வதி கூறினார்.

**ரோட்டரி பயணம்:**

அது 1978ம் ஆண்டு. ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை என்று நல்ல நினைவு இருக்கிறது. டைம்ஸ் ஆப் இந்தியா நாளேட்டில் ஒரு விளம்பரத்தைப் பார்த்தேன். அதில், அமெரிக்காவில் உள்ள இந்தியா இளைஞர் பரிமாற்றத் திட்டத்தில் பங்கேற்க விரும்பும் 25 வயது முதல் 35 வயது வரையானோர் விண்ணப்பிக்கலாம் என்று இடம்பெற்றிருந்தது. மனைவி ஹஸீனாவிடம் கேட்டேன். விண்ணப்பித்துப் பாரேன். யார் கண்டார், உங்களுக்கே கிடைக்கலாம் என்றாள். விண்ணப்பித்தேன். இறுதியில் எனக்கு வாய்ப்பு கிடைத்தது.

அப்போதெல்லாம் ரோட்டரி குறித்து அதிகம் தெரியாது. பம்பாய் ரோட்டரி சங்கத்தை பணக்காரர்கள் சங்கம் என்று நினைத்திருந்தேன். காரணம் சங்கத்தைச் சேர்ந்தவர்கள்



*வஹன்வதி தன் தாய் ஃபாதிமா மற்றும் குடும்பத்தினருடன்.*

வாரந்தோறும் நட்சத்திர ஹோட்டலான தாஜ் மகாலில் கூடுவர், ஆடம்பரமான உணவைச் சாப்பிடுவார்கள். ஆனால், ரோட்டரி கூட்டங்களுக்குச் செல்ல ஆரம்பித்த பிறகு ரோட்டரி பற்றிய எனது எண்ணமே மாறிவிட்டது.

இளைஞர் பரிமாற்றத் திட்டத்தில் நூறு பேரில் சிலரே தேர்ந்தெடுக்கப் பட்டனர். எனக்கு அதிர்ஷ்டத்தில் வாய்ப்பு கிடைத்தது. அந்த ஆறு மாத கால பரிமாற்றத் திட்டத்தில் இளைஞர்கள் 13 வெவ்வேறு குடும்பங்களுடன் தங்க வைக்கப்பட்டனர். அத்திட்டம் அந்த அளவுக்கு அழகாக வகுக்கப்பட்டிருந்தது. வாழ்க்கை மேம்பாடு என்றால் என்ன என்பதை அப்போதுதான் அறிந்தேன். அவர்களில் சிலர் இன்றும் எனது தொடர்பில் இருக்கிறார்கள்.

1978 ம் ஆண்டை அடுத்து, 1979ம் ஆண்டு நவம்பரில் பம்பாய் மிட் டவுண் ரோட்டரி சங்கத்தில் இணைந்தேன். 2000ம் ஆண்டில் மாவட்ட ஆளுநராக நியமனம் பெற்றேன். அப்போது அமெரிக்காவில் ரோட்டரி மாவட்ட ஆளுநராகப் பொறுப்பேற்ற ரோட்டரி உறுப்பினர் தங்களுடைய மாவட்ட ரோட்டரி மாநாட்டில் பேசுவதற்காக என்னை அழைத்தார்.

அங்கே ஓர் அதிசயம். நான் விமான நிலையத் தில் அமெரிக்காவில் வந்து இறங்கியபோது, ஒரு குடும்பம் என்னை வரவேற்றது. அதுதான் 22 ஆண்டுகளுக்கு முன் இளைஞர் பரிமாற்றத்திட்டத்தில் தங்கி வசித்தேனே அதே குடும்பத் தினர்தான்! இப்படியெல்லாம் அற்புதம் நிகழ்வது ரோட்டரியில் மட்டும்தான்!

மாவட்ட ஆளுநராக உயர்வதற்கு கடினப் பட்டிருக்கிறீர்களா என்று கேட்கிறீர்கள். எனக்குத் தெரியவில்லை. மாவட்ட ஆளுநராக நான் பொறுப்பேற்க பல ஆண்டுகள் ஆயின. 1985-86ல் நான் ரோட்டரி சங்கத் தலைவர். பிறகு, குழுப் பரிமாற்றத் திட்டத்தில் (Group Study Exchange) மாற்றுக் குழுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். ஆனால், குழுத் தலைவராக ஆக்கப்



றொட்டேரியனின் மனைவி என்ற முறையில் ஹஸீனா மிகவும் ஈடுபடுவாள். எனது ரோட்டரி பயணத்தில் ஒவ்வொரு கட்டத்திலும் அவள் துணையாக இருந்தாள்.

படவில்லை. பிறகு, 2002-03ல் மாவட்ட ஆளுநர் ஆனேன். அது ஒருமித்த முடிவு. அப்போது TRFக்கு எங்களது மாவட்டத்திலிருந்து அதிகமான நன்கொடை வசூலிக்கப்பட்டது. அந்த சாதனை 2006-07 வரை நீடித்தது. பரத் பாண்ட்யா மாவட்ட ஆளுனர் ஆன பிறகே, அந்த சாதனை விஞ்சப்பட்டது. 2004ல் நான் RRFC ஆனேன்.


RI இயக்குநர் பதவிக்கு முயன்றாலும், பிறகு, தி ரோட்டரி ஃபவுண்டேஷன் அறங்காவலராகத் தேர்ந் தெடுக்கப்பட்டேன் என்றார் வஹன்வதி.

ஃபவுண்டேஷன் பதவி ஒரு முரட்டுக் குதிரை போலவா? என்று கேட்டதற்கு புன்னகை பூத்த வஹன்வதி, எனக்கு குதிரையேற்றம் பிடிக்கும். எட்டு வயதிலேயே குதிரை ஓட்டியிருக்கிறேன். டாடா நிறுவனத்தில் பணியாற்றும் வரை ஓட்டியிருக்கிறேன். பிறகு, ராயல் மேற்கிந்திய டர்ஃப் சங்கத்தில் (Royal Western India Turf Club) 10 ஆண்டுகள் இருந்தேன் என்றார்.

தொடர்ந்து பேசிய அவர், செப்டம்பர் 24ம் தேதி RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரி ரஸ்ஸின் என்னைத் தொலைபேசியில் அழைத்து ரோட்டரி அறங்காவலராக நான் நியமிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

எனக்கு எப்படி இதெல்லாம் நடந்தது எனத் தெரியாது. ஆனால், நன்றி கூறுகிறேன். ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநர் பதவியில் இல்லாத ஒருவர் இப்படி அறங்காவலராக நியமனம் பெறுவது மிகவும் அரிது. எங்களது ரோட்டரி மண்டலத்தில் RI முன்னாள் தலைவர் K R ரவீந்திரன், O P வைஷ் ஆகியோர்

## ரோட்டரியில் மனைவி ஹஸீனாவின் பங்கு




*வஹன்வதி மற்றும் ஹசீனா கோவாவில்.*

*ஹஸீனாவும் நானும் 1962ம் ஆண்டு காஷ்மீரில் பயணம் செய்து கொண்டிருந்தபோது சந்தித்தோம். 1969ம் ஆண்டு நிச்சயமானது. 1970ல் திருமணம் நடந்தது.*

*றொட்டேரியனின் மனைவி என்ற முறையில் ஹஸீனா மிகவும் ஈடுபடுவாள். மும்பை மிட் டவுண் இன்னர் வீல் சங்கம் (Inner Wheel Club of Mumbai Downtown) அமைக்கப்பட்டபோது அதன் தலைவர் ஆனாள். 1985 முதல் 1986 வரை அப்பதவியில் இருந்தாள். நான் மும்பை மிட் டவுண் ரோட்டரி சங்கத்தின் தலைவர் ஆனேன். எனது ரோட்டரி பயணத்தில் ஒவ்வொரு கட்டத்திலும் அவள் துணையாக இருந்தாள். குறிப்பாக நான் ரோட்டரி மாவட்ட ஆளுநராக இருந்தபோது அவள் மிகவும் ஈடுபாடு காட்டினாள். ரோட்டரி சங்கத்தின் தலைவர்களாக வந்தவர்களின் மனைவியருடன் அவர் நட்பு கொண்டது சிறப்புக்குரியது. அது அடுத்தடுத்த ஆண்டுகளிலும் தொடர்ந்தது. சொற்பொழிவுக்கு உரைகளைத் தயாரிப்பதில் அவள் துணைபுரிந்தாள். நான் உடை அணிவதில் கூட அவள்தான் வழிகாட்டுவாள். அவள் விமர்சித்தால், அதை மதித்து ஏற்பேன். அது என்னை உயர்த்தியது. இந்தியாவிலும் உலக அளவில் ஆஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய இடங்களில் உள்ள ரோட்டரிகளில் நிறைய நண்பர்களை அவள் பெற்றாள்.*

மட்டுமே அறங்காவலர்களாக இருந்த பிறகே ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநர்கள் ஆயினர். அதைப் போல் ரோட்டரி ஃபவுண்டேஷன் துணைத் தலைவர் (2019 ஜூன் 30 வரை தலைவர்) ப்ரெண்டா க்ரேஸ்ஸி (Brenda Cressey) கூட இயக்குநராக இல்லை என்று கூறினார்.

TRFக்கு பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் ரோட்டரி தலைவர் ரவிசங்கர் ரூ.100 கோடி கொடுத்ததன் மூலம் இந்திய ரோட்டரி நிகழ்த்திய நட்சத்திர செயல்பாடு (Stellar Performance) குறித்து கேட்கப்பட்டது.

*எங்களது ரோட்டரி மண்டலத்தில் RI முன்னாள் தலைவர் K R ரவீந்திரன், O P வைஷ் ஆகியோர் மட்டுமே அறங்காவலர்களாக இருந்த பிறகே ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநர்கள் ஆயினர்.*

பெரிய தொகையை அவர் அளித்துவிட்டால், அவரது தேவைக்கு என்ன செய்வார் என்று கூட யோசிக்கப்பட்டது. அதற்கேற்ப அவருக்குச் சலுகை தருவது குறித்தும் TRF உடன் கூடி முடிவெடுத்தோம்.

உலகளாவிய மானியம் குறித்த பிரச்சினைகள் பற்றி அவர் பேசினார். இருப்பதாகக் கேட்கிறீர்கள். நமது மண்டலத்தில் ஒன்றரை லட்சம் ரோட்டரி உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ரோட்டரி ஃபவுண்டேஷனின் கோட்பாடுகளைப் பின்பற்றாமல் இருப்போரின் எண்ணிக்கை மிகக் குறைவுதான். இருந்தாலும், ஒரு துளி மையை ஒரு குடம் நீரில் விட்டால், நீரின் நிறம் மாறுகிறதல்லவா, அதைப் போல்தான் இதுவும்.

சொற்ப ஆட்கள் அனைத்து அமைப்பின் புகழுக்குக் களங்கம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள் என்று ஒவ்வொரு முறையும் கூறி வந்திருக்கிறேன். இப்போது அந்த எண்ணம் எல்லோரிடமும் ஏற்பட்டுள்ளது. அதில் விழிப்போடு இருக்கிறார்கள். ரோட்டரி ஃபவுண்டேஷன் மானியத்தைப் பெறுவதில் உயர்ந்த தரத்தைக் கட்டிக் காப்பதில் விழிப்போடு இருக்கிறார்கள்

## வழிகாட்டிகள்:

*எனது பெற்றோர்: நான் இளைஞனாக இருந்தபோதே என் தந்தை இறந்துவிட்டார். அவர் நேர்மை, எளிமை ஆகியவற்றை என்னுள் விதைத்துவிட்டார். எல்லாமே எனக்கு அம்மாதான். அவளது பிரார்த்தனைகள் தான் என்னை இப்படி ஆளாக்கியிருக்கின்றன. படிக்காத அவள் நான் நன்கு படிக்க வேண்டும் என்று விரும்பியவள். படிக்காத முஸ்லிம் பெண் தன் குழந்தைகளை நன்றாகப் படிக்க வைத்தது அற்புதம்தான்.*

*கல்யாண் பானர்ஜி: கல்யாண் பானர்ஜியிடம் என்னை வெகுவாகக் கவர்ந்தது, எல்லாவற்றின் மீதும் அக்கறை செலுத்தும் பண்புதான்! அவரைப் போல் எல்லாவற்றையும் கவனித்து, உள் வாங்கிக் கொண்டு, பேச வேண்டும் என்பதில் எனக்கு நிறைய ஆர்வம். கல்யாண் குறைவாகத் தான் பேசுவார். ஆனால், பேசும் ஒவ்வொரு வார்த்தையும் செறிவானது.*



என்றார் வஹன்வதி.

ரவிசங்கரை பெங்களூரில் நான் சென்று சந்தித்தேன். அவருக்கு நிறைய விஷயங்கள் குறித்து தெளிவுபடுத்தினேன்.

இந்தியா அதிக அளவில் உலகளாவிய மானியங்களைப் பெறுவது, அதிகமான தொகையை சமூகப் பணிகளுக்காகப் பெறுவது ஆகிய விவரங்களை அவர் விவரித்தார்.

2017-18ம் ஆண்டில் உலகம் முழுவதும் வழங்கப்பட்ட மானியத்தில் 1.80 கோடி டாலர் இந்தியாவுக்குக் கிடைத்தது. அதையடுத்து இரண்டாவது இடத்தில் தாய்லாந்துக்கு 40 லட்சம்



*வஹன்வதி (இடது புறத்திலிருந்து நான்காவதாக) தன் கல்லூரி பருவத்தில்.*

டாலர் வழங்கப்பட்டது. மிகப் பெரிய தொகையைப் பெற்றிருப்பதால், நாம் அதிக கவனத்துடன் இருக்க வேண்டும்.

இன்னொரு விஷயம், அதிகமான தொகை நமக்கு அமெரிக்காவிலிருந்து கிடைத்துள்ளது. கடந்த ஆண்டு 13.80 கோடி டாலர் கிடைத்தது. அதில் முதல் 10 இடங்களில் உள்ள வேறு எந்த நாடும் இது போல் மானியம் பெறவில்லை. இதில் சிறப்பு என்னவென்றால், நமக்குத் திரும்பக் கிடைக்கிறதோ இல்லையோ என்று பார்க்காமல், அனைவருமே ஃபவுண்டேஷனுக்கு அளித்து உதவுகிறார்கள். இந்தியாவில் உள்ள மூத்த தலைவர்களின் குறிக்கோள் நாம் கொடுப்பவராகத்தான் இருக்க வேண்டுமே தவிர, பெறுபவராக இருக்கக் கூடாது என்பது தான். கடந்த ஆண்டு நாம் 1.90 கோடி டாலர் (சுமார் ரூ.132.8 கோடி) கொடுத்திருக்கிறோம். 1.8 கோடி டாலர் (சுமார் ரூ. 125.78 கோடி) பெற்றிருக்கிறோம். நாம் இந்த வருடம் TRFக்கு அதிகமாக கொடுக்க வேண்டும்.

இவ்வாறு வஹன்வதி கூறினார்.



PRID *சுஷில் குப்தாவுடன் வஹன்வதி.*

புகைப்படங்கள்:
ரஷீதா பகத்
மற்றும் நன்றி
குலாம் வஹன்வதி

வடிவமைப்பு:
S கிருஷ்ணப்ரதீஷ்

# ரோட்டரி உலகம் பின்பற்றும் வகையில் உங்களது மண்டலம் செயல்படுகிறது:

# தெற்காசிய ரோட்டரிக்கு பேரி ரஸ்ஸின் பாராட்டு

ரஷீதா பகத்




**இடது பக்கத்திலிருந்து:** TRF *அறங்காவலர் குலாம் வஹன்வதி, வானதி ரவீந்திரன்,* PRIP KR *ரவீந்திரன் மற்றும்* RID C *பாஸ்கர்.*

தெற்காசிய மண்டலத்தில் இயங்கும் ரோட்டரி அமைப்பு ரோட்டரி உலகமே பின்பற்றும் வகையில் செயல்படுகிறது என்று RI தலைவர் பேரி ரஸ்ஸின் பாராட்டினார். தெற்காசிய நாடுகளின் ரோட்டரி இயக்கங்கள் ஆற்றிய பணிகளைப் பாராட்டிய அவர், ரோட்டரி உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதிலும் TRFக்கு நன்கொடை அளிப்பதும் தெற்காசிய மண்டலத்தில் உள்ள ரோட்டரி ஆற்றிவரும் சேவை அபாரமாக உள்ளன என்று அவர் பாராட்டினார்.

ஜெர்மனி, ஹாம்பர்க்கில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் இவ்வாறு பேசினார்.

நிகழ்ச்சியில் பேரி ரஸ்ஸின் மனைவி எஸ்தர், RI தலைவராகப் பொறுப்பேற்க உள்ள மார்க் மலோனி, அவரது மனைவி கேய் மலோனி, RID C பாஸ்கர், புதிய இயக்குநர்கள் பரத் பாண்ட்யா, கமல் சங்வி, RI முன்னாள் தலைவர்கள் இராஜேந்திர சாபு, கல்யாண் பானர்ஜி, KR ரவீந்திரன், வானதி, TRF அறங்காவலர் வஹன்வதி என ஏராளமான ரோட்டரி பிரமுகர்கள் பங்கேற்றனர்.

ரோட்டராக்ட் கூட்டத்தில் பங்கேற்க வந்துள்ளதாகக் கூறிய ரஸ்ஸின், ரோட்டராக்ட் அமைப்பினர் உற்சாகமாகச் செயல்படுகிறார்கள். வரும் ஜூலை மாதம் உலகம் முழுவதும் ரோட்டராக்ட் சங்கங்களின் எண்ணிக்கை 1,064 ஆகும். அதில் 577 சங்கங்கள் தெற்காசிய மண்டலத்தில் அமைகின்றன. இது குறித்துப் பெருமைப்படுகிறேன் என்றார்.

**ரஸ்ஸின் மேலும் பேசியதாவது:**

தெற்காசியா உறுப்பினர்களின் வளர்ச்சியில் மட்டுமல்ல, TRFக்கு நன்கொடை அளிப்பதிலும் முதலிடத்தை விரைவில் எட்டும் என்று நம்புகிறேன். உங்களால் முடியும். தாராள மனமும் உற்சாகமும் கொண்டவர்கள். உலகையே ஈர்க்கும் திறனும் உள்ளவர்கள். ராஜேந்திர சாபூவும் அவரது மனைவி உஷாவும் அற்புதமான பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருவதற்காக விசேஷமான நன்றிகளைக் கூறிக் கொள்கிறேன். சாபூ எப்போதும் எனக்குத் தலைவர். 1991-92ம் ஆண்டு RI தலைவராக இருந்தபோது எப்படி செயல்பட்டாரோ அதைப் போல் இன்றும் உதவிக் கரம் நீட்டுவதில் அதே உற்சாகத்துடன் செயல்படுகிறார் சாபூ.

மடகாஸ்கர் நாட்டில் இரு மருத்துவமனைகளில் இந்தியாவிலிருந்து 19 சர்ஜன்கள், 15 தன்னார்வத் தொண்டர்களுடன் மருத்துவப் பணி (VTT Medical Mission) புரிந்தபோது அவர்களுடன் பங்கேற்றதைப் பெருமையாகக் கருதுகிறேன். எட்டு நாட்கள் மருத்துவப் பணி புரிந்து சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தினர். உலகம் முழுதும் உள்ள VTT மெடிக்கல் மிஷனுக்கு சிறப்பு பாராட்டுகளைத் தெரிவிக்க வேண்டும்.

ரோட்டரி சட்ட விதிகளின் கீழ் ரோட்டராக்ட் அமைப்பு RIல் ஓர் அங்கமாகி விட்டது. இளைய தலைமுறையினருக்கு இது ஓர் கவுரவம். ரோட்டராக்ட் அமைப்பினர் ரோட்டரியில் இடம் பெறும் வகையில் ரோட்டேரியன்கள் அவர்களுக்கு வழிகாட்டியும் கண்காணித்தும் உதவ வேண்டும். உலகம் முழுவதும் ரோட்டரி சங்கங்கள் எல்லாம் மாறுதலுக்குத் தயாராக வேண்டும். காரணம், இன்றைய உலகுக்கு ஏற்ப புதிய சிந்தனையை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அப்படிச் செய்தால்தான் நாம் இன்னும் சாதிக்க முடியும்.

உலகில் மனிதாபிமான அமைப்பில் முதலிடம் பெற்றுள்ள இயக்கம் ரோட்டரி இயக்கம்தான் என்றாலும், அதை இன்னும் வலுவுள்ளதாக்க வேண்டும். வளர்க்கவேண்டும். அந்த அமைப்பின் நற்பணிகளை சமுதாயம் அறிந்து கொள்ளவேண்டும், அப்போதுதான் கூட்டாளிகளை இணைத்துக்கொண்டு செயல்பட



RID C *பாஸ்கர்,* PDG *ஸாம் பதிபந்தலா,* RIDE *பரத் பாண்ட்யா,*
PDG *ராஜா சீனிவாசன் மற்றும் ஜெயந்தி சீனிவாசனுடன்.*



RI *தலைவர் பேரி ரஸ்ஸின்.*

முடியும். உலகில் போலியோவை ஒழிக்க வேண்டும் என்பதிலிருந்து நமது பார்வை வேறெங்கும் திசை மாறிப் போகக் கூடாது. இந்த விஷயத்தில் பாகிஸ்தானைச் சேர்ந்த ரோட்டரி மாவட்ட முன்னாள் ஆளுநர் அஜீஸ் பாராட்டுக்குரியவர். பாகிஸ்தானிலும் ஆப்கானிஸ்தானிலும் போலியோவை முற்றிலுமாக ஒழிப்பதில் பாகிஸ்தான் நாட்டு ரோட்டேரியன்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களுக்கு இந்த மண்டலத்தில் போதிய ஆதரவு தேவைப்படுகிறது. மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதிலும் கல்வி, ஆரோக்கியம், குடிநீர், சுகாதாரம் என அனைத்துத் துறைகளிலும் நாம் கவனம் செலுத்தி வருகிறோம். அதே சமயம், போலியோவை ஒழிப்பது என்ற உறுதியை உலகம் முழுதும் உள்ள நமது குழந்தைகளுக்கு அளித்திருக்கிறோம். அதை நிறைவேற்ற வேண்டும். நிறைவேற்றுவோம் இவ்வாறு ரஸ்ஸின் பேசினார்.

ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மார்க் மலோனி, தெற்காசிய மண்டலத்தில் ரோட்டரி தனித்தன்மை கொண்டது என்று புகழ்ந்துரைத்தார்.

அவர் பேசுகையில், கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக இந்தியாவில் ரோட்டரியின் உறுப்பினர் எண்ணிக்கை 56 சதவீதம் உயர்ந்துள்ளது. உலகில் ரோட்டரி ஃபவுண்டேஷனுக்கு அதிகமான நன்கொடை வழங்கும் நாடுகளில் இந்தியா இரண்டாவது இடத்தில் இருக்கிறது. உலகில் மிகச் சிறந்த சேவையை ஆற்றிவரும் எந்த ரோட்டரி சங்கங்களையும் விட இந்திய ரோட்டரி சங்கங்கள் மிகச் சிறந்த சேவையைச் செய்து வருகின்றன என்று குறிப்பிடுவேன். கடந்த சில ஆண்டுகளாக தெற்காசியாவில் உள்ள ரோட்டரி அமைப்புகளும் ரோட்டரி உறுப்பினர்களும் தூண்டுகோலாக அமைந்துள்ளனர். நாம் அனைவரும் இணைந்து 2019-2020ம் ஆண்டில் செயல்படுவோம் என்று குறிப்பிட்டார்.

ரோட்டரி இன்டர்நேஷனல் முன்னாள் தலைவர் ராஜேந்திர சாபூ பேசுகையில், தெற்காசிய



**இடது பக்கத்திலிருந்து:** *புனே* RID 3131 *லிருந்து சோபா மற்றும்* PDGs *அருண் குடளே, வினய் குல்கர்னி,* DGN *ரேஷ்மி குல்கர்னி, மகேஷ் பாக்பத், சாரு ஷ்ரோட்ரி* PDG *அபய் காட்கில் மற்றும் பங்கஜ் ஷா.*

# சுசீல் குப்தா பங்கேற்காத கூட்டம்

*இந்தக் கூட்டத்தில் RI தலைவர் பதவிக்கான பரிந்துரையிலிருந்து விலகிவிட்ட சுசீல் குப்தா இதில் பங்கேற்கவில்லை. உடல் நலம் காரணமாக அப்பதவியை ஏற்க இயலாது என்று பரிந்துரை நிலையிலேயே அறிவித்துவிட்டார் அவர். தெற்காசிய வரவேற்புக் கூட்டத்திலும் அதற்கான ஆயத்த அமர்விலும் அவர் பங்கேற்கவில்லை.*

*இதை RI தலைவர் பதவிக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள ஹோல்கர் நாக் அறிவித்தார். RI தலைவர் பதவிக்கு என் பெயர் தேர்ந்தெடுக்கப்பட்டது மகிழ்ச்சி தந்தாலும், சுசீல் குப்தாவின் உடல் நிலையை நினைத்து மனம் வருத்தப்படுகிறது.*



*அவர் விரைவில் பூரண குணமடையவேண்டும் என்றார்.*

*தெற்காசிய வரவேற்புக் கூட்டத்தில் பேசிய RI முன்னாள் தலைவர் கல்யாண் பானர்ஜி, அற்புதமான இந்த நிகழ்ச்சியில் நண்பர் சுசீல் குப்தா பங்கேற்காதது வருத்தமளிக்கிறது. கடவுள் அருளால் தற்போது உடல் நலம் தேறி வருகிறார். அவருக்கு இது சோதனைக்காலம். நாம் எல்லோரும் விரைவில் அவர் பணியில் ஈடுபடவேண்டும் என பிரார்த்தனை செய்வோம் என்றார்.*

*தெற்காசிய வளர்ந்து வரும் மண்டலம், TRFக்கு நன்கொடை அளிப்பதில் இரண்டாம் இடம் வகிக்கிறது. ரோட்டரி சங்கங்கள் அளித்து வரும் சேவைகள் இணையற்றவை. RI அமைப்பில் பொறுப்பேற்க இருக்கும் பாரத் பாண்ட்யா, கமல் சங்வி ஆகியோர் அறங்காவலர் குலாம் வஹன்வதி ஆகியோரது தலைமைகளில் மகத்தான காலம் இருக்கிறது என்றார் கல்யாண்.*

வரவேற்புக் குழுவில் ஆரம்பத்தில் 50, 60 பேர் மட்டுமே இருந்தனர். 75 சதவீதம் பேர் அழைப்பாளர்கள். தெற்காசியாவைச் சேர்ந்தவர்கள் வெகு சிலரே. வரவேற்புக்கான நிகழ்ச்சி காலையில் தொடங்கியது. இதுதான் நமது பண்பாடு.  இன்று அரங்கமே நிரம்பி வழியும் வகையில் கூட்டம் கூடியது என்றார். C. பாஸ்கர் சீரிய தலைமையை சாபூ வெகுவாகப் பாராட்டினார்.

நிகழ்ச்சியில் பேசி கல்யாண் பானர்ஜி,  ரோட்டரி உலகின் மூத்த தலைவர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்பது பெரும் மகிழ்ச்சி அளிக்கிறது என்றார். சென்ற முறை தனது மனைவி பினோடாவுடன் வந்ததைச் சுட்டிக் காட்டிய அவர், உடல் நலமில்லாததால் இம்முறை அவர் பங்கேற்கவில்லை என்றார்.

இந்த முறை மாநாடு விஷயத்தில் சிறிது பரபரப்பாக இருந்த என்னிடம் என் மனைவி, 'கல்யாண்,  வீட்டில் இருக்காதீர்கள்.  மாநாட்டில் நீங்கள் பங்கேற்கவேண்டும்' என்றார். நான் எப்போதும் மனைவி பேச்சைத் தட்டுவதில்லை. அதனால், இங்கே வந்திருக்கிறேன் என்றார் அவர்.



*கேய் மற்றும் RIPE மார்க் மலோனி.*

இந்தியக் குழுவுக்குச் சிறப்பாகத் தலைமை ஏற்கும் C. பாஸ்கரை வெகுவாகப் பாராட்டிய கல்யாண் பானர்ஜி, பாஸ்கர் புதுமையாகவும் விரைவாகவும் உறுதியான வகையிலும் தலைமை வகித்துச் செயல்படுகிறார். ராஜா சாபூ நாளுக்கு நாள் இளமையாக மாறி வருகிறார். அவரால் எப்படி முடிகிறது என்று அறிய விரும்புகிறேன். K.R. ரவீந்திரன் நடப்பதேயில்லை. பறக்கிறார். அவ்வளவு சுறுசுறுப்பு! அத்துடன் தன்னோடு பணிபுரிவர்களையும் அதே வேகத்தில் அழைத்துச் செல்கிறார். ரோட்டரியில் நமது பகுதியில் அற்புதமான தலைவர்களைப் பெற்றிருக்கிறோம் என்று கூறினார்.

இந்தியா, நேபாளம், இலங்கை,. பாகிஸ்தான், வங்க தேசம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த ரோட்டரியன்களின் பணியைப் பாராட்டிய கல்யாண் பானர்ஜி, அவர்கள் தெற்காசியாவில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர். அதுவும் சிறிய நாடான நேபாளம் ரோட்டரி ஃபவுண்டேஷனுக்கு அதிகமான நன்கொடையை அளித்து ள்ளது என்று பாராட்டினார்.

ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவராக பரிந்துரைக்கப்பட்ட (RIPN) நாக் (Knaack) தானும் தன் மனைவி சூசனும் 2020-2021-ம்



RIDE *கமல் சங்வி, சந்தோஷ் குமார் சாஹூ, நயன் பட்டேல் மற்றும் சோனல் சங்வி.*

## தலைவரின் சிறப்புரிமை

*நிகழ்ச்சியில் பேசிய RI தலைவராகப் பரிந்துரைக்கப் பட்ட மார்க் மலோனி, தலைவருக்கு உரிய சிறப்பு உரிமையில் ஒரு சிறப்பு விருந்தினரை அறிமுகப் படுத்துகிறேன் என்று கூறிவிட்டு தனது பேரன் பேட்ரிக்கை அரங்கில் அறிமுகம் செய்தார். இவன் எங்களது அறைக்குள் நுழைந்தபோது, இங்கே வருகிறாயா என்று கேட்டோம். உடனே அதற்கு இசைந்து வந்தான். ரோட்டரி இயக்கத்தை குடும்பத்துக்கு இணக்கமான அமைப்பாக மாற்ற விரும்புகிறேன். அதை வீட்டிலேயே தொடங்கலாம் என்று நினைக்கிறேன் என்றார்.*

*கடந்த பல மாதங்களாக சுசீல் குப்தாவுடன் இணைந்து பணியாற்றும் அரிய சந்தர்ப்பம் இனிமேல் சில காலம் இருக்காது என்பது வருத்தமானது. விரைவில் குணமடைந்தபின் அவருடன் இணைந்து பணியாற்றுவேன் என்றார் மார்க் மலோனி.*

*RI போர்டில் ஓராண்டு RID C பாஸ்கருடன் இணைந்து பணியாற்றியதில் நிறைய கற்றுக் கொண்டேன். அதைப் போல் ராஜேந்திர சாபூ, கல்யாண் பானர்ஜி, KR ரவீந்திரன் ஆகியோரிடமும் வழிகாட்டுதல், அறிவுரைகள் பெற்றுக் கொண்டிருக்கிறேன். அவர்களுக்கு நன்றி. புதிதாக இயக்குநர்களாகும் பாரத் பாண்ட்யா, கமல் சங்வி ஆகியோருடன் பணியாற்ற ஆவலாக இருக்கிறேன். அத்துடன் என் இனிய நண்பர் குலாம் வஹன்பதி TRF சேவையில் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறார். இந்திய ரோட்டரியின் பணிகளுக்கு முக்கியத்துவம் உண்டு. இந்தியாவுக்கு அடிக்கடி வருவேன். அதைப் போல் அடிக்கடி செல்லப்போகும் இடம் ரோட்டரி தலைமையகம் உள்ள இவான்ஸ்டன் ஆகும் என்றார்.*

ஆண்டுக்கான RI தலைமை குறித்து விவாதித்ததாகக் கூறினார். அத்துடன் புதிதாகப் பொறுப்பேற்கும் மார்க் மலோனி, பரத் பாண்ட்யா, சங்வி ஆகியோருடன் இணைந்து பணி யாற்றுவதையும் ஆவலாக எதிர் பார்ப்பதாக அவர் குறிப்பிட்டார்.

தெற்காசிய மண்டல ரோட்டரியன்களின் அர்ப்பணிப்புள்ள பணியை RID C பாஸ்கர் பாராட்டினார். ரோட்டரி மாநாட்டில் பங்கேற்கும் வாய்ப்பை யாரும் தவிர்க்க வேண்டாம். உலக அளவில் ரோட்டரியினருடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள அது சிறந்த வாய்ப்பை அளிக்கும் என்றார்.


மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் EK சகாதேவன் வரவேற்புரை வழங்கினார். RI இயக்குநர் பதவிக்குப் பரிந்துரைக்கப்பட்ட பரத் பாண்ட்யா நன்றி கூறினார்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

ADVT

# With best compliments from



## Rtn Prof Dr A Zameer Pasha

M.S., FRCS (Eng)., FACS (USA)., FICS., FAIS., FRCS., FACS., FIAMS., Dip. MAS., FIAGES., FALS.,

**District Governor 2019–20, RID 3000**
President – IAGES - Indian Association of GE Surgeons (2017–18)
President – International College of Surgeons, India (2015–17)
Founder Chairman, Hospital Board of India – IMA, New Delhi
All India Chairman, IMA – AMS, New Delhi (2010–11)

**Dr (Mrs) Shakila Zameer,** MBBS., D.G.O., FIAMS.,
**Dr Z Shakir Tabrez,** M.S., M.Ch (Urology), Dip.M.I.S., (Urology)., FICS., FIAGES.,
**Dr Z Rubina Shanawaz,** M.S., (Obs. & Gyn.) FICS.,




# SHANAWAZ HOSPITAL

(ISO 9001-2000 CERTIFIED)

● Pioneer Laparoscopic Centre ● Shakir Images
● A.G.Laser Institute ● Ruby Stone Clinic

### First to introduce:

1. Laparoscopic Surgery
2. Laser Surgery
3. Lithotripsy
4. 3D Laparoscopy

### In south Tamil Nadu

**Specialized Centre for**
**Advanced Laparoscopic Surgery Laser Surgery**
**Lithotripsy — ESWL for Calculi**

Post Box No. 941, A-20, Main Road, Thillainagar, Thiruchirappalli – 620 018.
Phone No. 0431-2740290, 2741565, 2740575 Fax No. 0431-2741131, e-mail: drzameer2k@gmail.com

# ஹேம்பர்க்கில் இந்திய ரோட்டரியின் விருந்தோம்பல்



கேய் மற்றும் RIPE மார்க் மலோனி தங்கள் பேரக்குழந்தை பாட்ரிக்குடன்.



PRIP ராஜேந்திர சாபூ PRIP ஜான் ஜேர்ம் மற்றும் ஜூடியுடன்.



உஷா சாபூ மற்றும் TRF அறங்காவலர் ஜூலியா ஃபெல்ப்ஸ்.








RIDE பரத் பாண்ட்யா, மாதவி, PRIP KR ரவீந்திரன் மற்றும் PDG கணேஷ் பட்.



பாகிஸ்தான் போலியோப்ளஸ் கமிட்டி தலைவர் அஸீஸ் மேமன், கன்வென்ஷன் தலைவர் ஜான் ப்ளொண்ட, பாட்ரீஷியா, PRID சேகர் மேத்தா மற்றும் கமல் சங்வி.



PRIP கல்யாண் பானர்ஜி சில மூத்த RI தலைவர்களுடன்.



எஸ்தர் மற்றும் RI தலைவர் பாரி ரஸ்ஸின்.



PDG ராஜு சுப்ரமணியம், ஷர்மிஷ்தா, PRID மனோஜ் தேசாய் மற்றும் DG ராஜீவ் சர்மா.



மேலே: TRF அறங்காவலர் குலாம் வஹன்வதி மற்றும் PDG EK சகாதேவன்.

கீழே: PRID சேகர் மேத்தா, ராஷி மற்றும் PDG ராஜு சுப்ரமணியம்.











சோனல் சங்வி
மற்றும்
மாதவி
பாண்ட்யா.



RID பாஸ்கர், மாலா, மாதவி, RIDE பரத் பாண்ட்யா,
PDG சாம் பதிபண்ட்லா மற்றும் PRIP KR ரவீந்திரன்.



PDG பாஸுதேவ் கோலியான்,
PDG சாம் பதிபன்த்லா, RIDE கமல் சங்வி
மற்றும் PDG சுபாஷ் சாஹூ.



DGN முத்து பழநியப்பன், DGE G சந்திரமோஹறன்,
PDG பாஸுதேவ் கோல்யான்
மற்றும் ISAK நாசர்.



RIPN ஹோல்கர் நாக் மற்றும் மனைவி சுசேனுடன்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்; வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

# RI போர்டில் 6 பெண்கள்

ரஷீதா பகத்

ரோட்டரியின் விழுமியங்களில் குறிப்பிடத் தக்கது பன்முகத்தன்மை. நாம் மனித சமுதாயத்தின் அனைத்துப் பிரிவுகளையும் பிரதிபலிக்க வேண்டும். பல்வேறு மொழிகள் பேசுவோர், பல்வேறு தரப்பட்ட மனிதர்கள், வயது, பாலின வேறுபாடு, இனம் என அனைத்து வகையினரையும் உள்ளடக்கியதுதான் பன்முகத் தன்மை என்று RI தலைவர் பேரி ரஸ்ஸின் கூறினார்.

ரஸ்ஸின் பேசியபோது ஒவ்வொரு கட்டத்திலும் கரவொலி எழுந்தது. அவர் பெண்களின் பங்களிப்பை வலியுறுத்தியபோது, பெண்களிடமிருந்து மிகுந்த வரவேற்பு கிடைத்தது. அதைப் போல் ரோட்டராக்ட் அமைப்பினரைப் பாராட்டிப் பேசியபோதும் நல்ல வரவேற்பு இருந்தது. இந்த மாநாட்டில் 170 நாடுகளைச் சேர்ந்த 27,000 பேர் கலந்துகொண்டனர்.

ஹாம்பர்க் மாநாட்டின் தொடக்க விழாவில் அவர் ஆற்றிய உரை:

பெண்கள் அதிக அளவில் ரோட்டரியில் பங்கேற்க வேண்டும். தலைமைப் பொறுப்புகளை ஏற்க வேண்டும். அதனால்தான் 2023ம் ஆண்டு ஜூன் மாதத்துக்குள் தலைமைப் பொறுப்புகளில் பெண்களுக்கு 30 சதவீத இடம்தரவேண்டும் என்று ரோட்டரி போர்டு இலக்கு நிர்ணயித்துள்ளது. அதற்கு நாம் உறுதி பூண்டுள்ளோம். அதை எட்டுவோம் என்று நம்புகிறேன்.

### தலைமை


2020-21ம் ஆண்டு ரோட்டரி போர்டில் முதல் முறையாக 6 பெண்கள் இடம்பெறுகிறார்கள். அது போர்டில் 31 சதவீதமாகும். தற்போது, ரோட்டரி ஃபவுண்டேஷன் தலைவராக ப்ரெண்டா க்ரேஸி (Brenda Cressey) என்ற பெண் தலைவராகியிருக்கிறார்.

சமூகப் பணி செய்வதற்குத் தலைமை தாங்கும் நாம் நமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வது நல்லது. கடந்த ஓராண்டில் உலகம் முழுதும் உள்ள ரோட்டராக்டர்கள் காட்டிய அற்புதமான தலைமை என்னை வெகுவாக ஈர்த்துவிட்டது.

மூத்த தலைவர் ஒவ்வொருவராக அடுத்தடுத்து ரோட்டராக்டர்களை அழைக்க வேண்டும் என விரும்புகிறேன். மேடையில் என்னுடன் அமர்ந்திருந்த ஒருவர் "உண்மையிலேயே இது ரோட்டராக்டர்களின் மாநாடு போல இருக்கிறது" என்றார்.

இந்த ஹாம்பர்க் நகரத்தில்தான் இருபதாம் நூற்றாண்டில் பீட்டில்ஸ் (Beatles) என்ற இசை நிகழ்ச்சி வகை தோன்றியது.

ரோட்டராக்ட் அமைப்பினர் ரோட்டரியின் பாறை போன்றவர்கள். நமது கனவுகளுக்கும் நிகழ்வுகளுக்கும் அவர்கள் தூண்டுகோலாக உள்ளனர். ரோட்டரி அமைப்புக்காகப் பல காலம் சேவையாற்றிய ரோட்டரியின் மூத்த தலைவர்கள் ரோட்டராக்டர்கள் கூறும் யோசனைகளுக்குச் செவிமடுத்து, செயல்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள்தான் நமது எதிர்காலம், என்றார்.



*RI தலைவர் பேரி ரஸ்ஸின்*

### முதல் மாநாடு

தான் பங்கேற்ற முதல் மாநாட்டைப்பற்றி நினைவு கூர்ந்த ரஸ்ஸின், நான் பங்கேற்ற முதல் மாநாட்டை மறக்கவே முடியாது என்றார். அது லாஸ் வெகாஸ்

நகரில் நடைபெற்றது. சரி போய் ஜாலியாக அனுபவிக்கலாம் என்று கலந்துகொண்டேன். அங்கே கிடைத்த அனுபவம் வாழ்க்கையையே மாற்றிவிட்டது. அதற்கு முன் ரோட்டரி சங்கம், மாவட்ட ரோட்டரி ஆகியவை என்னவெல்லாம் செய்திருக்கின்றன என்பதுதான் எனக்குத் தெரியும். ஆனால், உலகில் ஒவ்வொரு நாளும் மகத்தான சேவைகளை ரோட்டரி செய்து வருகிறது என்பதையும் பல லட்சம் பேரின் வாழ்க்கையே மாறியிருக்கிறது என்பதையும் அறியவில்லை.

லாஸ் வெகாஸ் மாநாடுதான் ரோட்டரியில் நான் செலுத்தும் அர்ப்பணிப்பு உணர்வுக்குத் தொடக்கமாக அமைந்தது. அதுதான் ரோட்டரியில் உயர்ந்த நிலையை நான் எட்டுவதற்குத் துணைபுரிந்தது. அங்கே சந்தித்த மனிதர்கள், அவர்கள் பகிர்ந்துகொண்ட பல நிகழ்வுகள், தகவல்கள் என்னைக் கட்டிப்போட்டது. RI நிறுவனர் பால் ஹாரிஸ் ஒரு முறை கூறியதைப் போல், “ரோட்டரி என்ற சொல்லுக்கு நம்மைப் பொறுத்தவரையில் என்ன அர்த்தம் வந்தாலும் உலகைப் பொறுத்தவரையில் அது சாதனைகளின் பலன்கள் என்றுதான் கருதப்படும்” என்றார்.

**மாயாஜாலம் இல்லை!**

அத்தகைய நல்ல பலன்கள் மாயாஜாலத்தில் கிடைப்பதில்லை. மாறாக, நமது இடைவிடாத அர்ப்பணிப்பு மற்றும் விழுமியங்களின் மூலம் அமைவதாகும்.

அடுத்த நான்கு நாள் நிகழ்ச்சியில் ரோட்டரியின் நெறிகள், தலைமைத்துவம், சகோதரத்துவம், சேவை மனப்பான்மை, நேர்மை ஆகியவற்றை வெளிப்படுத்தும் வகையில் உத்வேகம் அளிக்கும் சம்பவங்கள் இடம் பெறும். அவையெல்லாம் ரோட்டரி அமைப்பினருக்கு வெறும் வார்த்தைகள் அல்ல. நமது பண்பாட்டையும் செயல்பாட்டையும் வழிநடத்தும் கோட்பாடுகள் ஆகும்.

குழு மனப்பான்மை ரோட்டரியின் இன்னொரு முக்கியமான அம்சம் ஆகும். இணைந்து செயல்படுவதுடன் எல்லையற்ற ஆற்றலை வெளிப்படுத்தி பயன்படுத்துவோம். நமது சகோதரத மனப் பான்மை எல்லைகளைக் கடந்து விடுகிறது. ரோட்டரியை உலக அளவில் அமைதிக்கான சக்தியாக மாற்றிவிடுகிறது. அதே சமயம் ரோட்டரி தலைமையை ஏற்க விரும்பினால் நேர்மையான செயல்பாடு தேவை. காரணம், அதுதான் பணியாற்றும் சமுதாயத்தின் நம்பிக்கையைப் பெற இயலும்.

நேர்மை என்றால் மோசமான நடத்தையைச் சகித்துக் கொள்வதல்ல. நமது அலுவலர்கள், நண்பர்களிடமிருந்து பொறுப்புணர்வை எதிர்பார்ப்பது, தொழில் அடிப்படையிலும் தனிப்பட்ட முறையிலும் உயர்ந்த நெறிகளைக் கடைப்பிடித்தல் ஆகும். பிறவற்றில் ஈடுபடும்போது, நாம் சரியாகவும் பொறுப்புடனும் இருக்கிறோம். நம்மிடம் உள்ளவற்றை கவனமாகவும் பொறுப்பாகவும் பயன்படுத்துகிறோம். நேர்மையோடு செயல்பட்டால்தான் சமூகப் பணியில் வெற்றி பெற இயலும்.



**போலியோ ஒழிப்பில் கவனம்**

போலியோவை ஒழிப்பதில் வெற்றியை எட்டுகிறோம். அதையடுத்து, போலியோ இல்லாத உலகை உருவாக்குகிறோம். இதில் நல்ல முன்னேற்றத்தைக் கண்டாலும், போலியோவை முற்றிலுமாக ஒழிப்பதற்கான கடைசிக் கட்டம் மிகவும் கடினமானது. எனவே, இந்த மாநாட்டின் ஓர் அமர்வு போலியோ ஒழிப்புக்கு சிறந்த யோசனைகளைக் கண்டறிய வேண்டும். சர்ச்சையான இடங்களில் குழந்தைகளைக் காக்க போலியோ ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்திகளைக் கண்டறிய வேண்டும்.

*லாஸ் வெகாஸ் நகரில் நடைபெற்றது. சரி போய் ஜாலியாக அனுபவிக்கலாம் என்று கலந்துகொண்டேன். அங்கே கிடைத்த அனுபவம் வாழ்க்கையையே மாற்றிவிட்டது.*

அந்த உத்திகள் போதிய வெற்றியைத் தரும் என்ற நம்பிக்கை உள்ளது. போதிய சாதனங்களும், திறமையான செயலாக்கமும் தேவை. உங்களது சேவை இதைச் செயல்படுத்தியுள்ளது. உலக அளவில் அனைத்துக் குழந்தைகளும் மகிழ்வோடு இருக்க உங்களது சேவை தேவைப்படுகிறது.

இந்த மரத்தான் ஓட்டத்தில் கடைசி கட்டத்தில் இருக்கிறோம். கடைசிக் கட்டம்தான் சவாலானது. எல்லைக் கோடு தெரிந்துவிட்டது. வேகத்தை, செயலை நிறுத்தக் கூடாது. குழந்தைகளுக்கு நாம் அளித்த உறுதியைக் காப்பாற்ற வேண்டும் இவ்வாறு ரஸ்ஸின் பேசினார்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

# ஹேம்பர்க்: ரோட்டரி மாநாட்டின் சில நினைவுகள்

ரஷீதா பகத்



ரோட்டரியின் ஒவ்வொரு சர்வ தேச மாநாடும் தனித்தன்மையான நிகழ்வுகளைக் கொண்டுள்ளது. என்னைப் பொறுத்த வரையில் ஜெர்மனி ஹேம்பர்க் நகரில் நடைபெற்ற சர்வதேச ரோட்டரி மாநாட்டில் நிறைவு நிகழ்ச்சியும் அதில் இடம் பெற்ற ‘அபா’ குழுவின் பேண்டு இசைக் குழுவின் பாடல்களும் தான். ரசிகர்கள் அதை வெகுவாக ரசித்தனர். கைதட்டியும் ஆடியும் தங்களது பாராட்டைத் தெரிவித்தனர். நிகழ்ச்சியில் முன் வரிசையில் அமர்ந்திருந்தவர், பாடலுக்குத் தாளம்போட்டு, பட்டும் படாமலும் ஆடினார். அவர் தான் RI தலைவராகப் பொறுப்பேற்க இருக்கும் மார்க் மலோனி.

பிரம்மாண்டமாக நடைபெற்ற ஹேம்பர்க் மாநாட்டில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பல்வேறு இனத்தவர், பல்வேறு மொழிகளைப் பேசியதைக் காண முடிந்தது. மாநாட்டின் பல்வேறு அமர்வுகளைக் காண்பதற்காக அங்கும் இங்கும் சென்றபோது, அவர்களெல்லாம் என்னென்ன மொழிகளைப் பேசு கிறார்கள் என்பதை அறிய முடிந்தது.



*புகழ் பெற்ற 'Abba' பாட்டுகளை பாடும் இசைக்குழு.*



*RIPE மார்க் மலோனி இசைக்கு நடன மாடுகிறார்.*

மாநாட்டின் செய்தியாக அமைந்துள்ளது இளைஞர்களின் சக்தி, ஆற்றல்தான், குறிப்பாக ரோட்டராக்ட் இளைஞர்களின் ஆற்றல்தான்! இளைஞர்களுக்கு உத்வேகம் அளித்து, தூண்டு வதற்காகத் தனியாக ஒரு பிரிவு அமைக்கப்பட்டது. அங்கே ஓய்வெடுத்தபடி எந்த அமர்வையும் இளைஞர்கள் காணலாம்.

*RI முன்னாள் இயக்குநர் சுசீல் குப்தா பங்கேற்க இயலாதது குறித்த சோகமும் இருந்தது. இந்நிகழ்ச்சியில் சுசீல் இல்லாத குறை உணரப்பட்டது.*

RI தலைவர் பேரி ரஸ்ஸின் உள்பட பல ரோட்டரி அமைப்பினர் இளைஞர்களைப் பற்றியே அதிகமாகக் குறிப்பிட்டதைக் கண்ட மாநாட்டில் பங்கேற்ற ஒருவர், இது ரோட்டராக்ட் இளைஞர் அமைப்பினருக்கான மாநாடு என்று தோற்றம் அளிக்கிறது. ரோட்டரி மாநாடு போலத் தோன்றவில்லை என்று நகைச்சுவையாகக் கூறினார்.

RI தலைவர் பேரி ரஸ்ஸின், மாநாட்டின் தொடக்க நிகழ்ச்சியில் உற்சாகமாக, இளைஞர்களின் திறமை, ஆற்றல் வெளிப்படும் வகையில் அமைவதை உறுதி செய்தார். பஹாமாஸ் நாட்டிலிருந்து வந்த ஜமால் ரோலீ என்ற இளம் ஓவியர் போலியோ சொட்டு மருந்து செலுத்தப்படும் குழந்தையை அழகாக வரைந்து காட்டி பார்வையாளர்களை அசத்திவிட்டார். அவர் வரைந்த ஓவியம் கடைசியில் ஏலத்தில் விற்கப்பட்டது.

கொரியாவின் எளிய பின்னணியிலிருந்து வந்த ஒரு பாடகர் பாடியது ஆன்மாவைத் தொட்டது. ஜூலியன் என்பவர் தனது நாட்டிய நிகழ்ச்சியில் அனைவரையும் பங்கேற்க அழைத்து கலக்கினார். அதில் ரஸ்ஸினும் அவரது மனைவி எஸ்தரும் இணைந்து ஆடினர்.

### உத்வேகமூட்டிய தலைவர்கள்

டோஸ்ட்மாஸ்டர்ஸ் இன்டர்நேஷனல் என்ற சர்வதேச தன்னார்வ அமைப்புடன் ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பு தொடர்பு கொண்டிருப்பதற்கு அதன் தலைவர் லார்க் டோலியே காரணம். பேச்சாற்றல், தலைமைப் பண்பு ஆகியவற்றை வளர்த்துக் கொள்வதற்கான பயிற்சிகளை டோஸ்ட்மாஸ்டர்ஸ் இன்டர்நேஷனல் அமைப்பு மேற்கொண்டு வருகிறது. ரோட்டரி தலைவர்களுக்கும் அத்தகைய பயிற்சிகளை அளிக்க முன்வந்துள்ளது.

ஜெர்மனி நாட்டு பெர்லின் தலைநகருக்கு வந்து குவிந்த அகதிகள் நோயுற்றபோது, அவர்களுக்குச் சேவை புரிந்ததை பெர்லின் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த மருத்துவ நிபுணர் டாக்டர் பியா ஸ்காராபிஸ்-க்வெர்ஃபெல்ட் ஆற்றிய உரை அனைவரையும் கவர்ந்தது.

சிரியா நாட்டிலிருந்து அகதிகள் வந்து குடியேறினர். அவர்களது வருகை அதிகரித்தபோது, அவர்களில் பலர், குறிப்பாக நோய்வாய்ப்பட்ட குழந்தைகள் வர ஆரம்பித்தபோது அவர்களது உடல்நிலை குறித்த கவலை ஏற்பட்டது. போதிய மருந்துகளுடன் நாங்கள் தன்னார்வ சேவைகளைத் தொடங்கினோம். சமுதாயக் கூடங்கள், கொட்டகை முகாம்களில் தங்கியிருந்த ஆயிரக் கணக்கானோருக்கு உரிய மருத்துவ உதவிகளை அளித்தோம். இப்போது மெடிஸின் ஹில்ஃப்ட் (Medizin Hilft) என ஜெர்மனியில் அழைக்கப்படும் அந்த அமைப்பில் நூற்றுக்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் பங்கேற்று பணிபுரிகிறார்கள் என்றார் அவர்.



*RI தலைவர் பேரி ரஸ்ஸின் மற்றும் எஸ்தர் பஹாமாஸ் பாடகர் ஜூலியன் பிலீவுடன்.*

### இளம் தலைமுறை

இங்கிலாந்து, மார்க்கெட் ஹார்போரஃப் ரோட்டராக்ட் சங்கத்தின் நிறுவனத் தலைவரான கிறிஸ்டபர் வெல்ஸ் ஓர் அமர்வில் பேசுகையில், இந்த மாநாட்டுக்கு அழகூட்டியவர்கள் ரோட்டராக்ட் அமைப்பினர் தான் என்று குறிப்பிட்டார். தனது நகைச் சுவையான பேச்சினால், அனைவரையும் அவர் கவர்ந்திழுத்தார். நீண்ட நேர சிந்தனைக்குப் பிறகு ரோட்டரி





PRIP K R *ரவீந்திரன் மற்றும் பில் பாய்ட்.*



TRF *தலைவர் பிரண்டா கிரேஸியுடன் ரோட்டரி அலும்னை க்ளோபல் செர்விஸ் விருதுப்பெற்ற டாம் ஸாயர்.*

rotary.org

அமைப்பு நன்மை செய்யும் இயக்கம் என்பதைப் புரிந்துகொண்டதாகக் குறிப்பிட்ட அவர், தனது ரோட்டராக்ட் சங்கத்தினரையும் அந்த வகையில் தூண்டியதாகவும் கூறினார்.

**சுசீல் குப்தா**

ஹேம்பர்க் மாநாட்டில் ஆட்டம், பாட்டம், இசை, கலை நிகழ்ச்சிகள் என்று மகிழ்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. RI தலைவர் பேரி ரஸ்ஸின், தலைவராகத்



PRIP *ராஜேந்திர சாபூ, உஷா, லோர்னா பாய்ட்,*
PRIPs *பில் பாய்ட் மற்றும் கல்யாண் பானர்ஜி.*

தேர்ந்தெடுக்கப்பட்ட மார்க் மலோனி ஆகியோர் பங்கேற்றனர். இருந்தாலும், RI முன்னாள் இயக்குநர் சுசீல் குப்தா பங்கேற்க இயலாதது குறித்த சோகமும் இருந்தது. இந்நிகழ்ச்சியில் சுசீல் இல்லாத குறை உணரப்பட்டது.

உடல் நலம் காரணமாக RI அமைப்பின் தலைவராகப் பரிந்துரைக்கப்பட்டும், அதிலிருந்து விலகியதால், ஜெர்மனியைச் சேர்ந்த ஹோல்கர் நாக் தற்போது பரிந்துரைக்கப்பட்டுள்ளார். அவர் சுசீலின் நல்ல நண்பர் ஆவார். அவர் சுசீலின் படத்தைத் திரையில் காட்டி அவரைப் புகழ்ந்து பேசியபோது, அரங்கில் இருந்த நூற்றுக்கணக்கான இந்திய ரோட்டேரியன்கள் சோகத்தில் ஆழ்ந்தனர்.

## நட்பின் இல்லம்

ஹேம்பர்க் மாநாட்டில் புகழ் பெற்றவற்றில் நட்பின் இல்லம் (House of Friendship) குறிப்பிடத் தக்கது. ரோட்டரி அமைப்பினர் சமுதாயத்தில் ஆற்றிவரும் சேவைகளை உலகுக்கு எடுத்துரைப்பதிலும் உலகின் பல்வேறு இடங்களைச் சார்ந்த ரோட்டரி அமைப்பினர் தங்களுக்குள் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதிலும் நல்ல நட்பு மட்டுமின்றி அர்த்தமுள்ள கூட்டாளிகளை உருவாக்கவும் இந்த நட்பின் இல்லம் துணைபுரிகிறது.

வழக்கம்போல் சென்னை ரோட்டரி சங்கம் தனது இருப்பைக் குறிப்பிடத் தக்க வகையில் பதிவு செய்தது. அதன் ஓர் அங்கமாக RI முன்னாள் இயக்குநர் சேகர் மேத்தாவின் டீச் திட்டம் (TEACH project) எடுத்துக்காட்டாக

1. *'End Plastic Soup' என்னும் திட்டத்தினை பிரபலப்படுத்தும் ரோட்டரியினர்.*
2. RIDE *கமல் சங்வி,* RI *துணைத் தலைவர் ஜான்* C *மாத்யூஸ் மற்றும் மேரி எலன் மாத்யூஸுடன்.*
3. RIDE *பரத் பாண்ட்யா, மாதவி, சோனல் மற்றும்* RIDE *கமல் சங்வி.*
4. *பிற நாட்டைச் சார்ந்த ரோட்டரியினர்.*








RIDE கமல் சங்வி, சோனல், RIDE பரத் பாண்ட்யா மற்றும் மாதவி,
RIPE மார்க் மலோனி மற்றும் அவர் மகள் சுசேனா க்ரியருடன்.












RIPN ஹோல்கர் நாக்,
PRID சுஷில் குப்தாவைப் பற்றி நினைவு கூறுகிறார்.



PRID சேகர் மேத்தா,
PRIP பில் பாய்ட்,
RIDE பரத் பாண்ட்யா,
மாதவி மற்றும்
லோர்னா பாய்ட்.





*நயன் பட்டேல், ராஷி மேத்தா, PRID சேகர் மேத்தா, PRIP கல்யாண் பானர்ஜி மற்றும் RI பொது செயலாளர் ஜான் ஹியூகோவின் மனைவி மார்கரெட் ஹியூகோ.*

விளங்கியது.


தெற்காசிய நாடுகளில் எழுத்தறிவின் அவசியம் வலியுறுத்தப்படுவதுடன், குழந்தைகளின் கல்வி, ஆசிரியர் பயிற்சி, முதியோர் எழுத்தறிவுத் திட்டம் ஆகியவற்றுக்காக ரோட்டரி அமைப்பினர் மேற்கொண்டு வரும் தீவிரமான பணிகளும் விவரிக்கப்பட்டன. அத்துடன் பள்ளிகளை மகிழ்ச்சிக்குரிய இடமாக மாற்றுவது குறித்தும் விளக்கப்பட்டது.

மாநாட்டில் பங்கேற்க வந்தவர்கள் தாங்கள் முறைப்படி அணிந்திருந்த பாட்ஜுகளைக் காட்டி பேருந்துகளில் நகரைச் சுற்றிப் பார்த்தனர். சில அருங்காட்சியகங்களுக்குச் சென்று பார்வையிட்டனர். துறைமுகம் பார்த்தனர். ஹாம்பர்க் துறைமுகத்தில் சிலர் போலியோவை ஒழிப்போம் என்ற செய்தியைக் கொண்ட பதாகையை சில தினங்கள் ஏந்தியது பலரது கவனத்தை ஈர்த்தது.

புகைப்படங்கள்:
ரஷீதா பகத்

வடிவமைப்பு:
S கிருஷ்ணப்ரதீஷ்

# Subscribe NOW!




## for Rotary News Print Version & e- Version

## For the Rotary year 2019 – 2020

**As concerned citizens of the world, those of you who are alarmed at the degradation of the environment and slaughter of trees, kindly opt for our e-Version.**

### Annual Subscription (India)

| Print version | e-Version |
|---|---|
| ₹420/- | ₹360/- |

(with effect from July 2019)

Print version ☐ e- Version ☐

| | English | Hindi | Tamil |
|---|---|---|---|
| No. of Copies | | | |

For every new member the pro-rata is ₹35 a month.

Please attach the TYPED list of individual members with their complete address, PIN code, Mobile number and e-mail ID. Intimate language preference (English/Hindi/Tamil) against each member's name. Please do not send the Semi-annual Report for address list.

Rotary Club of ........................................ RI District ........................

Name of the President/Secretary ........................................

Address ........................................

........................................

........................................

City .................... State .................... PIN ☐☐☐☐☐☐

STD Code .................... Phone: Off. .................... Res. ....................

Mobile ....................E-mail ....................

Cheque/DD No. .................... Dated .................... for Rs. ....................

Drawn on ........................................

in favour of "ROTARY NEWS TRUST" is enclosed.

Date: President/Secretary

Mail this form to:

Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008.
Tamil Nadu, India. Ph: 044 4214 5666, e-mail: rotarynews@rosaonline.org

# Subscription norms

1. Subscription is for the Rotary year (July to June).
2. **It is mandatory for every Rotarian to subscribe to a Rotary magazine.**
3. The annual subscription for print version is ₹420 per member.
4. Subscription for the full year must be sent in July, in the prescribed form.
5. Those joining after July can pay only for the remaining Rotary year at ₹35 an issue.
6. Subscription account of the club with *Rotary News* is a running account and does not cease at the end of June every year.
7. Names of all members, with their complete postal address with **PIN CODE,** mobile number and e-mail ID must be typed and sent along with the form and DD/cheques payable at par.
8. Copies of Semi Annual Report **SHOULD NOT** be sent as address list.
9. Language preference (English, Hindi and Tamil) should be stated alongside member's name.
10. **Members, please ensure that your name is included in the Subcribers' list that your club sends us. Often, names of members who have paid their subscription, are left out from the club list.**
11. Clubs must inform *Rotary News* about reduction in number of members, if any, before or in May. Please help reduce wastage of copies.
12. Clubs are liable to pay for the number of magazines we despatch according to the list available at Rotary News Trust.
13. Unpaid dues of the club will be shown as outstanding against the club. Any payment received subsequently will be adjusted against earlier dues.
14. **Clubs with subscription arrears will be notified to RI and may face possible suspension.**
15. We are in the process of tallying our subscriber list with RI membership from India.
16. If you want to switch to *The Rotarian*, please do so. But inform us **immediately** to avoid receipt of *Rotary News*. Or else your club will have to pay for it.



# 45 மில்லியன் மணிநேர உழைப்பின் மதிப்பு ஆண்டுக்கு $850 மில்லியன்

ரஷீதா பகத்

ஹேம்பர்க் மாநாட்டில் RI பொதுச் செயலாளர் ஜான் ஹியூகோ ஆயிரக்கணக்கான பிரதிநிதிகளின் பலத்த கரகோஷத்திற் கிடையே, முதல்முறையாக சமூக நலத்திட்டங்களுக்கு ரொட்டேரியன்கள் செலவழித்த தொண்டுப்பணி நேரங்களின் எண்ணிக்கையை அறிவித்தார். இது ஒரு சராசரி வருடத்தில் தொண்டு பணி செய்த காலம் சுமார் 45 மில்லியன் மணிநேரம் என்ற ஒரு இமாலய எண்ணிக்கையாகும். ஒரு உலகளாவிய சேவை அமைப்பில் இதுவே முதன்முறையாக ஜான் ஹோப்கின்ஸ் பல்கலைகழகத்தின் உதவியுடன் ரொட்டேரியன்கள் தொண்டுப்பணியை மதிப்பிட இந்த அனுபவப்பூர்வ பகுப்பாய்வு செய்யப்பட்டது. “தொண்டு பணியை மதிப்பிட இந்த பல்கலைக்கழகம் செயல்படுத்தும் திட்டமிட்ட செயல்முறை, UN மற்றும் ILO மூலம் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட முதல் செயல்முறை ஆகும்.''

ஒரு சராசரி வருடத்தில் ரொட்டேரியன்கள் தொண்டு பணிக்கு செலவழித்த 45 மில்லியன் மணிநேரம் $850 மில்லியன் என்ற மாபெரும் பொருளாதார மதிப்பு கொண்டது என்று ஆரம்பநிலை முடிவுகள் மூலம் பெறப்பட்ட ஒரு “அடிப்படை மதிப்பீடு'' கூறுகிறது. “பொருள் வடிவில் நன்கொடை மற்றும் ஒவ்வொரு வருடமும் ரோட்டரி சங்கங்களும் TRF திரட்டும் நிதி போன்றவை இந்த எண்ணிக்கையில் உட்படவில்லை, இதையும் சேர்த்தால் எண்ணிக்கை இரட்டிப்பாகும்!''

இது ரோட்டரியின் தாக்கத்தை “வலியுறுத்திக் காட்டுகிறது'' என்று சொல்லி, “எதிர்காலத்திற்கான நமது இலட்சியத்தை அடைய நாணயத்துடன் நாம் முன்னுதாரணமாக இருந்தால், நாம் என்ன சாதிக்க முடியும் என்பதற்கான ஒரு சுருக்கத்தைத் தான் இது காட்டுகிறது'' என்று ஹியுகோ கூறுகிறார். ரோட்டரிக்கு முன்பு சவால்கள் நிறைய இருந்தது, ஆனால் தங்களின் சமூகங்களில் நீடித்திருக்கும் மாற்றத்தை உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புள்ள தலைவர்களால் சூழப்பட்ட இயக்கம் இது.''

“சமூக அமைப்புகளின் மீதான நம்பகத்தன்மை தேய்ந்துபோன ஒரு உலகத்தில் நம்மால் தலைமை ஏற்க முடியுமா? அரசுகள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் மீதான பொது மக்களின் கோபம் அதிகரிக்கும் போது நம்மால் தலைமை ஏற்க முடியுமா? என்ற கேள்விகள் இருந்தது. நம்மால் முடியும் என்பது குறித்து எவ்வித சந்தேகமும் இல்லை.''

ரோட்டரியில் தலைமைப் பண்பின் அவசியத்தை விவரிக்கையில், ஹியூகோ, “ஒரு அரசு அல்லது பன்முக அமைப்பான ஐக்கிய நாடுகள் சபை போன்று இல்லாமல் ஒரு அரசு சாரா அமைப்பு துணிவுடன் இறங்கி, ஒரு மிகப்பெரும் சவாலை எதிர்கொண்டு போலியோவை ஒழிக்க முடியும் என்று நம்பியது,'' இதைத்தான் கவனத்தில் கொள்ளவேண்டும் என பிரதிநிதிகளிடம் கூறினார்.



RI *பொதுச் செயலாளர் ஜான் ஹியூகோ.*

போலியோ ஒழிப்பில் முன்னேற்றம் கண்டோம், இதற்கெல்லாம் ஒன்றாக இணைந்து களத்தில் இறங்கிய ஒரு மிகப்பெரும் ரொட்டேரியன்களின் குழு தான் காரணம். ரோட்டரியின் DNA-ல் இருக்கும் மற்றொரு முக்கியமான அம்சம் என்னவென்றால், “தலைமை மற்றும் நாணயம் போன்றவற்றின் ஒரு விஷேச கலவை, இது செயல்வீரர்களாகவும் சவால்களைச் சந்திக்க ஒன்றிணைப்பவர்களாகவும் நம்மைக் குறிப்பிடுகிறது.''

ரோட்டரி எதிர்காலத்தில் தலைமை தாங்கினாலும், பழம்பெரும் அதன் ஜொலிக்கும் வரலாற்றை கட்டமைத்து வருங்காலத்தில் தீர்க்கமான செயல் களைச் செய்வதற்கான பொறுப்பு ஒவ்வொரு ரொட்டேரியனிடமும் உள்ளது.

இது ரோட்டரியின் சரித்திரத்தில் ஒரு விஷேசமான வருடமாகவும் இருந்தது. ஏனெனில் அதன் புதிய நோக்கம் சார்ந்த திட்டம் வெளியிடப்பட்டு ரோட்டரியின் வருங்காலத்திற்கான ஒரு பாதையை அமைக்கிறது. வேகமாக மாறிக்கொண்டிருக்கும் நமது உலகின் தேவைகளைப் பூர்த்தி செய்ய ரோட்டரி எப்படி பரிணாமம் அடைந்து மாற வேண்டும் என்பதையும், மேலும் நமது உறுப்பினர் சேர்க்கையின் பலதரப்பட்ட மக்களுக்கும் நாளைய ரோட்டரி உறுப்பினர்களுக்கும் பணிசெய்யும் வகையில் கட்டமைக்கப்படுவதையும் இது கவனம் செலுத்தியது என்று ஹியூகோ கூறுகிறார். ■

ஹோனோலுலு மாநாடு

# அலோஹாவின் ஆத்ம உணர்வு

ஹேன்க் சார்டின்



வணக்கம் மற்றும் விடைபெறுதல் இரண்டிற்கும் ஒரே வார்த்தையான அலோஹா என்ற ஹவாய் வார்த்தையை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். உண்மையைச் சொல்வதென்றால், அலோஹா என்ற வார்த்தை, அன்பு, ஈர்ப்பு, அமைதி, கருணை, மன்னிப்பு போன்ற பல்வேறு அர்த்தங்களையும் தன்னுள் அடக்கியுள்ளது. ஹவாய் மக்களின் வாழ்க்கை முறைதான் அலோஹா, ஒற்றுமையுடன் வாழ்வது, பொறுமையாக இருப்பது, மரியாதையுடன் அனைவரையும் நடத்துவது, மகிழ்ச்சியை உங்கள் 'ஓஹானா'-(இது ஹவாய் மக்களின் குடும்பம்) உடன் பகிர்ந்துகொள்வது, போன்றவற்றில் கவனம் செலுத்துவார்கள். 2020 ஜூன் 6 முதல் 10 வரை ஹோனோலுலுவில் நடக்கும் ரோட்டரி இன்டர்நேஷனல் மாநாட்டில் நீங்கள் பங்கேற்றால் இவற்றின் மதிப்புகளை நேரடியாக அனுபவிப்பீர்கள்.

1850 ஆம் ஆண்டில் கமேஹமேஹா III என்ற அரசன் ஹோனோலுலுவை தன் ஆட்சித் தலைநகராக அதிகாரப்பூர்வமாக அறிவித்தார், அப்போதிருந்து ஹவாய் தீவுகளின் மத்திய அரசாக இந்த நகரம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஹவாய்த் தீவுகளில் மிகப்பெரிய நகரமான ஹோனோலுலு ஒரு பரபரப்பான மெட்ரோசிட்டி, இதில் புதிதான பொருள்களை காட்சிக்கு வைக்கப்பட்ட உணவுவிடுதிகள், உலகத்தரமான ஷாப்பிங் மற்றும் பாரம்பரியமான ஹவாய் கலாச்சாரத்தை அனுபவிக்கவும் வாய்ப்புகள் உள்ளது.

இந்த நகரமும் ஹவாய்த் தீவுகளும், கொஞ்சும் இயற்கை அழகும் ஒரே மாதிரியான சூரிய உதயமும் கொண்டுள்ளது. உலகப் பிரசித்தி பெற்ற வைகிகி கடற்கரையின் சர்ஃப் வழியே நடப்பது, டைமண்ட் ஹெட் எனப்படும் லேகி கிரேடரில் நீண்டதூர நடைபயணம்; அல்லது ஹனாமா விரிகுடாவில் பச்சை கடல் ஆமைகளுடன் நீந்துவது போன்றவற்றை செய்யலாம். 2020 மாநாட்டுக்கு உங்களின் மொத்த குடும்பத்தையும் அழைத்து வந்து அலோஹாவின் ஆத்ம உணர்வை கொண்டாடுங்கள்.

HONOLULU HAWAII 2020

ஹோனோலுலுவில்
2020 ரோட்டரி மாநாட்டுக்கு
riconvention.org-இல் பதிவு செய்யுங்கள்!

TRF தலைவரிடமிருந்து...



# ஹைஃய்-ஃபை தருணங்கள்

நி ஹாவ் ரொட்டேரியன்களே!

இந்த வருடத்தில் பவுண்டேஷன் செய்யக்கூடிய மிக அருமையான பணிகளை நான் பார்க்கையில், திகைப்படைந்து விட்டேன்.

எனது உயர்நிலைப்பள்ளி கூடைப்பந்து அணியில் விளையாடிய பங்கைப் போன்று, இப்போது எனது பதவியை நான் பார்க்கிறேன். நான் பாயின்ட் கார்டாக விளையாடினேன். பந்தைத் தட்டிக்கொண்டு முன்னேறிச் சென்று, எனது அணியில் எவருக்கு வாய்ப்பு உள்ளதோ, அவரிடம் பந்தை பாஸ் பண்ணுவது தான் என் வேலை. அவர்கள் பந்தை கூடைக்குள் போடுவதைப் பார்ப்பது போன்ற சந்தோசம் எனக்கு வேறில்லை.

நான் விளையாடிய போது ஹை-ஃபை இல்லை, ஆனால் ஒவ்வொரு முறை கூடையில் பந்து விழும்போது நான் ஹை-ஃபை கொடுக்க ஆசையுடன் இருந்திருக்கலாம். இப்போது இதை நான் உங்களிடம் கொடுக்க ஆவலுடன் உள்ளேன். யோசித்துப் பாருங்கள்: பவுண்டேஷனுக்கு ஒரு ஹை-ஃபை நீங்கள் கொடுக்க ஏராளமானவை உள்ளது. ஹுவாங் குடும்பத்தில் என் மனைவி, மூன்று குழந்தைகள், மற்றும் நான் என ஐந்து உறுப்பினர்களையும் ரோட்டரியில் சேர்த்து, TRFக்கு ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து நன்கொடையளிக்கத் தொடங்கியுள்ளேன்.

அடுத்த வருடத்தில் நாம் அனைவரும் எத்தனை ஹை-ஃபை கொடுக்க போகிறோம் என்று பார்க்கலாமா! ஐந்து காசோலைகளை மேலும் எழுதுவதோ, ஐந்து நிதி திரட்டுபவர்களை மேலும் வைத்திருப்பதோ, ஐந்து புதிய நன்கொடையாளர்களை மேலும் கண்டுபிடிப்பதோ அல்லது ஐந்து டாலர்களை மேலும் கொடுப்பது கூட போதும், இவை ஒவ்வொன்றும் ஹை-ஃபை எண்ணிக்கைகள்.

இந்த வருடம் எனது சமூக வலைதள கணக்குகளை உலகம் முழுவதும் நான் கொடுத்த TRFன் ஹை-ஃபை மூலம் நிரப்பப் போகிறேன் மற்றும் நமது இலக்குகளுக்கு அருகில் நம்மை கொண்டுசென்ற வள்ளல் குணம் கொண்டவர்களின் கதைகளைச் சொல்லப்போகிறேன். என்னுடன் ஃபேஸ்புக் (@garyckhuang) பக்கத்தில் இணைந்து உங்கள் கதைகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள். உங்கள் ஹை-ஃபைகளைக் கொடுக்கத் தயங்காதீர்கள்.

Gary C K Huang
TRF அறங்காவலர் தலைவர்

# ரோட்டரியின் 2020–21 தலைவர் ஹோல்கர் நாக் ஒரு பார்வை

டேவ் கிங்

*இன்னும் இரண்டு வருடத்தில் RIக்குத் தலைவராகப் பொறுபேற்க போகும் ஹோல்கர் நாக், ஜெர்மனியைச் சேர்ந்த முதல் நபர் ஆவார். ஹேம்பர்க்கில் நடந்த RI மாநாட்டின் போது டேவ் கிங் அவருடன் நடத்திய ஒரு உரையாடல்.*



RIPN *ஹோல்கர் நாக்*

அப்போது, ஹேம்பர்க்கில் இருந்து 40 நிமிட பயண தூரத்தில் வடகிழக்கில் இருக்கும் ராட்ஸ்பர்க்கின் அழகான ஸ்லஸ்விக்-ஹோல்ஸ்டெய்ன் நகரத்தில் மே மாதத்தின் ஒரு அந்திசாயும் மாலை ஐந்து மணி. இந்த கண்கவர் நகரத்தில் உள்ள தன் அழகான தோட்டத்தில் ஹோல்கர் நாக் உலவிக் கொண்டிருந்தார், அவருடைய வீடு குசென்ஸி, ஸ்டேட்ஸி, டோம்ஸி மற்றும் நீளமான ரேட்ஸ்பர்க் ஏரி என்ற நான்கு ஏரிகளுக்கு மத்தியில் அமைந்துள்ளது.

நான் தோட்டத்தில் சும்மா சுற்றிக் கொண் டிருந்தேன், ஆனால் என்னுடைய மற்றும் என் மனைவியின் வாழ்க்கையை என்றென்றைக்கும் மாற்றும் ஒரு செய்தியுடன் ஒரு ஃபோன் வந்தது. 2020–21 ஆண்டுக்கான RI தலைவராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார் என்பதே அந்த செய்தி.

இது ரொம்பவே ஆச்சர்யமாக இருக்கிறது, ஏனெனில் அறிவிப்பு பற்றி அடுத்தநாள் வரைக்கும் தெரியாமலேயே இருந்தது. தேர்வுக்குழுவின் தலைவர் மைக் மெக்கவன் ஃபோன் பண்ணினார். ‘இதை உங்களிடம் சொல்வதற்குப் பெருமைப்படுகிறேன், அதாவது 2020–21 ஆண்டுக்கான தலைவராக இந்தக்குழு உங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறது’ என்று சொன்னார்.

“மைக்குக்கு நான் பதில் சொல்ல கொஞ்ச நேரம் ஆனது. நான் பேச்சு மூச்சற்று ஸ்தம்பித்து போனேன். இது எதிர் பார்க்காத ஒன்று. இந்த ஃபோனுக்கு நான் என்னைத் தயார் செய்யவே இல்லை.

உடல் நலப் பிரச் சனையால் 2020–21-ஆம் ஆண்டுக்கான தலைவராகத் தேர்வு செய்யப்பட்ட RC டெல்லி மிட்வெஸ்ட் சங்கத்தைச் சேர்ந்த சுஷில் குப்தா பதவி விலகத் தீர்மானித்ததால், உலகிலேயே மிகப்பெரிய மனிதநேய அமைப்பை வழி நடத்துவதற்கான பொறுப்பு காலியாக இருந்தது.

இந்தியாவிலிருந்து நான்காவது RI தலைவராக இருந்திருப்பார் குப்தா, ஆனால் ஜெர்மனியைச் சேர்ந்த முதல் தலைவர், இது ஒரு சோகமும் மகிழ்ச்சியும் கலந்த தருணமாக இருந்தது. “தலைவருக்கான நியமனத்தை ஏற்றுக் கொள்வது தொடர்பாக தனக்கு ஒரு மாதிரியாக இருப்பதாக’’ குப்தாவிற்கு நாக் எழுதினார்.

ஆனால் கவலைப் படாமல் இந்தத் தருணத்தை சந்தோஷமாக கொண்டாட வேண்டும் என்று வலியுறுத்தி, தன் சக ரொட்டேரியனுக்கு வாழ்த்தினைத் தெரிவித்தார் குப்தா. “எனக்கு சுஷிலின் ஆதரவும் இருந்ததால், இன்னும் எளியதாக மாறியது,’’ என்றார் நாக்.

அவர் கடந்த 27 வருடமாக ஹெர்ஸோக்டம் லாயன்பர்க்-மோலன் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த ஒரு உறுப்பினர். 125-வருட பழமையான குடும்ப வணிகமான நாக் எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் ஒரு பங்குதாரராகவும் பொது மேலாளராகவும் இருந்தார், மேலும் நாக் KG என்ற ஒரு ரியல் எஸ்டேட் நிறுவனத்தையும் நடத்துகிறார்.

சூசேன் என்பவரைத் திருமணம் செய்து 43 வருடங்களாக இல்லற வாழ்வில் இருக்கிறார்; இந்த தம்பதிகளுக்கு குழந்தை இல்லை மற்றும் ரோட்டரி இளைஞர் கலாச்சார பரிமாற்றத்தில் முழுமையாகத் தங்களை அர்ப்பணித்து, பல வருடங்களில் 43 மாணவர்கள் அவர்கள் வீட்டில் தங்கியிருக்கிறார்கள்.

ரோட்டரியின் தலைவராகப் போவது நாக் மற்றும் சூசேன் தம்பதியினருக்கு ஒரு

வாழ்வை மாற்றும் ஒரு தருணமா என்ற சந்தேகம் இருக்கிறது. ஒரு ஜெர்மானியர் மற்றும் ஒரு ஐரோப்பியாவை சேர்ந்தவர் என்ற இரண்டிலும் அவர் பெருமை கொள்கிறார், திடீரென ஒரு சில ரோட்டரி பயணங்கள் உட்பட உத்தேசமாக வைத்திருந்த திட்டங்கள் கைகூடாமல் போனது.

அவரது மையக்கருத்து மற்றும் அவருடைய தலைமை வருடத்திற்கான இலச்சினை குறித்து சிந்திக்க ஒரு சில மாதங்கள் அவருக்குத் தேவையாக இருக்கிறது. ஆனால், ஏற்கனவே இரண்டு தெளிவான மையக் கருத்துக்கள் தயாராக இருக்கிறது. ஒன்று, ரோட்டரி உறுப்பினர் சேர்க்கையை பல விதங் களில் விரிவாக்க அதிகமான ரோட்டராக்ட் சங்கங்களை அமைக்கவேண்டும் என்ற தற்போதைய RI தலைவர் பேரி ராஸின் தொடங்கிய செயல் திட்டத்தைத் தொடர வேண்டும் என்பது. மற்றொன்று, இளைஞர்களையும் பெண்களையும் இந்த அமைப்பில் இணைத்து தலைமைப் பொறுப்புகளை அடைய அவர்களை ஊக்கப்படுத்துவது.

அவர் தலைமை வகிக்கும் காலத்தில் இயக்குனர் குழுவில் ஆறு பெண்மணிகள் பணிபுரிவார்கள். எப்போது RI முதல் பெண் தலைவர் வருவார் என்பதைக் கேட்கும் போது, இந்த ஜெர்மானியர் ஒரு தெளிவான ராஜதந்திரத்துடன் பதில் அளித்தார்.

அருமையான கேள்வி இது, இதைத் தான் எனக்கு நானே கேட்டுக்கொண்டே



RIPN *ஹோல்கர் நாக்* RI *தலைவர் பேரி ரஸ்ஸின் மற்றும் எஸ்தருடன்.*

இருக்கிறேன்,'' என்று பதிலளிக்கிறார் நாக். ரோட்டரிக்கு பெண் மணிகளை அழைத்து வருவது என்பது நமது முக்கிய மதிப்புகளில் ஒன்று, இது வெகு சாதாரணமான ஒன்று, மேலும் அந்த மதிப்புகளை நாம் கௌரவிக்க வேண்டும். ரோட்டரியில் பெண்களின் எண்ணிக்கையையும் ஜூன் 2023ம் ஆண்டில் தலைமைப் பொறுப்புகளில் 30 சதவீதம் வரையும் அதிகரிக்க வேண்டும் என்ற ஒரு உயரிய இலக்கினை ரோட்டரி அமைப்பு அமைத் திருக்கிறது. ஆனால் நாம் ஏதாவது சாதிக்க வேண்டுமென்றால், நாம் உயரிய இலக்குகளை அமைக்கவேண்டும்.

சிறந்தவரைத் தேர்வு செய்வது தேர்வுக்குழுவின் கடமை என்பதை மட்டும் சொல்லமுடியும். எனக்குப் பிறகு அடுத்த வருடத்தில் யார் தலைவராகப் போகிறார் அல்லது யார் தேர்வுக்குழுவில் இருப்பார்கள் என எதுவும் தெரியாது.

எனக்கு பின்பு யார் வருவார் எனத் தெரியாது, ஆனால் யாராக இருந்தாலும் எனக்கு மகிழ்ச்சியே. எனக்குப் பிறகு வருபவர் ஒரு ஜனநாயக வழியில் தேர்வு செய்யப்படுகிறார், அதனால் எனக்கு பிறகு வருபவர் பெண்ணாக இருந்தால் நன்றாக இருக்கும் என்று பரிந்துரைப்பது சரியிருக்காது.''

அத்துடன்: 1.2 மில்லியன் ரோட்டரி உறுப்பினர்களின் நம்பிக்கையும் ஆதரவும் எனக்கு இருப்பதை நினைத்து பெருமைப்படுகிறேன். தலைவராக ரோட்டரி வழங்கக்கூடிய சிறந்த வற்றை நான் கோடிட்டு காட்டத் திட்டமிடுகிறேன், அனைத்துவித மக்களும் நமது சேவை மற்றும் தாக்கம் போன்ற வற்றில் அவர்களின் பிரதிபலிப்பைக் காணமுடியும்.

“ரோட்டரித் தலைவராகப் போவதை நினைத்து குதூகலத்துடன் இருக்கிறேன். என் துணைவி சூசேன் இல்லாமல் எதுவுமே நடந்திருக்காது, இந்த பணியை உங்களால் செய்திருக்க முடியாது. ஆனால் நாங்கள் இரு வரும் இனிவரும் காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம், மேலும் இந்த பெரும் பணிக்காக முழு ஆற்றலுடன் இருக்கிறோம்.”

*இந்த கட்டுரை ஆசிரியர் இங்கிலாந்து ரோட்டரி இதழின் ஆசிரியர் ஆவார்.*

# கேரளாவில் 1,000 குடும்பங்களுக்கு ரோட்டரி வீடுகள்

ரோட்டரி செய்திக்குழு



RID C பாஸ்கர், DG E K லூக் உடன் சேர்ந்து ஒரு புதிய வீட்டை பயனாளி ஒருவருக்கு அளிக்கிறார். PDGs K S சசிக்குமார், R ரெகுநாத், ஜான் C நெரோத், DGE தாமஸ் வவானிகுனல் மற்றும் PDG ஜான் டேனியல் அவர்களும் உள்ளனர்.

RID 3211 மாவட்டத்தைச் சேர்ந்த கேரளாவின் ஐந்து வருவாய் மாவட்டங்களில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள 1,000-க்கும் அதிகமான வீடுகளில் ரோட்டரி முத்திரையை இனி யார் வேண்டுமானாலும் அடையாளம் கொள்ளலாம். இம்மாவட்டத்தைச் சேர்ந்த 139 சங்கங்கள் ஒன்றிணைந்து 316 புதிய வீடுகளையும் சிநேக வீடு என்ற திட்டத்தின் கீழ், பாதி கட்டப்பட்ட நிலையில் இருந்த சுமார் 700 வீடுகளையும் கட்டி முடித்தனர், இத்திட்டம் வீடில்லாதவருக்கு வீடு என்ற திட்டப்பணி, DG E K லியூக் சிந்தனையில் உதித்த திட்டமாகும்.

வீட்டுத் திட்டப்பணியை வெற்றிகரமாக முடித்ததன் மூலமாக, கேரளா அரசாங்கத்தின் நீண்ட காலத்திட்டத்துக்கு ஆதர வளித்துள்ளது, இதன் முக்கிய இலக்குகளில் ஒன்றான 'வீடில்லாதவருக்கு வீடு' என்றத் திட்டமும் அடங்கும்.

### ஒரு பிரமாண்டத் தொடக்கம்

கடந்த ஜூலை மாதம் சுமார் 1,000 ரொட்டேரியன்கள் கலந்துகொண்ட சிநேகவீடு மாவட்டக் கருத்தரங்கம் மிகப்பெரிய சாதனை. "அன்றைய தினமே, கேரள மாநில நிதியமைச்சர் திரு T M தாமஸ் இசாக் அவர்கள் பத்து குடும்பங்களிடம் புதிய ரோட்டரி வீடுகளை வழங்கினார்.'' திட்டப்பணித் தலைவர் K பாபுமோன். ரொட்டேரியன்களின் ஆதரவு மற்றும் தாராளமான CSR நிதி போன்றவற்றின் மூலம், தொடக்கத்தில் 500 வீடுகள் என்ற இலக்கு பிறகு 1,000 வீடுகளாக மாற்றியமைக்கப்பட்டது.

ஒரு சில மாதங்களுக்கு முன்பு PRID C பாஸ்கர் மற்றும் அவரது மனைவி மாலா அவர்கள் புதிய மூன்று வீடுகளைத் திறந்து வைத்தனர்.

இந்த சிநேகவீடு திட்டப்பணி, பாபுமோன் அவர்களின் தலைமையில் PDGகளான K S சசிக் குமார், K P ராமச்சந்திரன் நாயர், இணை ஆளுநர் M அஜித்குமார் மற்றும் மாவட்ட பொதுச் செயலாளர் N சைன் குமார் ஆகியோர்களின் உதவியுடன் அர்ப்பணிப்பு மிக்க குழுவால் செயல்படுத்தப்பட்டது.■




DG லூக் மற்றும் திட்டத்தலைவர் K பாபுமோன் பயனாளி ஒருவருடன்.



# வெள்ளம் பாதித்த குடகு மக்களுக்கு மறு வாழ்வு

ரோட்டரி செய்திக் குழு

கடந்த ஆண்டு கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களைப் புரட்டிப் போட்ட மழை வெள்ளத்தின் போது கர்நாடக மாநிலம் குடகு மாவட்டத்தில் நிலச்சரிவால் 3,500 ஹெக்டேர் நிலம் பாதிக்கப்பட்டது. இதில் 2,500 கி.மீ. நீளத்துக்கு சாலைகள் சேதமடைந்தன. ஆயிரத்து க்கும் மேற்பட்டோர் வீடுகளை இழந்தனர் என்று RI 3181வது PDG K. ரவி அப்பாஜி தெரிவித்தார்.

DG P. ரோஹிநாத் தலைமையில் ரவி அப்பாஜி திட்டத்தைச் செயல் படுத்தும் பொறுப்பினை ஏற்க, அப் பணியில் மாவட்ட நிரந்தர நிதியத்தின் தலைவர் PDG K கிருஷ்ணா ஷெட்டி மற்றும் ரோட்டரி உறுப்பினர்கள் இணைந்து சேதமடைந்த வீடுகளுக்கு மாற்றாகப் புதிய வீடுகளைக் கட்டித் தரும் பணியில் ஈடுபட்டனர்.

PRIP கல்யாண் பானர்ஜி மற்றும் RID C பாஸ்கர் ஆகியோர் துணையுடன் முதல் கட்டமாக தலா ரூ.5 லட்சம் செலவில் 25 வீடுகள் கட்டுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இந்தியாவுக்கான மாந்தர் வாழ்விட அமைப்புடன் (Habitat for Humanity India) கையெழுத்தானது. இத்திட்டத்திற்கான மொத்தம் ரூ.1.26 கோடி செலவாகலாம் என்றார்.

முதல் கட்டமாக மடிகரைக்கு 12 கி.மீ. தொலைவில் உள்ள மடப்பூர் கிராமத்தில் 25 பேருக்கு வீடுகள் கட்டித்தரப்பட்டன.

பயனாளிகளுக்கு வீடுகளை வழங்கும் நிகழ்ச்சியில் பேசிய கல்யாண் பானர்ஜி வீடுகளைக் கட்டித் தருவதுடன், அவர்கள் மேலும் ஒரு தளம் கட்டிக் கொள்ளும் வகையில் வலுவான அடித்தளத்தையும் அமைத்துத் தந்ததற்கு ரோட்டரி அமைப்பினரைப் பாராட்டினார்.

வீடு என்பது ஒருவரது குடும்ப வாழ்க்கையில் நம்பிக்கை அளிப்பது. இந்த வீடுகள் இயற்கைச் சீற்றத்தால் பேரழிவைச் சந்தித்த மக்கள் மீண்டும் வாழ முடியும் என்று நம்பிக்கையை ஊட்டும். ஸ்திரத்தன்மையையும் வசதியையும் அளிக்கும் என்றார் கல்யாண் பானர்ஜி.

நிகழ்ச்சியில் ரோஹிநாத், ரவி அப்பாஜி, கிருஷ்ணா ஷெட்டி, RID 3182 DG அபிநந்தன் ஷெட்டி, ராஜன் சாமுவேல், ஹாபிடாட் நிறுவன மேலாண் இயக்குநர், DGE ஜோசப் மாத்யூ, DGN M ரங்கநாத் பட், பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் ரோட்டரி சங்கத் தலைவர் D ரவிசங்கர் ஆகியோர் பங்கேற்றனர்.■



*PRIP கல்யாண் பானர்ஜி இரண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு DG P ரோஹிநாத் மற்றும் PDG ரவி அப்பாஜி முன்னிலையில் வீடுகள் அளிக்கிறார்.*

Rotary PEOPLE OF ACTION

# பூமியைப் பசுமையாக்கும் கர்நாடக ரோட்டரி அமைப்பினர்

V முத்துக்குமரன்

இந்தியா உலகுக்கே உணவளிக்கும் களஞ்சியமாக மாற முடியும். ஆனால், மண், நதி, காற்று ஆகிய நமது இயற்கை வளங்களை மீட்டெடுத்தால் மட்டுமே அது சாத்தியமாகும். உலகிலேயே இந்திய மண்தான் அதிக வளம் கொண்டது. ஒரு கன அடி மண்ணில் 10 ஆயிரம் நுண்ணுயிர்கள் நிரம்பியுள்ளன என்று ஈஷா அறக்கட்டளையின் நிறுவனர் சத்குரு ஜக்கி வாசுதேவ் குறிப்பிட்டார். பெங்களூரில் RID 3190வின் நிகழ்ச்சியையொட்டி நடைபெற்ற இன்டர்சிட்டி பொதுப் பேரவைக் கூட்டத்தில் அவர் பேசினார்.

கர்நாடக மாநிலம் கோலார், சிக்கபல்லபூர் ஆகிய மாவட்டங்களில் மூன்று ஆண்டுகளில் மொத்தம் ஒரு கோடி மரக்கன்றுகள் நடும் திட்டத்தை (Koti Nati) முறைப்படி தொடங்கிவைத்தார்.

நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது:

நமது சுற்றுச் சூழல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான காலம் வந்துவிட்டது. நமது மனித சமுதாயம் மீண்டும் ஆற்றலுடன் செயல்பட்டு, பயனுள்ள படைப்புத் தொழிலில் ஈடுபட வேண்டுமானால், நமது பூமித் தாயைப் பேணி முந்தைய நிலைக்குக் கொண்டு வந்தாக வேண்டும். இப்போதைய நிலைமை சரிசெய்யப்படாவிட்டால், இந்தியாவின் மொத்த நிலத்தில் 40 சதவீதம் நிலத்தில் 2 சதவீதமே உயிரிப் பொருட்கள் இருக்கும்.

நாடு முழுதும் நடத்தப்பட்ட நதிகளை இணைக்க வலியுறுத்தும் பிரசாரப் பேரணியின் (Rally for Rivers) மூலம் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. தடுப்பணைகள், குளங்களுக்குப் பதிலாக, நதிக் கரைகளிலும் நீர்ப் படுகைகளிலும் மரக்கன்றுகளை நடுவதன் மூலம் நதிகளை மீட்டெடுக்கும் பணி இடைவிடாது செயல்படுத்தப்பட வேண்டும். மண்ணை வளப்படுத்தவும், நதிகளை உயிர்ப்பிக்கவும் நாடு முழுதும் 34,

*RC ராஜ்மகால் விலாஸ் தலைவர் ராஜாராம் கிருஷ்ணமூர்த்தி, கோடி நாட்டி திட்டவழிகாட்டி K அமர நாராயணா, RC பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் தலைவர் D ரவிசங்கர், ஜக்கி வாசுதேவ், அனிதா ஹரி, DG சுரேஷ் ஹரி, DGE ஸமீர் ஹரியாணி, ரூபா ஹரியாணி மற்றும் DGND ஃபஸல் மஹமுத்.*



## கோடி மரக்கன்றுகள் திட்டம்

*காடு வளர்ப்புத் திட்டத்திற்கு கர்நாடக மாநில அரசு ஆதரவு அளிக்க முன்வந்துள்ள நிலையில், மரக்கன்றுகளை நடுவதற்கு மகாத்மா தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் (MNREGA) நிதி கிராம ஊராட்சிகள் வழியாக அளிக்கப்படும் என்று திட்ட வழிகாட்டி K. அமரநாராயணா கூறினார்.*

*இத்திட்டத்திற்காக பயோலா தகோஜு ரவிசங்கர் அறக்கட்டளை (Paola Dakoju Ravishankar Foundation) ஒரு கோடி ரூபாய் முதல் நிதியாக (seed money) அளித்து உதவியுள்ளது.*

*அரசின் ஹஸிரு வனப்பாது காப்புத் திட்டம் (Hasiru Conservation programme) கோடி மரக்கன்றுகள் நடும் திட்டத்திற்கும் (Koti Nati) விரிவுபடுத்தப்படும். அரசு நிதியிலிருந்து இதற்காக ஒதுக்கப் படும். பல்வேறு அமைப்புகள், ரோட்டரி உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் நிதியுடன் கார்ப்பரேட் சமுதாயப் பணி நிதியிலிருந்தும் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ரோட்டரி உறுப்பினர் நெய்ல் மைக்கேல் ஜோசப் தெரிவித்தார். தான் நடத்தி வரும் பாகீரதி டிராவல்ஸ் நிறுவனம் இதற்காகத் தாராளமாக உதவும் என்றும் இரு மாவட்டங்களில் கோடி மரக்கன்று நடும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான போக்குவரத்து வசதிக்கும் உதவும் என்றார்.*

*ஒரு கோடி மரக்கன்றுகள் நடும் திட்டம் 2020ம் ஆண்டு ஜூலையில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் ரோட்டரி சங்கம் இரு மாவட்டங்களைச் சேர்ந்த அரசு அலுவலகங்கள், கிராம ஊராட்சி கள், வனத்துறை ஆகியவற்றையும் ஈடுபடுத்துகிறது. ஓராண்டாக நடைபெற்ற பிரசாரத்தில் விவசாயிகள், மாவட்ட அலுவலர்கள் ஈடுபட்டனர். இது குறித்து கிராமப்புறத்தினரிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த துண்டுப் பிரசுரங்கள், விளக்கக் குறிப்பேடுகள் வழங்கப்பட்டன என்றார் அவர்.*

*இரு மாவட்டங்களிலும் மலைப்பகுதி தரிசு நிலப் பகுதிகளில் விதைப் பந்துகளை இந்திய விமானப் படை விமானங்களின் மூலம் விசிப் பரப்புவோம் என்று கூறிய ரவிசங்கர், ஒரு விதைப் பந்து ரூ.1 என பத்துக் கோடி விதைப்பந்துக்கு ரூ.10 கோடி ஆகும். அந்தச் செலவை நாங்கள் ஏற்போம். ஒரு கோடி மரக்கன்றுகளை நட்ட பிறகு, தும்கூர், சாமராஜ்நகர் ஆகிய மாவட்டங்களிலும் இதைச் செயல்படுத்துவோம் என்றார்.*




35 சதவீதம் இந்திய நிலப்பரப்பு பசுமையாகத் திகழ வேண்டும். நிதி ஆயோக் அமைப்பிடம் ஈஷா அறக்கட்டளை 76 பக்க பரிந்துரைகளை அளித்துள்ளது.

நாட்டில் 4 சதவீத நதிகள்தான் இமயமலையிலிருந்து உற்பத்தியாகின்றன. மீதி அனைத்தும் நாட்டுக்குள்ளேயே உற்பத்தியாகி ஓடுகின்றன என்றார் அவர்.

### காவிரிக்கு ஓர் அறைகூவல்

காவிரிக்கு அறைகூவல் (Cauvery Calling) என்ற இயக்கத்தை ரோட்டரி அமைப்புகள் ஏற்றுச் செயல்படுத்த வேண்டும். இந்த இயக்கம் வரும் செப்டம்பரில் தொடங்க இருக்கிறது. 34 சதவீத காவிரிப்படுகையை மீட்டெடுக்க நடத்தப்படும் இந்த பிரம்மாண்டமான இயக்கத்தில் கர்நாடக அரசும், தமிழக அரசும் பங்கேற்க இசைவு தெரிவித்துள்ளன என்று சத்குரு ஜக்கி வாசுதேவ் பேசினார்.

நிகழ்ச்சியில் கனவு காணுங்கள் (Dare to Dream) என்ற தலைப்பில் பேசிய பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் ரோட்டரி சங்கத் தலைவர் ரவிசங்கர், சத்குரு தொடங்கிய ஒரு கோடி மரக்கன்றுகள் திட்டத்தில் இரு அம்சங்கள் உள்ளன. என்றார்.

ஒரு கோடி மரக்கன்றுகளை இரு மாவட்டங்களில் நடுவது, கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் உள்ள தரிசு நிலங்களில் விதைப்பதற்காக 10 கோடி விதைப் பந்துகளை வழங்குதல் ஆகியவை இடம்பெற்றுள்ளன. விதைப் பந்துகள் காய்ந்துபோன நான்கைந்து நதிகள் உயிர்பெற்று எழுவதற்கு உதவும். பருவ மாற்றம், பசுமை எதிர் கொள்ளும் பிரச்சினைகளைச் சமாளிப்பதுடன், புவி வெப்பமயமாதல், பிளாஸ்டிக் ஆகிய ஆபத்துகளிலிருந்தும் காப்பாற்றுவதற்கு இந்த ஒரு கோடி மரக்கன்றுகள் திட்டம்

பெரிதும் துணை புரியும். ரோட்டரி சங்கம் நதிகளை இணைக்கும் பிரசாரத்தில் (Rally for Peace) ஈடுபடும். அதன்படி கன்னியாகுமரியிலிருந்து இந்தியாவின் வடமேற்கு எல்லையான வாகா எல்லை வரையில் இந்தப் பேரணி நடைபெறும். செப்டம்பர் அக்டோபர் மாதத்தில் நடைபெறும் இந்தப் பயணம் இந்திய-பாகிஸ்தான் நல்லுறவை வலுப்படுத்தும் வகையிலும் அமையும் என்றார்.

ஒரு கோடி மரக்கன்றுகள் (Koti Nati) திட்டத்தின் வழிகாட்டியான ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி K அமரநாராயணா பேசு கையில், இரு மாவட்டங்களிலும் மொத்தம் ஒன்றரை லட்சம் ஏக்கரில் நடுவதற்காக 36 லட்சம் மரக்கன்றுகள் தயாராக உள்ளன. அவை நடப்படுவதன் மூலம் 40 ஆயிரம் விவசாயிகளும் 323 கிராம ஊராட்சிகளும் பலன்பெறும். இந்த மரக்கன்றுகள் ஜூலை 15ம் தேதி நடப்படும். இரண்டாம் கட்டமாக 64 லட்சம் மரக்கன்றுகள் பிறகு நடப்படும்.

இத்திட்டத்திற்காக 14 மாதங் களாக இரு மாவட்டங்களையும் சேர்ந்த விவசாயிகளிடையில் உரிய பிரசாரம், விழிப்புணர்வு ஆகியவை மேற்கொள்ளப்பட்டன. கோடி மரக்கன்றுகள் (Koti Nati) திட்டத்தில் பங்கேற்பதற்காக சிக்கபல்லபூர் மாவட்டத்தைச் சேர்ந்த 20 லட்சம் விவசாயிகள் விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர். அதைப் போல் கோலார் மாவட்டத்திலிருந்து ஏராளமான விண்ணப்பங்கள் வந்துள்ளன என்றார்.

அரசு நிலங்கள், அரசுக் கட்டடங்கள், அலுவலகங்கள், பள்ளிகள், நிறுவனங்கள், சாலையோரங்கள், மயானங்கள் ஆகியவற்றிலும் மரக்கன்றுகள் நடப்படும் என்றார் அவர்.

### மகாதேவ் தம்பாலுக்கு மாவட்ட ஆளுநர் பாராட்டு

மாவட்ட ஆளுநர் சுரேஷ் ஹரி பேசுகையில், ICGF கமிட்டி தலைவர் மாகதேவ் தம்பாலைப் பாராட்டினார். அவர் பேசுகையில், சமுதாயத்திற்குச் சேவை புரிவதுதான் ரோட்டரியின் இதயத் துடிப்பாகும். மாவட்ட ரோட்டரி அமைப்புகள் மாவட்டங்களில் 80 கண்காட்சி கள் நடத்தியுள்ளன. இந்த மகத்தான விழாவைச் சிறப்பாக நடத்திய ICGF கமிட்டி தலைவர் மகாதேவ் தம்பால், மாவட்ட சமுதாய சேவைகள் இயக்குநர் BK பாஸ்கர் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள். இதுவரை ஏராளமானோர் இத்திட்டத்தில் இடம்பெற பதிவு செய்துள்ளனர் என்றார்.




*சத்குரு ஜக்கி வாசுதேவ் மரக்கன்று ஒன்றுக்கு நீர் விட்டு 'கோடி நாட்டி' திட்டத்தை துவக்கி வைக்கிறார்.*

BK பாஸ்கர் பேசுகையில், ரத்த தானம் மற்றும் மருத்துவ முகாம்களில் பங்கேற்போரின் எண்ணிக்கை இந்த ஆண்டு பெரிய வளர்ச்சி பெற்றுள்ளது. பெங்களூரின் ரத்தத் தேவையில் 30 சதவீதத்தை இது பூர்த்தி செய்து விடும். மகிழ்ச்சிப் பள்ளிகள் அமைத்தல், கழிவறைகள் கட்டித் தருதல், அங்கன்வாடிகளுக்கு உதவுதல், பள்ளிக் கட்டடங்களைப் புதுப்பித்தல் ஆகியவற்றில் மாவட்ட ரோட்டரி சங்கங்கள் புதிய வகையில் செயல்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ரோட்டரியின் உதவியோடு ஜெயதேவ் மருத்துவமனையில் இது வரை 50 ஆயிரம் குழந்தை களுக்குக் கண் பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டன. 1000 பேருக்குக் கண்புரை (காடராக்ட்) அறுவைச் சிகிச்சை நடத்தப்பட்டுள்ளது. 5000த் துக்கு மேற்பட்டோருக்கு டயாலிசிஸ் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. 10 ஆயிரம் குழந்தைகளுக்கு இதய அறுவைச் சிகிச்சை நடத்தப்பட்டுள்ளது.

நிகழ்ச்சியில் கூடியிருந்த ரோட்டரி அமைப்பினர் பூமித் தாயைக் காப்பாற்றுவோம் என்றும் ஒவ்வொரு ரோட்டரி உறுப்பினரும் 100 மரக்கன்றுகளைத் தங்களது ஊர்ப் பகுதிகளில் நடுவோம் என்றும் நதிகளைக் காக்கும் இயக்கத்தை (Koti Nati) உலகம் முழுதும் எடுத்துச் செல்வோம் என்றும் உறுதி எடுத்துக் கொண்டனர். உறுதி மொழியை DGE சமீர் ஹரியானி வாசித்தார்.

PDG Dr S நாகேந்திரா ஆப்பிரிக்காவில் இந்திய ரோட்டரி அமைப்பினர் மேற்கொண்ட மருத்துவ சேவைகளைக் குறிப்பிட்டார். நிகழ்ச்சிக்கு ராஜ்மகால் விலாஸ் ரோட்டரி சங்கம் (RC Rajmahal Vilas) ஏற்பாடு செய்தது. 100 ரோட்டரி சங்கங்களைச் சேர்ந்த 1,500 பேர் பங்கேற்றனர். ரோட்டரி சங்கத் தலைவர் ராஜாராம் கிருஷ்ணமூர்த்தி வரவேற்புரை ஆற்றினார். ■

# பாவ்நகரில் ஒரு மின்-நூலகம்

ரோட்டரி செய்திக்குழு



RC பாவ்நகர், RID 3060, நகர மையத்தில் மின்-நூலகத்தை அமைத்துள்ளது, இது மாணவர்களுக்கு மாநில, மத்திய அரசுத் துறைகள், வங்கிகள் மற்றும் ரயில்வேத் துறையில் உள்ள இதர பணிகள் போன்றவற்றிற்கான பல்வேறு போட்டித் தேர்வுகளுக்குத் தயார் செய்ய உதவும். ரோட்டரி Dr ரமணிக்லால் ஒ மேத்தா மின்-நூலகத்தில் 60 பேர் உட்கார்ந்து படிக்கக் கூடிய இருக்கை வசதியும் முழுவதுமாக ஏர்கண்டிஷனும் செய்யப்பட்டுள்ளது. கம்ப்யூட்டர்களில் இணைய வசதியும் இருப்பதால் தேவையான புத்தகங் களை பதிவிறக்கங்களைச் செய்யவும் தேர்வுகளுக்கான விண்ணப்பப் படிவங்களை நிரப்பவும் முடியும். நூலகத்தில் பிரிண்டர் மற்றும் ஸ்கேன் மெஷினும் உள்ளது. 75 போட்டித் தேர்வுகளுக்குத் தேவையான புத்தகங் கள் உட்பட சுமார் 1,200-க்கு அதிக மானப் புத்தகங்கள் நூலகத்தில் உள்ளது.

“எங்கள் சங்கம் ஒரு மின்-நூலகத்தை அமைக்க எப்போதும் விரும்பியது. Dr பங்கஜ் R மேத்தா குடும்பத்தினரின் நன்கொடையால் இக்கனவு நனவானது,” என்றார் சங்கத் தலைவர் மனிஷ் கோத்தாரி. தகுதி வாய்ந்த நூலகர்கள் மாணவர்களுக்கு உதவி செய்கிறார்கள். போட்டித் தேர்வு களுக்குத் தயாராக இளைஞர் களுக்கு மாதிரித் தேர்வுகளும் ஆங்கில இலக்கண வகுப்புகளும் நடத்தப்படுகிறது. தற்போது 700 மாணவர்கள் உறுப்பினர்களாக இந்த நூலகத்தில் சேர்ந்துள்ளனர். “இந்த நூலகத்தைப் பயன்படுத்தி சுமார் 50 பேர் அரசு மற்றும் அரசு உதவி பெறும் அமைப்புகளில் வேலை பெற்றதற்கு நாங்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம்,'' என்றார் கோத்தாரி. ■

# குழந்தைகளுக்கு புத்துயிர் தரும் ரோட்டரி



*பிரகதீஸ்வரன் தன் பெற்றோர் மற்றும் டெப்ரௌ அமைப்பின் தலைவர் அணி கிரேஸ் கலைமதியுடன்.*

RID 3232 மெட்ராஸ் சென்னப்பட்டினம், சென்னை MMM மருத்துவமனை உடன் இணைந்து, இதய நோயுடன் பிறந்த குழந்தைகளின், ஏழை குடும்பங்களுக்கு சிகிச்சைக்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது. இதுவரை 200 குழந்தைகள் வெற்றிகரமாகக் குணப்படுத்தப்பட்டுள்ளனர், இருபது ஆண்டுகளுக்கு மேலாக இச்சேவையை, மலேசியாவிலுள்ள RC டெப்ரௌவின் உதவியுடன் இச்சங்கம் நடத்தி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஏழு குழந்தைகள் கண்டறியப்பட்டு இலவச சிகிச்சை வழங்கப்படுகிறது.

பதினாறு மாதமே ஆன பிரகதீஸ்வரன் என்ற குழந்தை தான், மே மாதத்தில் இந்த ரோட்டரி ஆண்டில் குணப்படுத்தப்பட்ட நான்காவது குழந்தை.■

# சென்னையில் ஆளுநர்களுக்குச் சிறப்புப் பயிற்சி

ஜெய்ஸ்ரீ



ஜெய்ஸ்ரீ

RIDE *பரத் பாண்ட்யா,* PRID *சேகர் மேத்தா மற்றும்* PRIP *கல்யாண் பானர்ஜீ பிற* DGE*க்களுடன்.*

புதிய மாவட்ட ஆளுநர்களுக்கு ஒரு நாள் சிறப்புப் பயிற்சி அண்மையில் சென்னையில் நடைபெற்றது. RID C பாஸ்கர், RIDEs பரத் பாண்ட்யா, கமல் சங்வி, PRIP கல்யாண் பானர்ஜி, PRIDs சேகர் மேத்தா, Y P தாஸ், TRF அறங்காவலர் குலாம் வஹன்வதி ஆகியோர் உரையாற்றினர்.

DGEக்கள் சொல் செயல் ஆகிய வற்றைத் தாங்களே வகுத்துக் கொள்ள வேண்டும். உங்களது செயல்பாடுகள் உங்கள் குழுவினரை ஈர்க்க வேண்டும் என்று கமல் சங்வி கேட்டுக் கொண்டார். அத்துடன் 2020ம் ஆண்டு பிப்ரவரி கோல்கத்தாவில் RI தலைவர் மார்க் மலோனி பங்கேற்கும் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட உரிய திட்டங்களை ஆளுநர்கள் வகுத்துக் கொள்ளவும் அவர் வலியுறுத்தினார்.

மக்கள் தாங்கள் சந்திக்கும் பிரச் சினைகளுக்கு ரோட்டரி அமைப்பினர் உரிய தீர்வைக் காண்பர் என்று மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளனர். அந்த நம்பிக்கையை மதித்து, அவர்களது எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டும். நாம் ஒவ்வொருவருமே ரோட்டரியின் முகங்கள் தான் என்று பாண்ட்யா குறிப்பிட்டார்.

தலைமைப் பண்புகள் குறித்து இயக்குநர் C பாஸ்கர் பேசுகையில், மாவட்ட ஆளுநர்கள் தங்களது சங்கத் தலைவர்கள், செயலாளர்கள் உள்பட மாவட்ட குழுவினருக்கு வழிகாட்டிகளாக இருக்கின்றனர். எனவே, உங்களது சொல்லிலும் செயலிலும் விழிப்போடு இருக்கவேண்டும். அவர்கள் சிந்திப்பதைச் செயல்படுத்த உரிய ஊக்கத்தை அளியுங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

TRF அறங்காவலர் வஹன்வதி பேசுகையில், பல்வேறு சமூகப் பணிகளுக்காகக் கிடைக்கும் மானிய உதவியை மாவட்ட தலைவர்கள் உடனடியாகவும் பயனுள்ள வகையிலும் பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார். கிடைக்கும் மானியத்தைச் சேர்த்து வைப்பதால் எந்தப் பயனும் இல்லை. RI போர்டு அனுமதிக்கும் நிதியை அர்த்தமுள்ள வகையில் பயன்படுத்துங்கள். விடா முயற்சியோடு ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துங்கள் என்றார்.

PRID Y P தாஸ் ரோட்டரி இந்தியா காசநோய் ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு கமிட்டியின் தலைவராக இருக்கிறார். நிகழ்ச்சியில் பேசிய அவர், காச நோயை உடனே கண்டறிவது, சிகிச்சை அளித்தல் குறித்து ரோட்டரி உறுப்பினர்கள், மக்கள், உள்ளூர் மருத்துவர் களிடையே உரிய விழிப்பினை மாவட்ட ஆளுநர்கள் ஏற்படுத்த வேண்டும். சுகாதார முகாம்களில், குறிப்பாக கிராமப்புறங்களில் நோய் கண்டறிதல், சோதனை, விழிப்புணர்வு ஆகியவற்றையும் மேற்கொள்ள வேண்டும்.

இந்தியர்களில் 75 சதவீதம் பேர் சர்க்கரைநோய், ரத்த அழுத்தம், உடல் பருமன் ஆகிய நோய்களால் இறக்கிறார்கள். அத்தகைய தொற்று இல்லாத நோய்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் ரோட்டரி ஈடுபடுவதற்கு இது தான் தருணம் என்றார்.

RISAO பிரதிநிதி ஜதீந்தர் சிங் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறித்தும், தேர்தல் குறித்தும் பேசினார். கல்யாண் பானர்ஜி ரோட்டரி எழுத்தறிவு இந்தியா இயக்கத்தின் குறிக்கோள் குறித்துப் பேசினார்.

குழந்தைகள் மேம்பாடு, முதியோர் எழுத்தறிவு ஆகியவற்றில் மாவட்ட ஆளுநர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்றார் சேகர் மேத்தா.■

# RI தெற்காசிய அலுவலக அறிவிப்பு

**RIன் புரோஃபெஷனல் டூல்கிட்கள்**
இளம் தொழில்துறை வல்லுனர்களுடன் இணைந்து செயல்படுவதற்காக ரொட்டேரியன்களுக்கு RI வடிவமைத்துள்ளது. வளர்ந்துவரும் தலைவர்களை ஈடுபடுத்துவதற்கும், ஊக்கப்படுத்துவதற்கும்; ரோட்டரி சங்கங்களுடன் தொடர்பு கொள்ளும் வழிகளைக் கண்டறியவும், உள்ளூர் ஊடகத்துடன் தங்களின் முயற்சிகளைப் பிரபலப்படுத்தவும்.

- தங்கள் சங்கத்தைக் கண்கவரும் விதத்தில் மாற்றுவதற்கான வாய்ப்புகளைக் கண்டறியவும்.
- உறுப்பினர்கள் தங்கள் சங்கத்தின் மூலம் நேர்மறை அனுபவத்தைப் பெற்று, அவர்களுக்கு நீடித்த மதிப்பை அளிப்பதற்கும் பயன் படுகிறது.

இவை RI இணையதளத்தில் கிடைக்கிறது: *www.rotary.org/engaging-younger-professionals-toolkit*

**ரோட்டரியின் 6 குறிக்கோள்களில் மாற்றங்கள் (Areas of focus)**
ஏப்ரல் மாதத்தில், அறங்காவலர்கள், உலகளாவிய மானியத் தகுதி வரம்பு, கூடுதலான திட்டப்பணி வகைகள், சுற்றுச்சூழலில் கவனம் போன்றவற்றில் தெளிவான பார்வையை வழங்கு வதற்கு, Areas of focusல் மாற்றங்களை அங்கீகரித்துள்ளனர். மூன்று பெயர்களை (நட்சத்திர குறியிட்டவை) மட்டும் மாற்றியமைத்துள்ளனர்:

- அமைதி உருவாக்கம் மற்றும் போர் தடுப்பு★
- நோய்த்தடுப்பு மற்றும் சிகிச்சை
- தண்ணீர், துப்புரவு மற்றும் சுகாதாரம்★
- தாய் சேய் உடல்நலம்
- அடிப்படை கல்வி மற்றும் எழுத்தறிவு
- சமூகப் பொருளாதார வளர்ச்சி★

இம்மாற்றங்கள் ஜூலை 1 முதல் அமலுக்கு வரும். தகவல்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள் grants@rotary.org மற்றும் aof@rotary.orgயை தொடர்பு கொள்ளலாம்.

**RI பணமாற்று விலை -**
01 ஜூலை 2019 முதல் ரோட்டரி பணமாற்று விலை ஒவ்வொரு மாதத்தின் முதல் தேதியில் அப்போதைய சந்தை விலையில் அடிப்படையில் இருக்கும். ரோட்டரி பணமாற்று விலை https://my.rotary.org/en/exchange-rates இணையதளத்தில் கிடைக்கும்.

**CSR செயல்பாடுகளுடன் புதிய துறைகளை சேர்ப்பது**
CSR நடவடிக்கைகளுக்குள் புதிய துறைகளைச் சேர்ப்பது தொடர்பாக கார்பரேட் விவகாரத் துறை அமைச்சகமானது, நிறுவனங்கள் சட்டம், 2013-இன் அட்டவணை VII-க்கு மேற்கொண்டு திருத்தங்களை அறிவித்துள்ளது, இது 30-05-2019 முதல் அமலுக்கு வரும். நிவாரணம், மீட்பு, மற்றும் புனரமைப்பு உட்பட பேரிடர் மேலாண்மையை CSR செயல்பாடு களுக்கு கீழ் சேர்க்க இந்த திருத்தங்கள் எதிர்பார்க்கிறது.■

ADVT

Want weight loss

without protien powder, without tablets, without Juice and honey, with out even exercise.

Here comes DR. Sheban MBBS.,DCH, post graduated from India's most reputed Madras medical college. ... We give your own home made food based, Balanced diet chart.

We make lean and overweight diabetes patients to STOP diabetic medicines .. gradually, by giving a Balanced diet chart.

If you lose weight benefits for hormone problems, Pcod, menstural problems, more hair in face in girls, pimples, having no babies, thyroid problems, high bad cholesterol, high BP, fatty liver, gallstones, knee joint pain, high blood sugar, hair loss, constipation, male sex problems, childhood obesity, migraine .... can be benefitted.

Palliyady... weight loss clinic.

Click red Subscribe button in youtube .. DR.Sheban clinic.
Like us at Facebook .. DR.Sheban weight reduction clinic
To know more, whatsapp us : +91 9443487004





## கட்டாயத்தால் உறுப்பினராகி இன்று ரோட்டரியை கொண்டாடுகிறார்

**ரவி தோத்ரே**
**ஸ்டோரேஜ் மெட்டீரியல் உற்பத்தியாளர்**
RC பூனா நார்த் — RID 3131

1990 ஆம் ஆண்டு ரொட்டேரியன் தரவ் என்னை ஒரு ரோட்டரி உறுப்பினராக மாறக் கட்டாயப்படுத்தினார். அப்போது அவர் GSR ஆக இருந்தார். அவர் மீது எனக்கு பெருமதிப்பு இருந்தது. ஆனால் இப்போது அவர் இல்லை, என்று சொல்கிறார் ரவி தோத்ரே, சரி எப்போது ரோட்டரியை கொண்டாட ஆரம்பித்தீர்கள், என்று கேட்டேன். அடுத்து இரண்டு ஆண்டுகளில் நான் தலைவராக மாறிய போது தான், ஆனால் 2014-15 ஆண்டு, அப்போதைய RI தலைவர் கேரி ஹுவாங் முன்னிலையில் ஈ-லேர்னிங்காக ரூ.10 கோடி நிதிக்கு டாடா டெக்னாலஜிஸ் உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட தருணத்தைத் தான் மிகவும் நேசித்தேன் என்றார்.

100 ஹேப்பி ஸ்கூல்கள், 1,000 பசுக்கள், பள்ளிகளுக்கு 1,500 ஈ-லேர்னிங் உபகரணங்களை நன்கொடையளிப்பது மற்றும் புனேயில் ஒரு ரோட்டரி மருத்துவமனையை அமைப்பது போன்றவை உட்பட பல்வேறு திட்டங்களை வைத்திருக்கிறார். உறுப்பினர்சேர்க்கையில், குறைந்தபட்சம் 900 புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதிலும் 15 புதிய சங்கங்களை அமைப்பதிலும் நம்பிக்கை கொண்டுள்ளார். சுமார் 1,000 பெண் ரொட்டேரியன்கள் எங்களிடம் உள்ளனர், எனது காலத்தில் 30 பெண்மணிகள் தங்களின் சங்கங்களுக்குத் தலைமை ஏற்கப்போகிறார்கள் மற்றும் 30 துணை ஆளுநர்களில் எட்டுபேர் பெண்மணிகளாக இருப்பார்கள்.

இந்த DG, TRF-க்கான நன்கொடையை 1.5 மில்லியனாக உயர்த்தவும், இரண்டு AKS உறுப்பினர்கள் மற்றும் 100 முக்கிய நன்கொடையாளிகளை அறிமுகப்படுத்தவும் திட்டமிடுகிறார்.

அவர் ரொட்டேரியன்கள் உள்ள ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்; அவர் மனைவி ஜெயஸ்ரீ, மகன்கள் மற்றும் மருமகள்கள் அனைவரும் ரோட்டரி உறுப்பினர்கள். என் குடும்பத்தில் ஐந்து முன்னாள் தலைவர்கள் இருக்கிறார்கள், என்று பெருமையுடன் சொல்கிறார்.■

# உங்கள் ஆளுநர்களுடன் ஒரு சந்திப்பு

ஜெய்ஸ்ரீ



## ரோட்டராக்ட் சங்கத்தைப் பிரபலப்படுத்துவது தான் அவரின் இலக்கு

**ரமேஷ் BN, சார்ட்டர்டு அக்கவுண்டன்ட், RC ஹஸன், RID 3182**

ரமேஷ் இந்த வருடத்தில் மாவட்டத்தில் உள்ள அனைத்து 85 சங்கங்களும் குறைந்தபட்சம் ஒரு ரோட்டராக்ட் சங்கத்தை அமைக்க ஆலோசனையை வழங்கியுள்ளார். 100 பள்ளிகளில் ஈ-லேர்னிங் மையங்கள் அமைக்க நிதியுதவி செய்வது, பசுமையான புவியைப் பராமரிக்க இரண்டு இலட்சம் விதைப்பந்து களை வழங்குவது, தாய்ப்பால் கொடுப்பது பற்றிய விழிப்புணர்வை தாய்மார்களிடம் ஏற்படுத்துவது, ஒரு இலட்சம் இளைஞர்கள் பயன்பெறும் வகையில் வாழ்வுக்கான வழிகாட்டி முகாம்கள் மற்றும் மாவட்டந்தோறும் திறன் வளர்ப்புத் திட்டங்கள் போன்ற வற்றைச் செயல்படுத்த விரும்புகிறார். மேற்குறிப்பிட்ட அனைத்து திட்டப்பணிகளுக்கும் CSR கூட்டாளி எங்களிடம் உள்ளது, என்றார்.

இந்தத் திட்டப்பணிகளைத் தவிர, பள்ளி மாணவர்களிடைய சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் WinS திட்டங்களை குறிப்பிட்ட எண்ணிக்கையில் செயல்படுத்தவும் ரமேஷ் மிகவும் ஆர்வமாக இருக்கிறார்.

இப்போது 3,200 இருக்கும் உறுப்பினர்களை 10 சதவீதம் அதிகரிக்க விரும்புகிறார், மேலும் TRF-கான நன்கொடையை 2,00,000 வரை உயர்த்துவதே அவர் இலக்கு.

1981ம் ஆண்டில் ரமேஷ் ரொட்டேரியனாக மாறினார். அவருடைய மகன், V R அஷ்வின் RC பெங்களூர், RID 3190 உறுப்பினர். ■

## பெண்கள் முன்னேற்றத்திற்கு அடித்தளம் இடுவது

**G சந்திரமோகன்**
**ஆட்டோமொபைல் உதிரிபாகங்கள் உற்பத்தியாளர்**
**RC மெட்ராஸ் நார்த்-வெஸ்ட், RID 3232**

பெண்கள் பொருளாதார ரீதியாக சுதந்திரமாக இருக்க நாங்கள் விரும்புகிறோம், ஏனெனில் அவர்களின் கணவன்மார்கள் தங்கள் சம்பாத்தியத்தை மதுவிலேயே வீணாக்குகிறார்கள், இதனால் ஒட்டு மொத்த குடும்பமும் பாதிக்கிறது. ஆட்டோக்களை ஓட்ட பெண்களுக்கு நாங்கள் கற்றுத்தந்து, லைசென்ஸ் பெறுவதற்கும் வண்டி கிடைப்பதற்கும் உதவுகிறோம். பிறகு அவர்கள் மற்றதைப் பார்த்துக்கொள்வார்கள், என்று பெருமையுடன் சொல்கிறார்.



சமீபத்தில் நடந்து முடிந்த ஹேம்பர்க் மாநாட்டில், ஒரு பேரார்வ மிக்க மாநாட்டு பங்கேற்பாளரான, சந்திரமோகன் இந்தத் திட்டப் பணியைப் பற்றி பிரதிநிதிகளுடன் சாதகமான முடிவுகள் கிடைக்கும்படி பேசி யுள்ளார். நேரடியாகவோ அல்லது வட்டியில்லா சிறு கடனுதவி திட்டங்கள் வழியாகவோ பெண் ஓட்டுனர்களுக்கான ஆட்டோக்களுக்கு நிதியளிக்க சங்கங்கள் முன்வந்து கொண்டிருக்கிறது.

இளஞ்சிவப்பு நிறத்தில் வர்ணம் பூசப்பட்ட ஆட்டோக்களில் ரோட்டரி முத்திரை இருக்கும், இதனால் இந்தத் திட்டப்பணி நல்ல மக்கள் தொடர்பு கொண்டதாக இருக்கும். பயணிகள் எளிதாகப் பயன்படுத்துவதற்கு ஓலா அல்லது ஊபர் போன்றவை போல ஒரு ஆப் தொடங்குவதற்குத் திட்டமிடுகிறார்.

வழிபாட்டுத் தலங்களில் மருத்துவ முகாம்களை நடத்துவதும் கிராமப்புறங்களிலும் வருடத்திற்கு குறைந்தபட்சம் 20 மாதாந்திர மருத்துவ முகாம்களை நடத்துவதும் தான் மாவட்டத்துக்கான அவருடைய இதர இலட்சியத் திட்டங்கள்.

இந்த ஆளுநர், TRF-க்கான நன்கொடையை 1.5 மில்லியனாக உயர்த்த திட்டமிடுகிறார், இதில் போலியோ நிதிக்காக 1 மில்லியன் உயர்த்த நான் மொழிந்துள்ளேன். இதற்காக-போலியோவை ஒழிக்க 2 சொட்டுக்கு 2 என்ற ஒரு பிரச்சாரம் செய்யத் திட்டமிடுகிறார்.

உறுப்பினர் சேர்க்கையில், இப்போது 5,000 ஆக இருக்கும் எண்ணிக்கையை மற்றொரு 1,200 உறுப்பினர்கள் கொண்டு அதிகரிக்க விரும்புகிறார், இதில் 250 பெண் ரொட்டேரியன்களும் அடங்குவார்கள். 120 தலைவர்களில் 22 பெண்மணிகள் என்பது குறித்து அவர் மகிழ்ச்சியாக இருக்கிறார்.

1993 ஆம் ஆண்டு ரோட்டரியில் இணைந்தார், சமூக சேவையில் ஈடுபடும் ஒரு போராளியாக இருந்ததில்லை. ஆனால் மனிதநேயத்தை ரோட்டரி எனக்கு கற்றுக்கொடுத்தது. இன்று ஒரு அறக்கட்டளை நன்கொடையாளி, பவுண்டேஷனுக்கு $35,000 நன்கொடை அளித்துள்ளார். ■

## இன்டராக்டர் முதல் மாவட்டத் தலைவர் வரை

ஜமீர் பஷா
அறுவைசிகிச்சை நிபுணர்
RC திருச்சிராப்பள்ளி மிட்டவுண் — RID 3000



1969ம் ஆண்டில் இன்டராக்ட் தலைவராக பணியாற்றினார், அப்போது அவருக்கு வயது வெறும் 12, மதுரை மெடிக்கல் கல்லூரியின் ஒரு ரோட்டராக்டர், பிறகு திருச்சியில் ஒரு ரொட்டேரியனாக மாறினார். ஜமீர் பாஷா, இந்தியாவில் இருந்தது கொஞ்சம் தான், ஏனெனில் மேற்படிப்பிற்காக நிறைய காலம் வெளிநாட்டில் தான் இருந்தார், 2010 ஆம் ஆண்டு சூரிச் நகரத்தில் தூங்கிக்கொண்டிருந்த போது, என் சங்கத்திலிருந்து ஃபோன் வந்தது, அடுத்த வருடத்திற்கு நான் தான் தலைவர் என்று என்கிறார் அவர்.

உறுப்பினர்களைத் தக்கவைப்பதில் கவனம் செலுத்துவது என்ற யோசனையை பாஷா பகிரிந்து கொல்கிறார். ரொட்டேரியன்களுக்கான ஒரு சேமிப்பு நிதியை திட்டமிட்டி ருந்தார், இதில் ஒவ்வொரு ரொட்டேரியனும் ஒரு குறிப்பிட்ட பணத்தை நன்கொடையளித்து, ரொட்டேரியன் யாராவது இறந்தால் அவரின் குடும்பத்திற்கு கொடுக்கப்படும். இந்த பணம் அவருடைய இழப்பால் ஏற்படும் செலவுகளுக்கு பேருதவியாக இருக்கும். இந்தத் திட்டத்திற்கு தகுதி வரம்பு அவர் குறைந்தபட்சம் ஐந்து வருடங்கள் ஒரு உறுப்பினராக இருந்திருக்க வேண்டும், என்று சொல்கிறார்.

தன் பணிக்காலத்தின் போது 10 திட்டப்பணிகளை நிறைவேற்றுவதற்குத் திட்டமிட்டுள்ளார். அதில் மாவட்டம் தோறும் ஒரு மாபெரும் இரத்ததானம் நடத்துவது தான் முதல் பணி. ஒரு மருத்துவராக மற்றவர்களை விட எனக்கு இதன் மதிப்புத் தெரியும்.

உறுப்பினர்சேர்க்கையில், இப்போது 5,500 உறுப்பினர்களாக இருப்பதை 10 சதவீதம் அதிகரிக்க விரும்புவதும், மேலும் இப்போது 450 பெண் ரொட்டேரியன்கள் இருக்கும் குழுவில், மேலும் 50 பெண்மணிகளைச் சேர்ப்பதும் தான் அவருடைய இலக்கு.

TRF-க்கான நன்கொடையை 2.05 மில்லியன் உயர்த்த இலக்கு வைத்துள்ளார்.■

## தண்ணீர் வளங்களை மேம்படுத்துவது தான் அவரின் முன்னுரிமை

ஷேக் சலீம்
கல்வியாளர், RC குற்றாலம் சென்ட்ரல், RID 3212



2002ம் ஆண்டில் ரொட்டேரியனாக மாறுவதற்கு ரோட்டரியின் நிர்வாகம் அவரைக் கவர்ந்து இழுத்தது, வெகு விரைவில் ஒரு தொண்டு நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளராக பணியாற்ற உற்சாகப்படுத்தப்பட்டார். 119 பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 70,000 குழந்தைகளை பரிசோதித்த ஒரு திட்டப்பணியின் போது நான் இந்த அமைப்பிற்குள் இழுத்துவரப்பட்டேன், என்று சொல்கிறார் ஷேக் சலீம். WinS திட்டப்பணிகளை செயல்படுத்துவது மற்றும் மாவட்ட மானியமான ரூ.30 இலட்ச மதிப்பின் உதவியுடன் நீர் வளங்களை மேம்படுத்துவது மற்றும் ஒரு உலகளாவிய மானியத்தின் மூலம் மாவட்டம் தோறும் டயாலிசிஸ் மையங்களை அமைப்பது போன்றவை உட்பட இந்த வருடத்திற்கான அவரின் இலக்குகள்.

மற்றொரு முத்திரைத் திட்டப் பணியான குழந்தைகளைக் காப்பாற்றுவோம் மூலம் CHD நோயால் பாதிக்கப்பட்ட 1,000 குழந்தைகளைக் காப்பாற்றுவது மற்றும் 2013 ஆம் ஆண்டுமுதல் இப்போது மாவட்டத்தில் செயல்பாட்டில் இருக்கும் மற்றொரு திட்டப்பணியான தங்கமான இதயங்கள், இது அப்போலோ குழந்தைகள் அறக்கட்டளையுடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது.

மாபெரும் மாவட்ட கோஷங்களான-ரோட்டரியை அறிந்து கற்கவும், ரோட்டரியை நேசியுங்கள், ரோட்டரியை தெரியப்படுத்துவோம், ரோட்டரியில் மகிழ்ச்சியாக இருப்போம், ரோட்டரியில் கொண்டாடுவோம்-போன்றவற்றின் மூலம் ரோட்டரியை ரொட்டேரியன்களிடம் கொண்டு சென்று இந்த அமைப்பில் ஒரு ஆர்வத்தை உருவாக்குவது என்ற நோக்கத்தை வைத்திருக்கிறார் சலீம்.

மாவட்ட உறுப்பினர் சேர்க்கையை 10 சதவீதம் அதிகரிக்கவும் 6 முதல் 8 சங்கங்களை ஸ்தாபிக்கவும் அவர் திட்டமிடுகிறார்.

TRF-க்கான நன்கொடையை 3,30,000 வரை உயர்த்த நம்பிக்கை வைத்துள்ளார்.■

புகைப்படங்கள்: K விஸ்வநாதன், வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

Rotary PEOPLE OF ACTION

# RC பாம்பே 90வது ஆண்டுவிழா மலர்

ரோட்டரி செய்திக்குழு

ரோட்டரியின் நிறுவனர் பால் ஹாரிஸ் அவர்களின் வார்த்தையால் உத்வேகத்தையும், ஒரு "நல்ல ரோட்டரி புத்தகத்தின்" மதிப்பையும் ஒருங்கிணைத்து, பாம்பே ரோட்டரி சங்கம் அதன் 90 வருட வரலாறுகளை எடுத்து ரைக்கும் 'ஏ லிவிங் லெகஸி' (A Living Legacy) என்று தலைப்பிட்ட ஒரு புத்தகத்தை வெளியிட்டது. மகாராஷ்டிரா மாநில ஆளுநர் C வித்யாசாகர் ராவ் தலைமையில் நடைபெற்ற ஒரு வண்ணமயமான நிகழ்ச்சியில், சமூக முன்னேற்றங்கள் மற்றும் கிராமப்புற வளர்ச்சிக்கான ஆதித்யா பிர்லா மையத்தின் தலைவர் ராஜஸ்ரீ பிர்லா, இந்த புத்தகத்தை வெளியிட்டார்.

சங்கத்தலைவர் விஜய் ஜதியா, தான் ஏழு வருடங்களாக ரொட்டேரியனாக இருப்பதாகவும் ரோட்டரியில் சேர்ந்த பிறகு தனது வாழ்க்கையே மாறியதாகவும் கூறினார். PRIP கல்யாண் பானர்ஜி மற்றும் RID 3141 DG சசி சர்மா ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். இந்த கூட்டத்தில் ரோட்டரி உலகத்தைப் பற்றிய ஒரு சுருக்கமான விஷயங்கள் கொண்ட குறும்படம் காட்டப்பட்டது.■




*ஆதித்யா பிர்லா அமைப்பின் தலைவர் ராஜஸ்ரீ பிர்லா பாம்பே ரோட்டரி சங்கத்தின் புத்தக வெளியீட்டு விழாவில் PRIP கல்யாண் பானர்ஜி, TRF அறங்காவலர் குலாம் வஹனவதி, DG சசி சர்மா மற்றும் RC பாம்பேத் தலைவர் விஜய் ஜடியா ஆகியோரும் உள்ளனர்.*

# பத்தமடை மக்களுக்கு புதிய கழிவறைகள்

தமிழ்நாடு, திருநெல்வேலி மாவட்டம் பத்தமடை கிராமத்தில் உள்ள MGR நகரவாசிகள் மகிழ்ச்சியில் திளைக்கின்றனர், காரணம் RC தின்னவேலி RID 3212 சங்கம் 38 குடும்பங்களுக்கு கழிவறைகளைப் பரிசளித்துள்ளது. 70 குடும்பங்கள் திறந்தவெளியில் மலம் கழித்தலில் இருந்து விடுதலை பெறும் என்று சொல்கிறார்கள் சங்கத்தின் TRF மானியத் தலைவர் P சதீஸ்குமார். இந்த கிராமம் கோரைப்புல் (நாணல் செடி) கொண்டு தயாரிக்கப்படும் பாய்க்குப் பெயர் போனது.

RC லாக்ரோஸ் லா-வேலி, லாக்ரோஸ் டவுண்டவுன் RID 6250 மற்றும் TRF உடன் இணைந்து, உலகளாவிய மானியத் திட்டத்தின் உதவியுடன் $40,458 மதிப்புள்ள இந்த வசதி நிறைவேற்றப்பட்டது.



PDG *சின்னதுரை அப்துல்லா,* RC *தின்னவேலித் தலைவர்* P *சொக்கலிங்கம் பத்தமடை கிராமவாசிகளுடன்.*

PDG Dr சின்னதுரை அப்துல்லா இந்த வசதிகளை பயனாளிகளுக்கு வழங்கினார். திருநெல்வேலி அரசு மருத்துவமனை கல்லூரியைச் சேர்ந்த மருத்துவ ஊழியர்கள் கழிவறைகளைப் பராமரிப்பது மற்றும் திறந்தவெளியில் மலம் கழிப்பதால் ஏற்படும் சுகாதாரத் தீமைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

கடந்த ஆண்டு இச்சங்கம், காலணிக்கு அருகாமையில் உள்ள 125 வருட பழைமையான ராமஷேசையர் பள்ளியில் கழிவறை வளாகம் மற்றும் கைகழுவும் தொட்டிகளைக் கட்டிக் கொடுத்து, நேப்கின் எரியுலையையும் வழங்கியது. அங்கே படிக்கும் 500 மாணவ, 250 மாணவிகளுக்கு இந்த வசதிகள் பயனளித்துக் கொண்டிருக்கிறது. "கடந்த ஆண்டு எங்கள் சங்கத்தின் 75-வது ஆண்டு விழாவைக் கொண்டாட செயல்படுத்திய எங்களின் நினைவுத் திட்டப் பணிகளில் ஒன்று அது," என்கிறார் சதீஸ்குமார்.■

# ஃபரிதாபாத்தில் புதிய அறுவை சிகிச்சை கூடம்

ரோட்டரி செய்திக்குழு

மீண்டும் ஒருமுறை TRF, RC ஃபரிதாபாத், RID 3011, உடன் இணைந்து மாயாஜாலம் செய்துள்ளது, ஹரியானா மாநிலம் பகோலாவில் உள்ள சத்யசாய் சஞ்ஜீவனி மருத்துவமனையில் ஏழைக் குழந்தைகளுக்கு சிகிச்சையளிக்க ஒரு அறுவை சிகிச்சை கூடம் மற்றும் இதய சிகிச்சை ICU போன்றவற்றை ஒரு உலகளாவிய மானியத் திட்டப்பணி மூலம் அமைத்துள்ளது.

இந்த மருத்துவத் திட்டப்பணிக்காக அமெரிக்க சங்கம் RC ஃபோர்ட் வேய்ன், RID 6540, உடன் இந்த சங்கம் கைகோர்த்தது. DG வினய் பாட்டியா மற்றும் IPDG ரவி சௌத்ரி ஆகியோர், OT மற்றும் ICU போன்றவற்றைத் திறந்துவைத்தனர்.

ஒரு இதய அறுவை சிகிச்சையின் செலவு சுமார் ரூ.2 முதல் 3 இலட்சம் வரை ஆகும், பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கு பலமுறை சரியான மருத்துவ மற்றும் OT வசதிகள் கிடைப்பதில்லை. எனவே, இந்தத் திட்டப்பணி அது போன்ற குழந்தைகளுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும்.

முன்பு இந்த மருத்துவ மனையில் ஒரேநாளில் 2 முதல் 3 குழந்தைகளுக்கு மட்டுமே சிகிச்சையளிக்க முடிந்தது, ஆனால் இப்போது OT மற்றும் ICU மையம் கூடுதலாக இருப்பதால், இனி அதிகமான குழந்தைகளுக்கு சிகிச்சையளிக்க முடியும்.

இந்தத் திட்டப்பணியின் மொத்த மதிப்பான $413,068 நிதியில் இந்த சங்கம் $78,750 பங்களித்தது.இந்த மருத்துவமனையின் ஒரு தனித்துவமான அம்சம் என்னவென்றால், அறுவை சிகிச்சைகள் இலவசமாக செய்யப்படுவதால் கட்டணப்பிரிவே இல்லை, மேலும் உடன் இருப்பவர்களுக்கு தங்குமிடமும் உணவும் இலவசமாகவே வழங்கப் படுகிறது. ரோட்டரியின் இந்த தாராள குணத்திற்கு மருத்துவமனையின் தலைவர் C ஸ்ரீநிவாஸ் நன்றி பாராட்டினர்.■



*PDG வினய் பாட்டியா மருத்துவமனையில் சிகிச்சை பெறும் ஒரு குழந்தையுடன்.*

# பசுமையாக மாறிய இடுகாடு



*நீலகிரி மாவட்ட ஆட்சியர் இன்னசென்ட் திவ்யா தகன வளாகத்தில் மரம் நடுகிறார்.*

வெலிங்டன் தகன வளாகத்தை பசுமையாக மாற்றும் ஒரு முயற்சியை சமீபத்தில் தொடங்கியுள்ளனர் RC நீல்கிரிஸ் RID 3202 சங்க ரொட்டேரியன்கள். இந்த சங்க உறுப்பினர்களின் தாராள நன்கொடையின் மூலம்,சொர்க்க பூமி என்று அழைக்கப்படும் இந்த LPG இடுகாடு 2005ம் ஆண்டில் கட்டப்பட்டது. ரூ.30 இலட்சம் செலவில் செய்யப்படும் புனரமைப்பு பணியின் ஒரு அங்கமாக மரக்கன்றுகள் நடப்பட்டது என்றார் சங்கத்தலைவர் தினி கோரா. பளிச்சென்று மின்னும் பூச்செடிகள் கொண்டு வேலிகளும் அழகான புல் தரைகளையும் அமைத்து எழில்மிகு தோற்றத்துடன் காட்சியளிக்கிறது.

நீலகிரி மாவட்ட ஆட்சியர் இன்னசென்ட் திவ்யா, விண்வெளி வீரர் ராகேஷ் சர்மா மற்றும் மெட்ராஸ் ரெஜிமெண்டல் சென்டரைச் சேர்ந்த பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட உயர் அலுவலர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.■

# மபூஸா ரோட்டரியின் செயற்கை கை பொருத்தும் முகாம்

V முத்துக்குமரன்

ரோபோடிக் செயற்கை கை பொருத்தும் முகாம் மூலமாக எட்டு பயனாளிகளுக்கு பயானிக் கைகளை வழங்கியது, சங்கத்தின் இந்த முதல் முயற்சியே வெற்றிகரமாக அமைந்ததால் RC மபூஸா, RID 3170, சங்கத்தைச் சேர்ந்த ரொட்டேரியன்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் உள்ளனர்.

மே 8 ஆம் தேதி சங்கத்தின் 54வது சார்ட்டர் தினத்தை நினைவு கூறும்விதமாக இந்த ரோபோடிக் செயற்கை கை பொருத்தும் முகாமை DG ரவிக்கிரண் குல்கர்னி, AG பிரகாஷ் பிலன்கர் ஆகியோர் தொடங்கி வைத்தனர், இச்சங்கம் கோவாவில் RC பஞ்ஜிம் சங்கத்திற்கு அடுத்த படியான இரண்டாவது பழைமையான சங்கம் ஆகும். இந்த உலகளாவிய மானியத் திட்டப்பணிக்காக அரசு மருத்துவக் கல்லூரியின் எலும்பு மற்றும் பிளாஸ்டிக் சர்ஜரி துறைகளை ஒன்றாக இணைத்தோம். உறுப்பு மாற்றம் அவசியமாக இருக்கும் 28 பயனாளிகளை அவர்கள் அடையாளம் கண்டனர், என்று கூறினார் சங்கத்தலைவர் அஜய் மேனன்.

ஒரு அடிப்படை கிளா-டைப் (claw-type) இயந்திர சாதனமான LN-4 செயற்கை கை பொருத்துதல் போல் அல்லாமல், ஓட்டோபாக் (Ottobock) என்ற ஒரு ஜெர்மனி நிறுவனம் வழங்கிய இந்த ரோபோடிக் செயற்கை கைகளில் கம்யூட்டர் சென்சார்கள் உள்ளது, மைய நரம்பு மண்டலத்தால் தூண்டப்பட்டது போல செயல்பட மூளையுடன் இணைந்து செயல்படும் தசை மண்டலத்தால் தூண்டும் செயலை கைகளுக்கு கடத்த முடியும். அனைத்து வகையான கை அசைவுகளையும் ரோபோடிக் செயற்கை கைகளைக் கொண்டு செய்யலாம். பயனாளிகள் கைகளின் விஷேசத் தேவைகளைப் பொறுத்து ஒவ்வொரு அமைப்பும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மும்பையில் உள்ள இந்த ஜெர்மன் நிறுவனத்தைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகள், முகாமிற்கு வந்து பயனாளிகளுக்கான கை அளவுகளை எடுத்தனர், தயாரிக்கும் நிறுவனத்திலிருந்து செயற்கை கை வந்தவுடனே, இதைப் பயன்படுத்து வதற்கு இருவார பயிற்சி அவர் களுக்குக் கொடுக்கப்படும். ஒவ்வொரு செயற்கை கையும் ரூ.3.25 இலட்சம் மதிப்புடையது, அதன் சர்வதேச கூட்டாளியான பிரேசில் RC ஃபிரான்சிஸ்கோ பெல்ட்ரோ, RID 4640 உதவியுடன் ஒரு உலகளாவிய மானியத்தின் மூலம் இந்த சங்கம் ரூ.26 இலட்சத்தை ($37,500) திரட்டியது. எங்கள் பங்களிப்பாக, உறுப்பினர்கள் மூலமாக இந்த சங்கம் $14,750 நிதியைத் திரட்டியது.


பாம்போலிமில் உள்ள ரக்னாஷ்ரே மையத்தில் கடந்த 22 வருடமாக இச்சங்கம் ஜெய்பூர் செயற்கை, கால் பொருத்தும் திட்டத்தை நடத்தப்பட்டு வருகிறது, இதுவரை 1,600 கால்களை இழந்தோர் பயனடைந்துள்ளனர்.

ஒவ்வொரு வருடமும் குறைந்த பட்சம் 30 முதல் 40 பொருளாதாரத் தில் பின் தங்கியவர்களுக்கு இலவச கண்புரை அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டு வருகிறது.■




DG *ரவிகிரண் குல்கர்ணி மற்றும் சங்கத்தலைவர் அஜய் மேனன் பயனாளிகளுடன்.*

# Apply yourself



The following committees are searching for qualified candidates for openings in 2020–21. All committees correspond via email, teleconference, or webinars as needed, and some also involve at least one mandatory in-person meeting per year. To be considered for committee membership or to recommend someone for an appointment, visit *on.rotary.org/application 2019*.

Applicants must be registered on My Rotary at *rotary.org/myrotary* and their My Rotary profile should include current contact details. Candidates may apply for only one committee. The application deadline is **August 12**.

| Committee | Function | Prerequisites | Commitment |
|---|---|---|---|
| **Communications** | Advises the Rotary International Board on communication with key audiences | Professional background and experience in a communications-related field | One three-year term; multiple conference calls; annual meeting in Evanston |
| **Finance** | Advises the Board on Rotary's finances, including budgets, investment policy and sustainability measures | Professionals in finance; nonprofit experience preferred. Candidates must have experience in matters at the club and district levels | One three-year term; two meetings per year in Evanston |
| **Leadership Development and Training** | Advises the Board on Rotary's leadership training programme for Rotarians, clubs and districts with special emphasis on training for DGs. | Must have significant training or education experience with a preference for leadership development | One three-year term; annual meeting in Evanston |
| **Operations Review** | Monitors the effectiveness, efficiency and implementation of operations and all internal systems; advises the Executive Committee on compensation matters; and performs other oversight functions as requested by the Board | Experience in management, leadership development, or finance and good knowledge of Rotary's operations. Appointments will be limited to PRIDs. | One six-year term; typically meets in Evanston twice a year |
| **Rotaract** | Advises the Board on Rotaract; develops the Rotaract Pre-convention programme | Rotarians with experience as Rotaract/Interact mentor, adviser or district chair. Rotaract alumni are strong candidates.<br><br>**Rotaractors:** Leadership at the club, district or international level. Candidates must have served as DRR, organised projects or attended a Rotaract Preconvention. Age restrictions may apply. | **Rotarians:** One three-year term; annual meeting in Evanston<br><br>**Rotaractors:** One one-year term; one meeting in Evanston |
| **Strategic Planning** | Reviews Rotary's strategic plan and associated measures; advises leadership on other matters of long-term significance | 10+ years of experience in strategy development, monitoring and implementation, and strong understanding of RI and Foundation programmes. | One four-year term; up to four meetings in Evanston. |



@The Rotarian

# இதயத்துடிப்பை சீரமைக்க உதவும் ரோட்டரி

ஜெய்ஸ்ரீ




*இரண்டு குழந்தை பயணாளிகள் மற்றும் அவர்களின் பெற்றோருடன் Rtn. நரேந்திர மால் மாத்தூர் மற்றும் இதர ரோட்டரியினர்.*

ஜெய்பூரில் உள்ள C K பிர்லா மருத்துவமனையில் பிறவி இதய கோளாறால் பாதிக்கப்பட்ட மூன்று குழந்தைகள் வெற்றிகரமான சிகிச்சைக்குப் பிறகு புதிய வாழ்வைப் பெற்றுள்ளார்கள். RC ஜெய்பூர் பாபுநகர், RID 3054, சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர் நரேந்திர மால் மாத்தூர் மூலமாக அவர்களைக் காக்க ரோட்டரி வந்தது.

ஒவ்வொரு ஆண்டும் 4 முதல் 5 ஏழை குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சைகளுக்கு நிதி வழங்க ஜனவரியில் இந்த மாவட்டம் ஏற்பாடு செய்த ஒரு CSR கருத்தரங்கில் DG நீரஜ் சோகனி உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் மாத்தூர் கையெழுத்திட்டார்.

ஒவ்வொரு குழந்தைக்கான சிகிச்சை செலவு ரூ.4 இலட்சத்தையும் மாத்தூர் கவனித்துக் கொண்டார், இவருக்கு ஏற்கனவே இரண்டு முறை இதய அறுவை சிகிச்சை நடந்திருக்கிறது. “உண்மையில், குட்டிக் குழந்தைகளின் உயிர்களை நான் காக்க வேண்டும் என்ற ஒரு நோக்கத்தை நிறைவேற்ற கடவுள் விரும்பினார், அதனால் இந்த அறுவை சிகிச்சைகளுக்குப் பிறகு நான் உயிருடன் திரும்பி வந்துள்ளேன். இதை நிறைவேற்ற ரோட்டரி எனக்கு இந்த தளத்தினை வழங்கியுள்ளது,'' என்று கூறுகிறார்.

மாத்தூர் ராஜஸ்தான் அரசின் எரிசக்தித் துறையின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனராக ஓய்வு பெற்றவர்.

இந்த மருத்துவ மனையில் CHD நோய் கொண்ட குழந்தைகளுக்கு சிகிச்சையளிக்கும் இதய அறுவைசிகிச்சை நிபுணர் டாக்டர் அலோக் மாத்தூர் அவர்களும் இலவசமாகவே சிகிச்சையளிக்கிறார். சிகிச்சை தேவைப்படுகிற ஒரு குழந்தையை கண்டறிந்த உடனே அவர் மாத்தூரை உதவிக்காகத் தொடர்புகொள்கிறார்.

“பள்ளிபைகள் மற்றும் எழுதுபொருட்கள் அல்லது இரத்த தான முகாம்களை நடத்துவது போன்றவற்றை விட பெரிய திட்டப்பணிகளை நிறைவேற்ற ரோட்டரி தகுதிவாய்ந்தது. மிகப் பெரியத் திட்டப் பணிகளை செயல்படுத்த இதுதான் சரியான நேரம். மேலும் ஜெய்பூர் ரொட்டேரியன்களிடம் இதைச் செய்வதற்கான வசதி வாய்ப்புகள் இருக்கிறது'' என்றார் சங்கத்தின் துணைத் தலைவர் மாத்தூர்.■



Wordsworld

# சொல்விளையாட்டு மருந்து!

சந்தியா ராவ்

*குறுக்கெழுத்து போட்டியின் அதீத ஈடுபாடே என் அம்மாவுக்கு தகுந்த சிகிச்சையாக அமைந்தது...*

சில மாதங்களுக்கு முன் எனது அம்மாவிடம் கேட்டேன், எப்போது பார்த்தாலும் குறுக்கெழுத்துப் போட்டியில் (Crossword Puzzles) விளையாடிக் கொண்டிருக்கிறாயே என்று கேட்டேன். அதற்கு, அது என்னவோ தெரியவில்லை. இதில் எனக்கு ரொம்ப ஈடுபாடு வந்து விட்டது. நிறுத்தவே முடியாதோ என்னவோ என்றார். அத்துடன் நிற்கவில்லை, குறுக்கெழுத்துப் போட்டிகள் கொண்ட புத்தகங்களை வாங்கி தருமாறு வலியுறுத்தினார் அம்மா. கடந்த சில மாதங்களாக புத்தகக் கடைகளில் ஏறி இறங்கி, ஏராளமான புத்தகங்களை வாங்கிவந்தேன். அதையெல்லாம் பார்த்து விட்டு, வார்த்தைகளைத் தேடும் போட்டி இருக்கும் புத்தகங்களும், வார்த்தை விளையாட்டுகளும் எனக்குப் பிடிக்கும் என்றார் அம்மா. அவருக்கு 85 வயது நிரம்பி பிறந்த நாள் முடிந்து 3 வாரம் கழித்து இறந்துவிட்டார்.

அம்மா இருந்தபோது, அவர் விரும்புகிறார் என்பதற்காக கடை கடையாக ஏறி இறங்கி சொல் விளையாட்டுப் புத்தகங்களைத் தேடித் துழாவி வாங்கி அவரிடம் மே 1ம் தேதி பரிசாகக் கொடுத்த போது, அவருக்கு அளவில்லா மகிழ்ச்சி. அதை மறக்கவே முடியாது. புத்தகங்களை வாங்கிக் கொடுத்தவுடன், அள்ளிக் கொள்வார். தான் அமர்ந்திருக்கும் நாற்காலிக்குப் பின்னால் வைத்துக் கொள்வார். அவர் மறைந்த போது, அதையெல்லாம் பலரும் குறிப்பாக கடந்த சில ஆண்டுகளாக அறிமுகம் ஆனவர்கள் அசை போட்டனர்.




அம்மா சமையல் செய்யும் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு ஓய்வு நேரத்தில் சோஃபாவில் அமர்ந்து கொண்டு குறுக்கெழுத்துப் போட்டிகளில் தான் ஈடுபட ஆரம்பித்தார். அது தான் பலரது மனத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டது.

ஓராண்டுக்கு முன் ஒரு டாக்டர் நண்பரைச் சந்தித்தேன். அவரிடம் என் அம்மாவுக்கு ஏற்பட்ட பார்கின்ஸன் நோய் குறித்தும் புத்தகம் படிப்பது பற்றியும் சொன்னேன். அதற்கு டாக்டர், அது தான் நல்லது. அதுதான் சிறந்த மருந்து. அதைப் போல் அவரது உடல் நலிந்துபோன பிறகும் மூளை சுறுசுறுப்பாக இயங்கியது. குறுக்கெழுத்துப் போட்டி விளையாடும் போது, புத்தி தீட்டப்படுகிறது. வீட்டில் உள்ள எத்தனையோ புத்தகங்கள் இருந்தாலும் அவருக்குப் பிடித்த ஒரே பரிசு குறுக்கெழுத்துப் போட்டி புத்தகங்கள்தான். அதுதான் மூளைக் குச் சிறந்த பயிற்சி தருவது. நல்லது.

அண்மையில் ஒரு பத்திரிகையில், வாழ்க்கை ஊடுருவல் (Lifehack) என்ற கட்டுரையை படித்தேன். சுமையா கபீர் என்பவர் எழுதியிருந்தார். வயதானவர்கள் குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடையைத் தேடுவதால், நினைவாற்றல் அதிகரிக்கும்.

மூளையின் செயல்பாடு மேம்படும் என்று குறிப்பிட்டிருந்தார். அதற்குச் சரியான உதாரணம் என் அம்மாதான். இந்தப் பழக்கத்தினால் தான் நோயின் கடுமையைச் சமாளிக்க முடிந்தது.

குறுக்கெழுத்துப் போட்டி எப்படி உதவுகிறது? சுமையா கபீர் தனது கட்டுரையில் குறிப்பிட்ட ஆய்வு சில விளக்கங்களைத் தெரிவிக்கிறது. உதாரணத்திற்கு அல்ஸைமர் (Alzheimer) நோயை எடுத்துக் கொள்ளுங்கள். நாள்தோறும் ஒரு குறுக்கெழுத்துப் போட்டி மூளையை உற்சாகமாகவும் கூர்மையாகவும் செயல்பட வைத் திருக்கும் என்று அல்ஸைமர் சங்கம் (Alzheimer Association) கூறுவதாக கபீர் கூறுகிறார். முதியவர்கள் ஒரே மாதிரி மன நிலையில் உள்ளவர்களுடன் பழகினால், இன்னும் நல்லது. குழுவாகச் சேர்ந்து விளையாட்டுகளுக்கு விடை காண்பது நல்ல சிந்தனைகளை வளர்ப்பதுடன் அவர்களுக்குள் பிணைப்பையும் வலுப்படுத்தும்.

இளைஞர்கள் மட்டும் சொல் வளத்தைப் பெருக்கிக் கொள்வதில்லை. நாமும் தான் செய்கிறோம். இந்தப் பயிற்சி நமது கவனித்தலை அதிகரிக்க உதவும். நான் அம்மாவின் செயல்பாடுகளைக் கண்டுள்ளேன். அதனால் சொல்கிறேன். குறுக்கெழுத்துப் போட்டியில் விடை காணாமல் ஓயமாட்டார். சில சமயம்தான் என்னிடம் கேட்பார். பல சமயம் அவருக்குத் திடீரென்று மனத்தில் தோன்றும்.

புதிர்களைப் பற்றிப் பேசுவதும் குறுக்கெழுத்துப்போட்டிகளுக்கு விடை தேடுவதும் மனம் தெளிவாக இருக்க உதவுகின்றன. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அது தானே தேவை! சுமையா கபீர் சொல்வது போல், புதிரின் வகைமுறையை அறிந்து கொண்டால், வாழ்க்கையின் புதிர்களையும் புரிந்து கொள்ளலாம் என்பது சரிதான்.

எல்லாவற்றையும் விட முக்கியமானது வேலை செய்யாமல் வெட்டியாக இருக்கும்போது,




இது தான் எளிதான வழி. வயது ஆகிவிட்டால், நமக்கு ஏற்படும் மிகப் பெரிய சவால் நேரத்தை எப்படிக் கடத்துவது என்பதுதான்! என் அம்மா, தனது அம்மாவை, அதாவது பாட்டியைப் பார்த்துவிட்டு அடிக்கடி சொல்வார்: வயதான காலத்தில் பொழுதைப் போக்குவது ரொம்ப கஷ்டமானது. வாழ்க்கையில் எதையும் சமாளிக்கலாம். வயது முதிர்ச்சியை முடியாது. பாட்டியின் நிலையைப் பார்த்து என் தாய் மனத்தில் பதிய வைத்துக் கொண்டார். குறுக்கெழுத்துப் போட்டியைக் கையாண்டார். பலன் கிடைத்தது. இந்தப் புத்தகத்தைப் படித்து முடித்துவிட்டேன். அடுத்ததைக் கொண்டுவா என்பார் என் தாயார்.

சமீபத்தில் எனது தாயார் படித்த புத்தகங்கள் என்னென்ன? மிச்சேல் ஒபாமாவின் (Michelle Obama) பிகமிங் (Becoming) என்ற புத்தகம். பெண்ணியப் போராளியான சித்ரா பானர்ஜி எழுதிய தி ஃபாரஸ்ட் ஆஃப் என்சான்ட்மென்ட்ஸ் (The Forest of Enchantments) படித்தார். தடிமனான புத்தகத்தைப் படிக்கமாட்டார். சமூக பட்டாம்பூச்சியின் டயரி (The Diary of a Social Butterfly) போன்ற அரசியல் சார்ந்த புத்தகங்களையும் அவர் படித்தார்.

அம்மா புத்தகம் படிப்பது, குறுக்கெழுத்துப் போட்டிகளைச் செய்வது ஆகியவை காரணமாக வேறு பொழுதுபோக்கில் நாட்டமில்லை. அவருக்குப் பிடித்த மானவர்கள் வந்தால், அவர்களுடன் உரையாடுவது பிடிக்கும். காது கேட்காமல் போனதை அடுத்து தனிமைதான். சில சமயம் அவருக்கும் போர் அடிக்கும். புத்தகங்களும் குறுக்கெழுத்தும் அவரை எப்போதும் செயல்படவைத்தன.

அம்மாவிடம் நான் கற்றுக் கொண்டதை ரோட்டரி நியூஸ் (Rotary News) படிக்கும் வாச கர்களுக்குப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். காலதாமதம் ஆனாலும் பரவாயில்லை. அது நல்லது. ஏதாவது பொழுதுபோக்கில் ஈடுபடவேண்டும். சுடோகு, இசை, இப்படி எதுவாக இருந்தாலும் சரி. இது நமக்கும் நல்லது நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கும் நல்லது. மூளைக்கும் பயிற்சி தேவைப்படுகிறது.

எங்களுடன் அம்மா இருந்தபோது, அவர் கையாளும் வார்த்தைப் புதிரை நான் எடுத்துக் கொண்டதில்லை. அம்மா போன பிறகு சில புத்தகத்தைப்பார்த்தேன். அவற்றில் உள்ள புதிர்களை லேசில் போட முடியாது. ரொம்ப கஷ்டமானது. அவர் கையாண்ட புதிர்களை என்னால் இப்போதும் முடியவில்லை. அவர் பார்த்த பல புத்தகத்தில் தீர்வு காண இயலவில்லை.

நாளைக்குச் செய்தித்தாள்களில் குறுக்கெழுத்துப் போட்டி இருந்தால், அதைத் தீர்க்க முயற்சி செய்யுங்கள். அது உங்களது வாழ்க்கைக்கு நல்லது.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி



## RC சிதம்பரம் — RID 2981

ரூ.34,000 மதிப்புள்ள விவசாய உபகரணம், பள்ளி பைகள் மற்றும் நோட்டு புத்தகங்கள் போன்றவை சுமார் 100 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது, இதுதவிர அருகிலுள்ள பகுதிகளில் மரக்கன்று நடும்விழாவை ரொட்டேரியன்கள் ஏற்பாடு செய்தனர், இது ரோட்டரிக்கு நற்பெயர் பெற்றுத்தந்தது.

## RI District 3000

இந்த மாவட்டத்தில் உள்ள அனைத்து சங்கங்களுக்கும் சோலார் விளக்குகளை DG R V N கண்ணன் வழங்கினார், இவற்றை தாங்கள் தத்து எடுத்துள்ள ஹேப்பி வில்லேஜுகளில் பொருத்துவார்கள். சுமார் $1,46,000 மதிப்புள்ள இந்தத் திட்டப்பணியால் சுமார் 130 கிராமங்கள் பயன்பெறும், இது மாவட்ட மானியநிதியின் மூலம் திரட்டப்பட்டது. RID C பாஸ்கர் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.





## RC வல்சாத் — RID 3060

இரண்டு-நாள் இளைஞர் கூட்டத்தில் 400-க்கும் அதிகமான மாணவர்கள் கலந்து கொண்டனர். பல்வேறு துறைகளைச் சார்ந்த பேச்சாளர்கள் மற்றும் வழிகாட்டிகள் கலந்து கொண்டு மாணவர்களை ஊக்கப்படுத்தி சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

## RC கோட்டா ரவுண்ட் டவுண் — RID 3054

சங்கம் ஏற்பாடு செய்த ஒரு மருத்துவ முகாமில் முதியவர்களுக்கு பல்வேறு நோய்களுக்கான பரிசோதனை செய்யப்பட்டது. ஆலோசனைக்கு பிறகு இலவச மருந்துகள் வழங்கப்பட்டது.



# சங்க சேவைகள்

### RC பஞ்ச்குலா — RID 3080

பஞ்சாப் மாநிலம் ஆனந்த்பூர் சாஹிப், மோகா மற்றும் ஹிமாச்சல் பிரதேசம் காங்க்ரா பகுதிகளைச் சேர்ந்த புல்வாமா தியாகிகளின் குடும்பங்களுக்கு ரூ.1 இலட்சத்திற்கான காசோலை வழங்கப்பட்டது. தேசத் திற்காக மிகப்பெரிய தியாகத்தைச் செய்த வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக இது செய்யப்பட்டது.



### RC கல்யாண் டைகர்ஸ் — RID 3142

அருகாமையில் உள்ள காலனியில் பாலியல் தொழிலாளிகளின் குழந்தைகளுக்கு ஒரு மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. மருந்துகள், புரத உணவு, சோப்பு மற்றும் எண்ணெய் போன்றவற்றுடன் குழந்தைகளுக்குத் தின்பண்டங்களையும் ரொட்டேரியன்கள் வழங்கினர்.



### RC பரேலி மெட்ரோ — D 3110

முந்தியா அஹமது நகர் கிராமத்தில் இந்த ரோட்டரி வருடத்திற்காக அதன் ஏழாவது மருத்துவ முகாமை இந்த சங்கம் ஏற்பாடு செய்தது. கிராமவாசிகள் பயன்பெறும் வகையில் 2002 ஆம் ஆண்டிலிருந்து முகாம்கள் வழக்கமாக நடத்தப்பட்டு வருகிறது.




### RC பத்ராச்சலாம் — RID 3150

கோடை வெப்பத்தைச் சமாளிக்க 10,000 பார்வையாளர்கள் மற்றும் சுற்றுலா பயணிகளுக்கு மோர் பாக்கேட்டுகளை ரொட்டேரியன்கள் வழங்கினர். இச்செயல் உள்ளூர் மக்களிடையே ரோட்டரிக்கு நற்பெயரை பெற்றுத்தந்தது.



### RC லக்னோ காஸ் — RID 3120

கடந்த மூன்று வருடங்களாக அலிகன்ஜில் உள்ள சிவ மந்தீரில் நடத்தப்பட்டு வரும் பெரியவர் மற்றும் குழந்தைகள் கல்வித் திட்டப்பணியில் சுமார் 50 பெண்கள் எழுதப்படிக்கக் கற்றுக்கொண்டனர். ஒரு பிரத்யேகமான நிகழ்ச்சியில் அனைத்து பயனாளிகளும் கவுரவிக்கப்பட்டனர்.



**RC கர்வார் — RID 3170**

மக்களிடையே போலியோ சொட்டு மருந்து குறித்த விழிப்புணர்வை உருவாக்க 150 கிமீ பைக் பேரணியை RC கர்வார் சீசைடு, அன்கோலா, அன்கோலா ரூரல், கோகர்ணா, கும்தா, ஹொன்னவார் மற்றும் பாத்கல் போன்ற ரோட்டரி சங்க உறுப்பினர்கள் ரோட்டரியின் கருத்தை பரப்பை கர்வாரிலிருந்து கர்நாடகா கடற்கரை வழியாக முப்பது ரொட்டேரியன்கள் மற்றும் ஆன்ஸ் ஆகியோர் பயணம் செய்தனர்.



**RC அம்பல்படி — RID 3182**

உடுப்பி ரயில் நிலையத்தில் பயணியர் நிழற்குடை அமைக்கப்பட்டது. ரூ.1.3 இலட்சம் செலவில் கட்டப்பட்ட இந்த வசதியை ரயில்வே பிராந்திய மேலாளர் பாலசாகேப் ஆ நிகம் தொடங்கிவைத்தார். DGN ராஜாராமா பாட், AG சுப்பண்ணா பாய் மற்றும் மாவட்ட தலைவர் அல்லன் V லீவிஸ் ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.



**RC கோயம்புத்தூர் காஸ்மோபொலிடன் — RID 3201**

சரவணம்பட்டி கிராம ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியிலும் செல்லப்ப நாயக்கன் பாளையம் கிராம அரசு உயர்நிலைப்பள்ளியிலும் இரண்டு ஸ்மார்ட் வகுப்பறைகள் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த டிஜிட்டல் வகுப்பறை மூலம் இரண்டு பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 580-க்கும் அதிகமான மாணவர்கள் பயனடைவார்கள், இதனால் தங்களின் கற்றல் அனுபவத்தை மேம்படுத்த முடியும்.




**RC பேர்ல்சிட்டி தூத்துக்குடி — RID 3212**

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பட்டுக்கோட்டை பகுதிகளிலும் கஜா புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.8 இலட்சம் மதிப்புள்ள நிவாரணப் பொருட்களை கொண்டு செல்லும் வாகனத்தை PDG ஜோ வில்லாவராயர் இதர ரொட்டேரியன்களின் முன்னிலையில் DG K ராஜகோபாலன் கொடியசைத்து அனுப்பி வைத்தார். நன்கொடையை வியாபாரிகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டது.



**RC வேலூர் மிட்டவுன் — RID 3231**

இந்த சங்க உறுப்பினர்கள் ஆதரவற்றோர் இல்லத்திற்குச் சென்று அங்கிருப்பவர்களுக்கு பரிசுப்பொருட்களை வழங்கினர். விளையாட்டுகள் மற்றும் உணவு மூலம் அங்கிருக்கும் குழந்தைகளை இவர்கள் உற்சாகப்படுத்தினர்.



# சங்க சேவைகள்

## RC சென்னை பாரதி — RID 3232

WinS திட்டப்பணியின் கீழ் அண்ணாநகர் வெஸ்ட் பகுதியிலுள்ள மீனாட்சி பள்ளி மாணவிகளுக்கான கழிவறை வளாகத்தை DG பாபு பேரம் தொடங்கி வைத்தார். RC மெட்ராஸ் கோரமண்டல் சங்கத்தின் தலைமையில் உலகளாவிய மானிய திட்டப்பணியின் கீழ், இந்த வசதி செய்யப்பட்டது, இதனால் 400 மாணவிகள் பயனடைவார்கள்.



## RC சிலிகுரி சென்ட்ரல் — RID 3240

இந்நகர மையத்தில் உள்ள பூங்காவிற்கு அருகாமையில் கங்கா நகரியில் தண்ணீர் சுத்திகரிக்கும் அமைப்பு பொருத்தப்பட்டுள்ளது, இத்திட்டப்பணியின் மதிப்பு ரூ.3 லட்சம். இந்த வசதியினால் 1,500 மக்கள் பயனடைவார்கள்.







## RC பிஹார்ஷாரிப் — RID 3250

மிஷன் 1 லட்சம் திட்டப்பணியின் கீழ், ரொட்டேரியன்கள் மரக்கன்றுகளை நட்டனர். பல்வேறு கிராமங்களுக்கு மரக்கன்றுகளை வழங்கி, பருவகால மாறுபாடு மற்றும் வெப்பமயமாதல் போன்ற பிரச்சனைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர். இதுவரை சுமார் 90,000 மரக்கன்றுகள் நடப்பட்டிருக்கிறது.



## RC ஜபல்பூர் — RID 3261

தகவல் மற்றும் தொலைதொடர்பு அதிகாரிகளின் ஆதரவுடன் நாவர்கவான் என்ற ஒரு ஆதிவாசி கிராமத்தில் நலப்பணி மற்றும் வளர்ச்சி முகாமை ஏற்பாடு செய்தனர். இந்த முகாம் மூலம் சுமார் 800 கிராமவாசிகள் பயனடைந்தனர்.



## RC பேலூர் — D 3291

பள்ளி இறுதித் தேர்வுகளில் சிறந்த மதிப்பெண்களைப் பெற்றதற்காக ரொட்டேரியன் குடும்பங்களைச் சேர்ந்த ஆறு மாணவர்களை DG முகுல் சின்ஹா கவுரப்படுத்தினார். பாராட்டுபெற்றவர்களுக்கு நினைவு பரிசுகள் வழங்கப்பட்டது.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்
வடிவமைப்பு: L குணசேகரன்

# உடற்பயிற்சியில் மனம்-உடல் தொடர்பு

ஷீலா நம்பியார்

உடல் ஆரோக்கிய உலகத்தில் இப்போது ஒரு புதுவரவு சொல் "மனம்-உடல்" பயிற்சி. இவற்றில் முக்கியமாக யோகா, பிளேட்ஸ், தாய் சி, கியூ காங் போன்றவை அடங்கும், இவற்றில் மனம்-உடல் தொடர்பு என்பது தவிர்க்க முடியாதது. சுவாசத்திற்கான வழிகாட்டல்கள் கொடுக்கப்பட்டு, சுவாசத்திற்கும் அசைவிற்கும் இடையே ஆழ்ந்த ஒரு தொடர்பு உருவாக்கப்படுகிறது. கவனம் தான் இந்த செயலின் ஒருமுகத் தன்மை. உடல் ஆரோக்கியத்திற்கான இதர பயிற்சிகள், இந்த தொடர்பை சரியாக உருவாக்குவதாகத் தெரியவில்லை. இவ்வாறு குறுகிய நோக்கில் வகைப்படுத்துவது, இதர பயிற்சி களுக்கு (ஓடுவது, ஏரோபிக் நடனம், வலுவூட்டும் பயிற்சி போன்றவை) மனத்தின் ஈடுபாடு தேவையில்லையா என்ற கேள்வி எழுகிறது. இது முற்றிலும் தவறு. உடற்பயிற்சியின் ஒவ்வொரு வடிவமும் மனமும்-உடலும் சேர்ந்த ஒரு செயலாக இருக்க வேண்டும்.

உடல் ஆரோக்கியத்தில் பெரும் பங்கு வகிப்பது மனம் தான். தீர்மானம், அறிவாற்றல், உத்வேகம், விடாமுயற்சி மற்றும் அர்ப்பணிப்பு. இந்த தகுதிகள் இல்லாவிட்டால் ஒருவர் தினமும் இந்த உடல் ஆரோக்கியத்திற்கான பழக்கத்தைத் தொடர்ந்து கடைபிடிக்க முடியாது. உடல் ஆரோக்கியம் என்பது வெறும் "உடல்" கொண்டு செய்வது என்பது போலத் தோன்றலாம். ஆனால் இது உடலை மட்டும் சார்ந்து இல்லை தானே? சில சமயங்களில் கடைசியாக இருக்கும் ஒரு மைல் தூரத்தைக் கடப்பதற்கும், எடைகளைத் தூக்குவதற்தோ அல்லது யோகாவைத் தொடர்ந்து செய்வதற்கோ இவற்றின் போது உடல் விருப்பமில்லாமல் இருக்கும். இவற்றைத் தொடர்ந்து கடைபிடிக்க ஒருவரின் மனம் தான் பொறுப்பு. ஒரு நேர்மறையான வழியில் உடற்பயிற்சி செய்வதற்கும், மனநிலையை நன்றாக வைப்பதற்கும், சிந்தனையை தெளிவாகக் கொடுப்பதற்கும், மேலும் உங்கள் புலனுணர்வுகளைத் திறப்பதற்கும் மனம் தான் பதில்வினையாற்றுகிறது.

**எடை பயிற்சி**- உதாரணமாக வலுகூட்டும் பயிற்சி, இது ஜிம்மில் ஒருவர் தன் நண்பனுடன் கதையளந்து கொண்டு கவனமில்லாமல் செய்வது அல்ல. பயன்படுத்தும் எடையிலும், அசைவுகளுக்கு



(உதாரணமாக செயல்களில் மூச்சை வெளிவிடுவது) ஏற்றவாறு இருக்கும் மூச்சை விடுவது, பயிற்சியில் ஈடுபடும் தசைகள் மற்றும் உடற் பயிற்சியின் சரியான “வடிவம்” போன்றவற்றில் முழு கவனமும் இருக்க வேண்டும், பிறகு எப்படி இது மனம்-உடல் சார்ந்த பயிற்சியாக இருக்காது?



எடைகள் கொண்டு பயிற்சி செய்பவர் கவன மில்லாமல் இருந்தால், காயம் ஏற்படுவதற்கு அதிக வாய்ப்புள்ளது.

சிலர் தங்களின் மூச்சை அடக்கிக் கொண்டு எடையை அசைக்க முயற்சிக்கிறார்கள், ஆனால் தங்கள் உடல் என்ன சொல்கிறது என்பதைக் கவனிப்பதில்லை. பேரழிவு! அவ்வளவு ஏன், அனுபவமுள்ள உடற்பயிற்சி செய்பவர்களுக்கும் பயிற்சியாளர்களுக்கும் எடைகளை வைத்துப் பயிற்சி செய்யும் போது, தொடர்ந்து தங்களின் சுவாசத்தில் கவனம் செலுத்த வேண்டும் என அவர்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டியிருக்கிறது.

**கார்டியோ** - சிலர் கார்டியோ வாஸ்குலார் பயிற்சிகள் செய்தாலும் கூட மிகுந்த களைப்பு மற்றும்/அல்லது சிரமங்களைச் சந்திக்கிறார்கள். இந்த செயலில் சற்று வேடிக்கையைக் கலந்து, உங்கள் மனம் இதைக் கொண்டாட உங்கள் மனதைப் பழக்கப்படுத்த லாம். நீங்கள் ஓடவோ அல்லது கிராஸ் டிரைனரைப் பயன்படுத்த முடியாவிட்டால், நீங்கள் ஏன் முயற்சி செய்து பார்க்கக் கூடாது? அது இசையுடன் புதிய கார்டியோ பயிற்சிகளாகவும், ஆச்சர்யத்தை கொடுத்து நீங்கள் செய்யும் பயிற்சி யை மறக்கச் செய்யும் இதர உப கரணங்களாகவும் இருக்கலாம்.

இதோ வழக்கமான ஒரு கார்டியோ பயிற்சியின் போது உங்கள் மனம் முழுவதுமாக ஈடுபடுவதற்கான சில வழிமுறைகள் -

- ஒருமுகத்தன்மை தேவையாக இருக்கும் ஒரு வகுப்பில் நடனத்தை ஞாபகப்படுத்துவது
- கடினமான வகுப்புகளின் மூலம் விழிப்புணர்வுடனும் உணர்வுடனும் நீங்கள் இருக்க வேண்டும்
- கடைசி சில நிமிடங்களை வேகமாக முடிப்பதற்கோ அல்லது வழக்கமான ஒரு செயலின் சவாலான கட்டத்திற்கோ மூளையின் செயல்பாடான 'மன உறுதி' தேவைப்படும்.

நடனம் மற்றும் இசையுடன் கூடிய சிக்கலான ஏரோபிக்/நடன அசைவு/கிக்-பாக்ஸிங் வகுப்புகள் மூலமாக உங்களுக்கு சொல்லித் தரப்படும் போது, அதை ஞாபகத் தில் வைக்க, மனம் கவனித்து, கற்றுக்கொண்டு அதில் ஈடுபட வேண்டும். உண்மை தான், உங்கள் மனம் வேலை செய்து கொண்டிருக்கிறது. அதை பற்றிய கேள்வியே இல்லை. தங்களுக்கு ஆடத்தெரியாது என்று சத்தியம் செய்யும் சில பயிற்சி களைச் செய்பவர்கள் இருக்கிறார் கள், அவர்கள் செவிடர்களாக இருப் பவர்கள், இசையைப் பற்றி எதுவும் தெரியாது. எப்படியோ, பயிற்சி மூலம் ஒரு புதுவகையான அசை விற்கு ஒத்துப்போக அவர்களின் உடல் கற்றுக்கொள்ளும். தாளத்தை கவனிக்கவும் புரிந்துகொள்ளவும் இது கற்றுக்கொள்ளும். மனம் விழிப்புணர்வோடு இருந்தால் மட்டுமே இவையெல்லாம் சாத்தியம். புதிய தூண்டல் மூலம் புதிய பிணைப்புகளை மூளையால் உருவாக்கமுடியும் என்பதால் இவையெல்லாம் சாத்தியமே. உடற்பயிற்சியின் போது வெளியிடப்படும் பிரைன் டிரைவ்டு நியூரோட்ராபிக் ஃபேக்டர் (BDNF) நரம்பு வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் உதவுகிறது. உடற்பயிற்சியின் போது வெளி யிடப்படும் என்டோர்ஃபின்கள், மூளையின் உளவியலை மாற்றுகிறது, இதனால் ஒருவர் “திறந்த”, நேர் மறையான மற்றும் மனதின் சிறந்த அமைப்பை உருவாக்க முடியும்.

தினமும் உடற்பயிற்சி செய்வதால் மூளையில் புதிய செல்கள் (நியூரோஜெனிசிஸ்) உரு வாவதாகவும் இரத்த ஓட்டத்தை (நரம்புகள் தெரிவது) அதிகரிப் பதாகவும், இதனால் கற்றல் திறன் அதிகரிப்பு, சிக்கலான விஷயங்களைக் கூட கையாளுவது போன்ற பலத் திறன்கள் மேம்படும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். தினசரி உடற்பயிற்சி செய்வதால் முடிவெடுக்கும் திறன், பிரச் சனைகளுக்குத் தீர்வு கண்டறியும் ஆற்றல், கற்பனை மற்றும் பணி ஞாபகத்திறன் போன்றவற்றையும் அதிகரிக்கிறது. வயதாவதால் இந்த செயல்கள் தடுக்கப்படுகிறது. எனவே தினசரி உடற்பயிற்சி செய்வதால் ஒரு தலைசிறந்த வாழ்க்கை அமைப்பதில் ஏற்படும் இந்த தடையை உடைக்கிறது.

நன்றாக உடற்பயிற்சி செய்ய மனம் பயன்படுத்தப்படுகிறது, அதேவேளையில் உடற்பயிற்சி மூளையின் செயல்பாட்டை அதிகரிக்கிறது. உடற்பயிற்சி செயல்பாடுகள் அனைத்திலும் மனம்-உடல் தொடர்பு உள்ளது. கைகளால் செய்யப்படும் வேலையில் ஒருவர் கவனம் செலுத்தும் போது, இதை அதிகமாக உணர்ந்துகொள்ள முடியும். கற்பதிலும் புரிந்து கொள் வதிலும் ஒருவர் திறந்தமனதுடன் இருக்கும்போது ஒரு முகத்துடனும் ஆழ்ந்த எண்ணத்துடனும் இருக்கிறார்.



இதன் ஆசிரியரை *sheelanambiar@gmail.com* என்ற இணையதளத்தில் தொடர்பு கொள்ளலாம்.
*Website:www.drsheelanambiar.com*

**ரோட்டரி நியூஸ் ஆண்டு சந்தா செலுத்தும் வழிகள்:**

*இப்போது நீங்கள்*
**ரோட்டரி நியூஸ் ஆண்டு சந்தாவை**
*ஆன்லைன் மூலமும் செலுத்தலாம். எங்கள் வங்கி விவரம்:*

| | | |
|---|---|---|
| Bank | : | HDFC Bank<br>SB Account |
| Branch | : | Egmore, Chennai |
| A/c Name | : | Rotary News Trust |
| A/c No. | : | 50100213133460 |
| IFSC Code | : | HDFC0003820 |

*ஆன்லைனில் பணம் செலுத்தியப் பின், உங்கள் சங்கப்பெயர், சங்கத் தலைவர்/செயலாளர் பெயர், பணம் செலுத்திய தேதி, எவ்வளவு செலுத்தினீர்கள் மற்றும்* UTR *எண் இவற்றை மறக்காமல் எங்களுக்கு இமெயில் செய்து விடுங்கள்.*

*சந்தாவை உங்கள் வங்கியில் காசோலை அல்லது ரொக்கமாக கட்டினால் உங்கள் சங்கப் பெயரை மட்டும் அங்கு குறிப்பிடுங்கள்.* “Rotary club of” *என்பதை தவிர்க்கவும்.*

## Rotary at a glance

| | | |
|---|---|---|
| Rotarians | : | 1,222,446 |
| Clubs | : | 35,776 |
| Districts | : | 538 |
| *Rotaractors | : | 168,300 |
| Clubs | : | 10,150 |
| *Interactors | : | 558,578 |
| Clubs | : | 24,286 |
| RCC | : | 10,521 |

**Estimated*

As on June 14, 2019


## Membership Summary

As on June 1, 2019

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians | Rotaract Clubs | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|
| 2981 | 113 | 4,545 | 224 | 42 | 233 | 210 |
| 2982 | 68 | 2,878 | 171 | 69 | 117 | 54 |
| 3000 | 127 | 4,947 | 552 | 233 | 690 | 203 |
| 3011 | 79 | 3,323 | 749 | 47 | 118 | 25 |
| 3012 | 85 | 3,376 | 919 | 58 | 133 | 56 |
| 3020 | 78 | 3,799 | 225 | 57 | 467 | 349 |
| 3030 | 88 | 4,622 | 627 | 85 | 327 | 209 |
| 3040 | 96 | 2,094 | 240 | 33 | 138 | 143 |
| 3053 | 69 | 2,754 | 547 | 11 | 59 | 96 |
| 3054 | 127 | 5,789 | 1,119 | 81 | 327 | 475 |
| 3060 | 100 | 4,115 | 584 | 59 | 128 | 139 |
| 3070 | 103 | 2,882 | 345 | 49 | 164 | 58 |
| 3080 | 77 | 3,136 | 318 | 86 | 227 | 110 |
| 3090 | 76 | 2,016 | 65 | 36 | 39 | 122 |
| 3100 | 70 | 1,662 | 120 | 12 | 80 | 146 |
| 3110 | 113 | 3,824 | 339 | 30 | 53 | 104 |
| 3120 | 74 | 3,163 | 427 | 32 | 63 | 52 |
| 3131 | 129 | 5,114 | 1,272 | 98 | 317 | 90 |
| 3132 | 97 | 3,623 | 448 | 40 | 219 | 155 |
| 3141 | 90 | 5,023 | 1,407 | 113 | 274 | 86 |
| 3142 | 93 | 3,159 | 697 | 79 | 205 | 64 |
| 3150 | 98 | 3,471 | 380 | 63 | 252 | 110 |
| 3160 | 71 | 2,402 | 164 | 28 | 48 | 82 |
| 3170 | 124 | 5,291 | 669 | 61 | 354 | 165 |
| 3181 | 73 | 3,009 | 365 | 57 | 276 | 115 |
| 3182 | 83 | 3,141 | 256 | 32 | 283 | 97 |
| 3190 | 131 | 4,780 | 687 | 127 | 372 | 53 |
| 3201 | 141 | 5,216 | 371 | 98 | 141 | 49 |
| 3202 | 129 | 4,779 | 281 | 79 | 450 | 47 |
| 3211 | 139 | 4,411 | 302 | 8 | 98 | 129 |
| 3212 | 98 | 3,950 | 337 | 97 | 300 | 142 |
| 3231 | 76 | 2,987 | 345 | 53 | 220 | 354 |
| 3232 | 107 | 4,282 | 859 | 118 | 353 | 83 |
| 3240 | 87 | 2,909 | 411 | 51 | 190 | 179 |
| 3250 | 97 | 3,695 | 690 | 65 | 221 | 179 |
| 3261 | 70 | 2,562 | 353 | 11 | 113 | 43 |
| 3262 | 90 | 3,276 | 432 | 39 | 79 | 77 |
| 3291 | 145 | 3,636 | 740 | 85 | 141 | 607 |
| **India Total** | **3,711** | **139,641** | **19,037** | **2,422** | **8,269** | **5,457** |
| 3220 | 66 | 1,799 | 300 | 78 | 212 | 73 |
| 3271 | 80 | 1,404 | 278 | 56 | 19 | 18 |
| 3272 | 161 | 2,843 | 366 | 51 | 40 | 40 |
| 3281 | 204 | 5,457 | 891 | 224 | 95 | 192 |
| 3282 | 143 | 4,003 | 430 | 130 | 50 | 44 |
| 3292 | 117 | 4,360 | 721 | 123 | 134 | 113 |
| **S Asia Total** | **4,482** | **159,507** | **22,023** | **3,084** | **8,819** | **5,937** |

*Source: RI South Asia Office*

# On the racks




## 100 Days to a Younger Brain

Author : **Sabina Brennan**
Publisher : **Hachette India**
Pages : **298; ₹499**

The aim of living a brain-healthy life is not just to reduce the risk of dementia and other serious health issues but also to improve the quality of your life and brain performance NOW. The author, Sabina Brennan, provides all the essential information you need to make informed choices everyday about your sleeping, eating and lifestyle habits that will benefit all aspects of your life from work to relationships and help you achieve your personal goals.

This motivating book proves you don't need to understand complicated neuroscience in order to look after your brain. Do at least one small thing every day to radically improve your brain health.





## Summoner – The outcast

Author : **Taran Matharu**
Publisher : **Hachette India**
Pages : **408; ₹399**

Enter an immersive world where the chosen few have the ability to summon demons...

In this thriller written by Taran Matharu, Arcturus is an ordinary orphaned stable boy when he discovers that he has the ability to summon demons from another world.

He is sent to *Vocans* Academy where the lost arts of summoning, spell craft and demonology are taught to the noble children of the Empire. As the first commoner gifted with this ability, his discovery challenges the nobility and the powers that be and Arcturus soon makes enemies. With no one but his demon Sacharissa by his side, Arcturus must prove himself as a worthy Summoner...




## Empire of Sand

Author : **Tasha Suri**
Publisher : **Hachette India**
Pages : **432; ₹399**

*Empire of Sand* is Tasha Suri's captivating, Mughal India-inspired debut fantasy. This novel revolves around Mehr, who lives in a world where she is only half accepted.

It is the tale of the *Amrithi* who are outcasts. Nomads who worship desert spirits, they are coveted and persecuted throughout the Empire for the power in their blood. Mehr is the illegitimate daughter of an imperial *Ambhan* governor and an exiled *Amrithi* mother she can barely remember, but whose face and magic she has inherited. The *Ambhans* conquer and destroy the *Amrithi* nomads, and as a woman with parents from both the worlds, she struggles to find her place as a worshipper of the old *Amrithi* gods and traditions. When the Emperor's mystics take note of her *Amrithi* powers, they force her into a marriage with one of their own, and Mehr becomes a very important pawn in a deadly game of men, gods, and demons.

Compiled by Kiran Zehra
Designed by Krishnapratheesh S

# உப்பு பெறாத சமாச்சாரமா?

TCA ஸ்ரீநிவாசராகவன்

புத்தகப் புழுவாக இருந்தாலும் எனக்கு புதிது புதிதான எழுத்தாளர்களை வாசிப்பதே அதிக நாட்டம். அண்மையில் ராய் மோக்ஸ்ஹாம் (Roy Moxham) என்பவரது நூல் தட்டுப்பட்டது. 2002ம் ஆண்டு அவர் புதர் வேலியைப் பற்றி ஒரு நூலை எழுதியிருந்தார். தலைப்பு என்ன தெரியுமா? இந்தியாவின் பெரிய புதர்வேலி (The Great Hedge of India). ஏன் இதையெல்லாம் புத்தகமாக ஒருவர் எழுத வேண்டும்? 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவை ஆண்டு கொண்டிருந்த பிரிட்டிஷார் உப்பை யாரும் கடத்திவரக் கூடாது என்பதற்காக 2,300 மைல் நீளத்துக்கு முள் வேலி அமைத்திருந்தனர். பிரிட்டிஷ் கட்டுப்பாட்டில் இருந்த இந்தியாவில் உப்பு விலை ஐந்து மடங்கு. காரணம், அவர்கள் உப்புக்குப் போட்டிருந்த வரிதான். அவர்கள் போட்டிருந்த புதர் வேலி 20 அடி உயரம். இதையெல்லாம் குறிப்பிடும் அந்தப் புத்தகத்தில் இந்தியாவில் சந்திரகுப்த மவுரியர் காலத்திலிருந்தே உப்புக்கு வரி போடப்பட்டிருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நூலாசிரியர் மோக்ஸ்ஹாம் 1994ம் ஆண்டு தங்கக் கட்டிகள் இருந்த புதையலைப் பார்த்தாராம். அதை அப்படியே மறைவாக வைத்துவிட்டு பிறகு யாராவது எடுத்திருக்கிறார்களா என்று சில காலம் கழித்து வந்து பார்க்கலாம் என்று விட்டுச் சென்றிருக்கிறார். மீண்டும் 1996ம் ஆண்டு வந்தார். அடுத்தடுத்து வந்து பார்க்க முயன்றிருக்கிறார். ஐந்து ஆண்டுகள் கழித்து அதைக் கண்டெடுத்தார். இதையெல்லாம் வருணித்திருக்கும் நூலாசிரியர் ஒரு முறை நதியில் குளிக்கச் சென்றபோது, முதலை துரத்தியதையும் தப்பினோம் பிழைத்தோம் என்று மீண்டதையும் சுவையாகக் குறிப்பிட்டுள்ளார்.

உப்பு வரி நூறு மடங்காக உயர்த்தப்பட்ட போதும் யாருமே பேராசை பிடித்த கிழக்கிந்திய கம்பெனியை எதிர்த்து குரலே எழுப்பவில்லையாம். அதே சமயம் 1760ம் ஆண்டு முதல் 1860ம் ஆண்டு வரையில் பலகோடி பவுண்டுகளை அள்ளிக் கொண்டனர் பரங்கியர். சுவர் எழுப்பப் பணம் இல்லாததால்தான் இப்படி புதர்களால் வேலி அமைத்தனர். எல்லாம் ஊழல் மலிந்த சுங்கத் துறைதான். பாதுகாவலுக்கு கண்காணிப்பு கோபுரம், சின்னச் சின்ன கோட்டைகள் கட்டப்பட்டிருந்தன. இதையெல்லாம் மேக்ஸ்ஹாம் தன் நூலில் பதிவு செய்துள்ளார்.

பிரிட்டிஷாரின் முட்டாள்தனமெல்லாம் பத்தாண்டுகள் நீடித்தன. காங்கிரஸ் கட்சியை நிறுவினாரே ஆலன் ஒக்டோவியன் ஹ்யூம் அவர்தான் இதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்தார்.

இந்தச் சம்பவங்கள் எல்லாம் நடந்தது 120 ஆண்டுகளுக்கு முன்னால். இருந்தாலும் உத்தரப் பிரதேசத்தில் உள்ள சில கிராமங்களில் வசிப்போரை மோக்ஸ்ஹாம் சந்தித்தபோது, இதையெல்லாம் பசுமையாக நினைவில் வைத்திருந்தனர் என்கிறார். பிரிட்டிஷார் அமைத்த பர்மிட் லைன் (Parmat Lane) ஆகியவற்றையெல்லாம் மக்கள் மோக்ஸ்ஹாமுக்குக் காட்டினர்.

பிரிட்டிஷ் காலத்தில் ஆட்சியாளர்கள் சில கிறுக்குத்தனமான காரியங்களும் சில திருட்டுத் தனமான காரியங்களையும் செய்திருக்கிறார்கள். உதாரணத்திற்கு, ஊருக்கு ஒதுக்குப்புறமான அடர்ந்த காட்டுப் பகுதிகளில் சுற்றுலா வீடுகள், விடுதிகள், பங்களாக்களைக் கட்டியிருக்கிறார்கள். அவர்களது மனைவிமார் இங்கிலாந்து சென்ற போது, கள்ளத் தொடர்புகளாக்காக அந்தக் கட்டடங்களைப் பயன்படுத்தி வந்தார்களாம். இப்போதும் அந்தக் கட்டடங்கள் அப்படித்தான் பயன்படுத்துவதாக ஊர் மக்கள் கூறினார்கள்.

*பிரிட்டிஷ் கட்டுப்பாட்டில் இருந்த இந்தியாவில் உப்பு விலை ஐந்து மடங்கு. காரணம், அவர்கள் உப்புக்குப் போட்டிருந்த வரிதான்.*

இந்த காட்டுப் பங்களாக்களின் பின்னால் சில சுவையான கதைகளும் உண்டு. போபால் அருகே உள்ள மிஸ்ரோடு என்ற இடத்தில் ஒரு சுற்றுலா பங்களாவில் ஆங்கிலேயக் காதலன் தன்னைக் கைவிட்டுவிட்டான் என்று மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டாளாம். ஜபல்பூர் அருகே உள்ள ஒரு சுற்றுலா பங்களாவிற்கு வெள்ளைக்காரர் ஒருவர் கிறிஸ்துமஸ் அன்று பேயாக வந்தாராம். தனிமையில் வாடிய அவர் தற்கொலை செய்துகொண்டு ஆவியாகத் திரிகிறாராம்.

இதைப் போல் ராஜிதா பார்கவா எழுதிய ஒரு புத்தகத்தில் மகாராஜாவின் ஓய்வில்லம் பற்றிய கதை உள்ளது. மோக்ஸ்ஹாம் போல இவரும் பல விஷயங்களைத் தேடியிருக்கிறார். இப்போது அச்சில் இல்லாத அந்தப் புத்தகத்தின் தலைப்பு நினைவில் இல்லை.

பிரிட்டிஷாரின் கிறுக்குத்தனமான செயல்கள் குறித்து இன்னொரு புத்தகமும் உண்டு. சில ஆண்டுக்கு முன் படித்தேன். 'மீன்பிடி கடற்படை' (The Fishing Fleet) எனக் குறிப்பிடப்படும் அந்தப் புத்தகத்தை ஆனி டி க்ரூஸி எழுதியுள்ளார். ஆங்கிலேய முதிர்கன்னிகள் இந்தியாவுக்கு வந்து கணவர்களைத் தேடுவதைப் பற்றிய அமர்க்களமான புத்தகம் அது.■

# முக்கிய செய்திகள்




## தற்கொலைக்கு வித்திட்ட இன்ஸ்டாகிராம் வாக்கெடுப்பு

மலேசியாவில் ஒரு 16 வயது யுவதி தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், "இது முக்கியமான ஒன்று, நான் வாழ்வதா இல்லை சாவதா என்பதை தேர்ந்தெடுக்க உதவுங்கள்" என்று பதிவிட்டு தன்னைப் பின்தொடர்பவர்களைக் கேட்டாள். அவளைப் பின்தொடர்பவர்களில் 69 சதவீதம் பேர் "இறந்துவிடு" என்று வாக்களித்தனர், அவள் தற்கொலை செய்துகொண்டாள். அவள் இறக்கவேண்டும் என்று வாக்களித்த அனைவரும் தற்கொலைக்கு காரணமானவர்களே என்று சொல்கிறார் ஒரு வழக்குரைஞர்.■



## பசங்களுக்கு 'வீட்டு' பாடங்கள்

கோல்ஜியா மோன்டேகேஸ்டெலோ (Colegia Montecastelo) என்ற ஒரு ஸ்பெயின் கல்லூரி வீட்டுப் பொருளாதாரம் என்ற ஒரு அவசியமான பாடத்தை அறிமுகப்படுத்தியுள்ளது, இதன் மூலம் பையன்கள் சமைக்கவும் துவைக்கவும் இஸ்திரி போடுவது மற்றும் தங்கள் படுக்கைகளை தாங்களே தயார்செய்வது போன்றவற்றை கற்றுக்கொள்கிறார்கள். பாலின சமத்துவத்தை முன்னிறுத்துவதும் வீட்டு வேலைகள் 'பெண்களுக்கான வேலை' இல்லை என்பதை பையன்கள் உணரவும் இந்த முயற்சியின் நோக்கமாகும். மாணவர்கள் சுயமாக செயல்படுவதற்கும் தங்களையும் தங்கள் இருப்பிடங்களையும் மற்றவர்களின் உதவியின்றி பார்த்துக்கொள்ள முடியும் என்று கல்லூரி எதிர்பார்க்கிறது. ■



## வீடியோகேம் பித்து ஒரு 'நோய்'

உலக சுகாதார கூட்டத்தில் WHO 'வீடியோகேம் பித்து' ஒரு நோய் என்று அங்கீகரித்துள்ளது, மேலும் இதை 'வீடியோகேம் பாதிப்பால் ஏற்படும் பழக்கம், இதர செயல்பாடுகளை விட விளையாட்டுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, இதர விருப்பங்கள் மற்றும் தினசரி செயல்பாடுகளுக்கான முக்கியத்துவத்தைக் குறைக்கிறது' என்று விவரிக்கிறது. இது 2022 ஆம் ஆண்டு ஜனவரி 1 முதல் அமலுக்கு வரும்.■



## மிக நீளமான திருமண முகத்திரை

சைப்ரஸ் நாட்டைச் சேர்ந்த மரியா பரஸ்கேவா என்ற பெண்மணி தன் திருமணத்தில் ஒரு வித்தியாசமான சாதனையைச் செய்துள்ளார், அதாவது திருமணத்தில் மிக நீ..........ளமான முகத்திரையை அணித்தார், இது அவரது சிறுவயது முதலே கொண்டிருந்த ஆசையாம். 6,962.6 மீட்டர் (சுமார் 22,843 அடி) நீளம் அல்லது 63.5 கால்பந்து மைதான நீளம் கொண்ட முடிவே இல்லாத இந்த முகத்திரை கின்னஸ் உலக சாதனை பட்டியலில் இடம் பெற்றது.■



## ஃபிலிப்பைன்ஸில் பசுமைப் பட்டம்

பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு பட்டம் கிடைக்க வேண்டும் என்றால், அவர்கள் குறைந்தபட்சம் 10 மரங்களை வளர்க்க வேண்டும் என்ற புதிய சட்டம் ஃபிலிப்பைன்ஸ் நாட்டில் வந்துள்ளது. இந்த சட்டத்தை அமல்படுத்த உயர்கல்வித் துறை அமைச்சகம் பொறுப்பேற்கும். மரவகைகள் பகுதியின் இயற்கை நிலவமைப்பு மற்றும் பருவநிலைக்கு பொருத்தமாகவும் பாதுகாப்பான பகுதிகள், கைவிடப்பட்ட சுரங்க பகுதிகள், சதுப்பு நிலம் மற்றும் இராணுவ எல்லைகள் போன்றவற்றிலும் நடவேண்டும். கடந்த நூற்றாண்டில் இந்த நாட்டின் வனப்பகுதி 20 சதவீதம் என்ற அபாயகரத்தையும் தாண்டி குறைந்துள்ளது, இதை சரியாக செயல்படுத்தினால், இந்த முயற்சி மூலம் குறைந்தபட்சம் 175 மில்லியன் மரங்கள் ஒவ்வொரு வருடமும் வளர்க்க முடியும்.■

புகைப்படங்கள்: ஜெய்ஸ்ரீ மற்றும் கிரண் ஜெஹரா; வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்

Regn. No. – TN/CCN/677/2019–2021
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2019–2021
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372

Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹35
Rotary News Tamil published on 1st of every month

ADVT

Rotary District 3012 | BE THE INSPIRATION R.I. THEME 2018-19

## ROTARY DISTRICT 3012 GLOBAL GRANT PROJECT

आरोग्य



**MOBILE MAMMOGRAPHY VAN**

**Inauguration & Flag-Off by Dr. SUBHASH JAIN AKS**

**DISTRICT GOVERNOR 2018-19, R.I. DISTRICT 3012,** in the Presence of **Dignitaries & District Team Members** on Saturday, **8th June 2019** at **Sharda Hospital,** Gautam Budh Nagar



**DR. SUBHASH JAIN AKS**
**District Governor 2018-19**











